32°c/25°c

# உதயன்

பக்கம் 24

- பதிப்பு: யாழ்
- விலை: ரூபா 25
- சுடர் 28
- கதிர் 119
- வள்ளுவர் ஆண்டு 2044
- பங்குனி 12 திங்கள் 25.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



## தமிழகம் எங்கும் வீசுகிறது தமிழீழ ஆதரவு அலை

### போராட்டம் ஓயாதென மாணவர்கள் சூளுரை

சென்னை, மார்ச் 25

தமிழீழத் தனியரசுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தமது போராட்டம் ஓயாது என தமிழக மாணவர்கள் அறிவித்துள்ளனர். இந்த நிலையில், ஈழத் தமிழருக்கு ஆதரவாக - இலங்கை அரசைக் கண்டித்து தென்னிந்தியத் திரையுலகமும் கொதித்தெழுந்துள்ளது.

தமிழக மாணவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கும் ஈழத் தமிழருக்கான போராட்டத்தை ஆதரித்து தமிழக இயக்குநர் சங்கத்தினர், சின்னத் திரையினர் களத்தில் குதித்துள்ள நிலையில், இலங்கை அரசுக்கு எதிராக தென்னிந்திய நடிகர் சங்கமும் அடுத்த மாதம் (ஏப்ரல்) 2 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளது.

இலங்கை இறுதிக்கட்டப் போரில் விடுதலைப்புலிகளின் இளைய மகன் பாலச்சந்தி ப. 4

**கமல், ரஜனியும் களத்தில்**

ஏப்ரல் 2ஆம் திகதி திரையுலகம் சார்பில் நடத்தப்படவுள்ள இலங்கை அரசுக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான கமல், ரஜனி ஆகியோரும் தங்கள் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு கலந்து கொள்ளவுள்ளனர்.

# பேச்சுக்குத் தயார்

## நடுவராக சர்வதேசம் வேண்டும்

## சம்பந்தன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

''கடந்த காலங்களில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகளைக் குழப்பியது அரச தரப்புத்தான். இதனால் அதன் மீது எமக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில், விசுவாசமாக - ஆக்கபூர்வமாக - நம்பகத்தன்மையுடன் சர்வதேசத்தை நடுவராக வைத்துக் கொண்டு அரசு பேச்சுகளை ஆரம்பித்தால் நாம் அதில் பங்கேற்போம்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். ப. 4



தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு; சட்டசபையில் தீர்மானம் 8

உதவிகள் தொடரும்; ஜோர்டானில் ஒபாமா 9

வாக்களிக்காத நாடுகளுக்கு தகுந்த பதில் 17

ஆசிக்கு வெள்ளை அடித்தது இந்தியா 23

## பிரபாகரனின் மனைவி, பிள்ளைகளின் உடலங்களை மே 20இல் மீட்டோம்

### பொன்சேகா புதிய தகவல்

கொழும்பு, மார்ச் 25

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனி, மகள் துவாரகா, மகன் பாலச்சந்திரன் ஆகியோரின் உடல்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்டதாக இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ப. 4



## தேர்தல் பணிகள் வடக்கில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் போது வடக்குத் தேர்தல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதில் வடக்கு மாகாணத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு காலம் தாமதிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குபதிலளிக்கும் வகையில் ப. 21

## அடிபணிந்தது அரசு

### ஜெனிவாத் தீர்மானங்களை நிறைவேற்ற இணக்கம்

கொழும்பு, மார்ச் 25

இலங்கை அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்குவோம் என அமெரிக்கா எச்சரித்துள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தில் விதிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் எஞ்சிய பரிந்துரைகளும் நிறைவேற்றப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டன. எஞ்சிய பரிந்துரைகள் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நிறைவேற்றப்பட்டுவிடும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ப. 4

## போர்க்குற்ற காட்சிகளை விற்றவர் கண்டுபிடிப்பாம்

கொழும்பு, மார்ச் 25

வன்னியில் இறுதிப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் மற்றும் ஒளிப்படங்கள் என்பவற்றை வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு வழங்கியவர் என்று சந்தேகிக் ப. 4

## நீதியான போர்க்குற்ற விசாரணை வந்தால் மஹிந்த, கோத்தா மற்றும் 14 பேர் சிக்குவர்

### இந்திய பாதுகாப்பு ஆய்வாளர் ஊகம்

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக எந்தவொரு நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட்டாலும், அதில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் 14 இராணுவ அதிகாரிகள் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று இந்திய பாதுகாப்பு ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில்கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு புதுடில்லியிலிருந்து பாதுகாப்பு ஆய்வாளர் வெங்கட் நாராயண் எழுதியுள்ளதாவது:-

நான்காவது கட்ட ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தனது படைகளால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் குறித்த நம்பகமான சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அனைத்துலக சமூகத்தின் கோரிக்கையை இலங்கை அரசு தொடர்ந்தும் புறக்கணிக்கும் என்று கருதப்படுகிறது.

காரணம், இந்த விசாரணைகள் மூலம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரரும், பாதுகாப்புச்செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ, அவர்களுடன் குறைந்தது 14 மூத்த இராணுவ அதிகாரிகள் வகித்த முக்கியமான பங்கு வெளியாகிவிடும் என்று அரசு அஞ்சுவதாகவும் தெரிவிக்கப் ப. 4

## சிகிச்சைக்கு சென்றவர் சடலமாக மீட்பு

வடமராட்சி, மார்ச் 25

மருதங்கேணி பிரதேச அரசினர் வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலை விடுதிக் கட்டடத்துக்கு அருகில், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

உடுத்துறை வடக்கைச் சேர்ந்த அருமைத்துரை பரிமேலழகன் (வயது-43) என் ப. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு தயாரிக்க மூட்டிய நெருப்பு பற்றியெரிந்து சாம்பலாகியது வீடு

## பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவி

தென்மராட்சி, மார்ச் 25

பகல் உணவு தயாரிப்பதற்கு மூட்டிய நெருப்பினால் வீடு முழுமையாக எரிந்து மோட்டார் சைக்கிள், பாடசாலை உபகரணங்கள் உட்பட பெறுமதியான பொருள்கள் நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியில் இடம்பெற்றது.

மதிய உணவு தயாரிப்பதற்கென அடுப்பில் நெருப்பினைப் பற்ற வைத்து விட்டு அருகில் உள்ள கடைக்கு சென்றுவிட்டதால் அடுப்பிலிருந்து பறந்த தீப்பொறியினால் வீடு முழுமையாக எரிந்து சாம்பலாகியது.

வீட்டினுள் வேறொருவரால் பாதுகாப்புக்காக விடப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபா

**இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியில் இடம் பெற்றது**

பெறுமதியான மோட்டார் சைக்கிள், உடைகள், பாடசாலை புத்தகங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் எரிந்து சாம்பலாகின.

சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட அந்தப் பகுதி கிராம அலுவலர் க.விக்னேஸ்வரராஜா பாதிப்புக்குள்ளான குடும்பத்துக்கு வீடமைப்பதற்கு அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோரிடம் நிதி திரட்டி 17 ஆயிரத்து 500 ரூபா கையளித்தார். (ந-9)

# கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 25

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினருக்கும் பணியாளர்களுக்கும் இடையேயான உறவைப் பேணுவது உள்ளிட்ட தொழில் திணைக்கள நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் கருத்தமர்வு ஒன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரை இதில் கலந்துகொள்ளுமாறு வடமாகாணத் தொழில்திணைக்கள பிரதி ஆணையாளர் கே.தனேஸ்வரன் தெரிவித்தார். (ங-4)

# இந்தியாவுடன் பொருளாதார உறவை இலங்கை துண்டிக்க வேண்டும்

## ஹெல உறுமய, ஜே.என்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 25

இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை இலங்கை அரசு முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென ஹெல உறுமயவும், ஜே.என்.பி.யும் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் அயல்நாடான இந்தியா ஆதரவு அளித்ததன் மூலம் அதன் நட்புறவை வெளிப்படுத்தி விட்டது.

இந்த நிலையில் இலங்கை அரசு இந்தியா மீது கொண்டுள்ள நம்பிக்கையை கைவிட வேண்டும் எனவும் அந்தக் கட்சிகள் வலியுறுத்தி உள்ளன.

அத்துடன் அமெரிக்காவிடம் இருந்து உற்பத்தி பொருள்களை இறக்குமதி செய்வது குறித்தும் அரசு மீள் பரிசீலனை வேண்டுமெனவும் ஜே.என்.பி கட்சி தெரிவித்துள்ளது.

அதிகமான இந்தியர்கள் இலங்கையின் ஊடாக பெரும் பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் நட்புறவு ரீதியில் இந்தியா துரோகம் இழைத்து விட்டது. ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டுமெனவும் ஹெல உறுமய கட்சி கோரியுள்ளது. (ஐ)

# இளைஞர் காயம்

இனம் தெரியாதோரின் தாக்குதலில் இளைஞர் ஒருவர், முகத்தில் காயமடைந்தார்.

சாவகச்சேரியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த ஜி.கிசோர் (வயது-23) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இவர், சாவகச்சேரி நகர சபை உறுப்பினருமாவார். தனிப்பட்ட முரண்பாடு காரணமாகவே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ங-4)

# காசநோய் தினம் நேற்று அனுஷ்டிப்பு

மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில், சர்வதேச காசநோய் தினம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் சி.யமுனானந்தா எழுதிய காசநோய் எனும் நூல் மற்றும் இறுவட்டு என்பன வெளியிடப்பட்டன. (ங-13)

# முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி குறித்து இந்திய சட்டத்தரணிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 25

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து தாம் மிகுந்த கவலை அடைவதாக இந்திய சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து, சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் இந்திய சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளதாவது,

ஷிராணி பண்டார நாயக்க மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்படாமல் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது எமக்கு பெரும் ஏமாற்றமும் அதிருப்தியும் அளிக்கின்றது.

சட்டம் ஒழுங்கு மற்றும் நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இதன்மூலம் நாட்டின் இறைமையை பேண முடியும் என இந்திய சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியா மாவட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளையும் அவர்களின் சமூக பொருளாதார இலக்குகளையும் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதன் அங்குரார்ப்பண வைபவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளாரும், முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் ரவிகரனும், சிறப்புப் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டு, தமது மாவட்டங்களில் பிரஜைகள் குழு அனுபவங்கள் பற்றியும் கருத்துக்களை முன்வைத்தனர்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு :-

காப்பாளர்கள் - பாலசுப்பிரமணியசர்மா கிருஷ்ண குமார குருக்கள், வண.பிதா. வெனோ, தலைவர் மருத்துவம் எஸ்.சத்தியமூர்த்தி, உபதலைவர் - பொ.தனஞ்செயநாதன், செயலாளர் - வே.சிவபாதசுந்தரம், பொருளாளர் - அசோக்குமார் கோகிலாதேவி, நிர்வாகச் செயலாளர் - மருத்துவர் மு.உதயகுமார், மாவட்ட இணைப்பாளர் - கோ.சிறீஸ்கந்தராஜா, வவுனியா பிரதேச இணைப்பாளர்கள் - சோ.ரஜிவர்மன், ரி.கே.ராஜலிங்கம், க.கந்தசாமி, செட்டிக்குளம் இணைப்பாளர் - பொன்.மயில்வாகனம், நெடுங்கேணி இணைப்பாளர்கள் - செ.லெட்சுமிகாந்தன், இ.மயில்வாகனம்.

இவர்களுடன் மூன்று பிரதேச செயலர் பிரிவுக்குமான அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.(ங-ரி-400)

### மாணவர் போராட்ட எதிரொலி

# கேரளாவுக்கு இடம்பெயர்கிறது சென்னை இலங்கைத் தூதரகம்

ஈழத் தமிழருக்காக தமிழக மாணவர்கள் கடல் அலை போல் ஓயாது பொங்கியெழுந்து போராட்டங்களைத் தொடர்ந்து வரும் நிலையில், சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை கேரளாவில் உள்ள திருவநந்தபுரத்துக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஹான் டயஸ், இலங்கைக்கு அழைக்கப்பட்டு நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து இந்த எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொடர்ந்தும் தமிழ் உணர்வாளர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் சென்னையில் உள்ள உதவித் தூதரக அலுவலகத்தில் இருந்து பணியாற்றுவது கடினமான விடயம் என்று ரொஹான் டயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து உதவித் தூதரகத்தை கேரளா திருவனந்தபுரத்துக்கு மாற்றும் யோசனை வெளியிடப்பட்டுள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சென்னையில் உள்ள தமது துணைத் தூதரகத்தை மூடுவது குறித்து இலங்கை ஆலோசித்து வருகிறது என்றும் கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்துக்கு தூதரகத்தை இடம்மாற்றுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆய்வு செய்து வருகிறது என்றும் கொழும்பு ஊடகம் ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழ்நாட்டில் இரு பௌத்த பிக்குகள் தாக்கப்பட விவகாரத்தில் இலங்கையில் எழுந்துள்ள எதிர்ப்பைத் தணிக்கும் வகையில் முன்னணி பௌத்த பிக்குகளை இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா நேற்றுமுன்னதினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

# மூடப்பட்ட தமிழகக் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்படுகின்றன

**மாணவர்கள் அடுத்த கட்டமாக இந்திய அரசுக்கான வரிகொடா இயக்கம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.**

புதுடில்லி, மார்ச் 25

மாணவர்களின் போராட்டங்களை அடுத்து இழுத்து மூடப்பட்டிருந்த தமிழகத்தின் அரசுக் கல்லூரிகள் இன்று மீள தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கல்லூரிகள் தொடங்கினாலும் வடிவங்களில் மாற்றம் செய்யப்பட்டு போராட்டம் தொடரும் என்று தமிழக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையில், தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்காத மத்திய அரசு மற்றும் அரசியல் கட்சிகளை எதிர்த்து, தமிழகத்தில், கல்லூரி மாணவர்கள், தொடர் போராட்டத்தில், ஈடுபட்ட நிலையில் தமிழகத்தின் அரச கல்லூரிகள் கால வரையின்றி மூடப்பட்டன.

தற்போது நிலைமை சீராகி உள்ளதை அடுத்து, இன்று கல்லூரிகள் திறக்கப்படும் என உயர் கல்வித் துறை அறிவித்துள்ளது. எனினும் பொறியியல் கல்லூரிகள் திறக்க்படுவதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக போராடும் தமிழ்நாட்டு கல்லூரி மாணவர்கள் அடுத்த கட்டமாக இந்திய அரசுக்கான வரிகொடா இயக்கம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர். (ஐ)

# இருதய நோய் மருத்துவமுகாம் மன்னாரில்

பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் ஏற்பாட்டில் மன்னார் வைத்தியசாலையில் இலவச இருதய நோய் மருத்துவமுகாம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மன்னார் வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

வன்னி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் தளபதியும், இடம் பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் பிரதம அதிகாரியும் சிங்க ரெஜிமண்ட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவின் ஆலோசனையின் பேரிலேயே இந்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் கொழும்பு தேசியவைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் கலந்தகொள்ளவுள்ளனர். (ங-400-12)

# ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை மோசடி

## 8 வெவ்வேறு சம்பவங்களில்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

யாழ்.குடாநாட்டில் வெவ்வேறு 8 சம்பவங்களில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்த வாரம் முறைப்பாடு பதிவாகியுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் 86 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டமை தொடர்பிலும் 16 இலட்சத்து 13 ஆயிரத்து 376 ரூபா பண மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலுமாக மொத்தம் ஒரு கோடி ரூபா மோசடி குறித்து முறையிடப்பட்டுள்ளது.

கொக்குவில், நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து வாகனமொன்றைப் பெற்று 23 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரைச் சேர்ந்தவரிடம் 36 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்தமை தொடர்பில் ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். ஜ9ம்மா ஒழுங்கையில் வசிக்கும் ஒருவர் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். [illegible] கடையில் பணியாற்றும் ஒருவர் 3 இலட்சத்து 63 ஆயிரத்து 376 ரூபா பண மோசடி செய்தமை தொடர்பில் கைதாகியுள்ளார்.

ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த இரண்டு பேர் 17 இலட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஒருவரிடமிருந்து 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவைப் பெற்று மோசடி செய்தமை தொடர்பில் அல்வாயைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

நெல்லியடியில் பால்மாவைக்கற்றுகளை கொள்வனவு செய்து 6 இலட்சத்து 63 ஆயிரத்து 83 ரூபா காசோலை மோசடி செய்தமை தொடர்பில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர் திக்கத்தைச் சேர்ந்தவர்.

அல்வாயைச் சேர்ந்த ஒருவர் 8 இலட்சம் ரூபா பணத்தை கைமாற்றாகப் பெற்று திருப்பிக் கொடுக்காது மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 30 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பெறுமதியுடையது என்று கூறி போலியான காசோலைகளை இரண்டு பேருக்குக் கொடுத்தமை தொடர்பிலும் இரண்டு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அல்வாய் கிழக்கு மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதிகளிலிருந்து இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேற்றுக் காலை திடீரெனக் குடாநாட்டில் பெய்த மழையால் சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் தேங்கிய வெள்ளக் காட்சி. (ம-9)

# யாழ்.ஆஸ்பத்திரி புதிய கட்டடத்தில் ஒன்பது சத்திர சிகிச்சைப் பிரிவுகள்

## ஆனால் மலசலகூட வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 25

*யாழ். போதனா வைத்தியசாலையில் ஜெய்க்கா திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியில் 9 சத்திர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள போதும், ஒரு பிரிவில் கூட மலசலகூடம் இல்லை. இதனால் சத்திர சிகிச்சைப் பிரிவினர் விசனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஒரு பிரிவில் கூட உடை மாற்றும் அறைகளும் இல்லை. இதனால் தாம் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.*

அந்தக் கட்டடத் தொகுதியில் ஒரே மாடியில் 9 சத்திர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒவ்வொரு சத்திர சிகிச்சைப் பிரிவிலும் மலசலகூட வசதி, உடை மாற்றும் அறைகள் தனித்தனியே அமைக்கப்பட்டிருக்கும்.

சத்திரசிகிச்சை விடுதியில் மருத்துவர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கு ஆண், பெண் என்ற தனித்தனி விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

சத்திர சிகிச்சைப் பிரிவினருக்கு என்று தனியான மலசலகூட வசதியும் செய்யப்பட்டிருக்கும். ஆனால் இங்கு இவை எதுவும் இல்லை.

ஒவ்வொரு மாடியிலும் நோயாளர் உட்பட அனைவருக்கும் பொதுவான மலசலகூடமே உள்ளது.

வைத்தியசாலையில் ஏற்கனவே இருந்த சத்திர சிகிச்சைப் பிரிவில் இத்தகைய வசதிகள் உள்ளன. கட்டட நிர்மாணத்தின் போது தேவையான வசதிகளை பொறுப்பானவர்கள் கோரியிருக்கவில்லை என்றும் சத்திரசிகிச்சைப் பிரிவினர் குற்றம்சாட்டியுள்ளனர். அத்தகைய வசதிகளை விரைவில் ஏற்படுத்தித் தருமாறும் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

ஜெய்க்கா திட்ட கட்டட நிர்மாணம் சிலவருடங்களாக தொடர்ந்தும் கட்டடப் பணிகள் இடம்பெற்று நிறைவு பெற்றுள்ளது.

அதுவரையான காலத்தில் கட்டட நிலைமை மற்றும் தேவைகள் குறித்து மாதாந்தம் கூட்டம் ஒன்று வைத்தியசாலையில் நடைபெற்று வந்தது.

அதில் மருத்துவ நிபுணர்கள் இரண்டு பேர் தவறாது கலந்துகொண்டு வந்தனர். ஆனால் மலசலகூட, உடை மாற்றும் அறைகள் குறித்து அந்த நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருக்கவில்லை.

அதுவே இந்த நிலைக்குக் காரணம். ஒருவருடத்துக்கு அந்தக் கட்டடத்தில் எந்தவித கட்ட மீள் அமைப்பு பணியும் மேற்கொள்ள முடியாது. அதன் பின்னரே வசதிகள் செய்ய முடியும்-என்றார். (ம-4)

# நன்னீர் மீன்பிடி அபிவிருத்திக்கு விசேட நடவடிக்கைகள் மும்முரம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நன்னீர்த் திட்டத்தைமேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஜி.பி.எஸ். கருவி மூலம் நன்னீர் இருக்கும் இடங்களை கண்டறிவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் பி.தமீந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் அதிகரித்து வரும் வெப்ப நிலையில் நீர் நிலைகள் வற்றிப் போகும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் கரையோரம் தீவகப் பகுதியில் உள்ள கிணறுகளும் உவர்நீர் தன்மைக்குள்ளாகியுள்ளன.

இந்த கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல. அந்த மக்கள் குழாய் மூலம் கிடைக்கும் நீரையே நம்பி உள்ளனர்.

அவர்களுக்கான நன்னீரை வழங்குவது தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பினது கடமையாகும்.

மேலதிக நீரை வழங்குவதற்கான நவீன கருவிமூலம் ஜி.பி.ஸ். கருவியால் குடிதண்ணீர் இருக்கும் இடங்களை கண்டறிந்து அந்தப் பகுதியில் குழாய் மூலம் நீரை பெற்றுக் கொண்டு நீர்தாங்கியில் நிரப்பப்படுகின்றது.

இந்தத்திட்டம் வேலணை, ஊர்காவற்றுறை, வேம்பிராய், கைதடி, சூராவத்தை, சுன்னாகம், வல்வெட்டித்துறை, கரவெட்டி, அராலி ஆகிய பிரதேசங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரே பகுதியில் தொடர்ந்து நீரை பெற்றுவந்தால் அந்தப் பகுதி நீர் உவர் நீராக மாறும் சந்தர்ப்பம் உண்டு. அதனால் பரிசோதிக்கப்பட்டு நீரை பெற்று வழங்கி வருகிறோம் என்று மேலும் தெரிவித்தார். (ம-13)

# வீடு உடைத்துத் திருட்டு

வலி வடக்கு, மார்ச் 25

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி நாவாந்துறையில் உள்ள வீடொன்று இனம் தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு சுமார் எண்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி முறையிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான புலன் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில் இது சம்பந்தமான அறிக்கை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள கடையொன்று உடைக்கப்பட்டு இருபதாயிரத்தி முன்நூற்றி நாற்பது ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில்முறையிடப்பட்டுள்ளது.

இரவு கடையை பூட்டி விட்டுச் சென்றதாகவும் அடுத்த நாள் காலையில் வந்து பார்த்த வேளையில் கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டு இருந்ததாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-86)

# யாழ்.மாநகர சபையின் நிலையியல் குழுவில் எதிரணி

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். மாநகர சபையின் நிலையியற் குழு தொடர்பாக மாநகர சபையின் ஆளும் கட்சியினருக்கும் எதிரணியினருக்கும் இடையில் இருந்து வந்த முரண்பாடு நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட சமரசத்தை அடுத்து நிலையியற் குழுவில் எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இடம்பெற்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாக இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்பட்டன.

நிலையியற் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் விவகாரம் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டியிருக்கும் என்று எதிரணியினர் தெரிவித்திருந்தனர்.

இதனிடையே இந்த விடயம் தொடர்பாக எதிரணியினர் ஆளுநரிடம் முறைப்பாடு தெரிவித்திருந்தனர். ஆளுநர் இது குறித்து முதல்வருடன் தொடர்பு கொண்டதை அடுத்து ஆளும்கட்சி உறுப்பினர் சிலர் தாங்கள் நிலையியல் குழுவில் இருந்து விலகுவதாக முதல்வரிடம் கடிதங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

நிலையியற் குழு விவகாரம் மீண்டும் நேற்று முன்தினம் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. முதல்வர் ஏற்கனவே பெற்று வைத்திருந்த இராஜினாமா கடிதங்களைச் சபையில் சமர்ப்பித்து, எதிரணியினர் தமது பகுதியில் இருந்து குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம் என்று கூறினார்.

இந்த விடயத்தில் சட்ட நடிவடிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது தீர்வு காண்பதற்கு இடையில் சபையின் காலம் நிறைவடைந்து விட்டமை எனக் குறிப்பிடப்பட்டது. அத்துடன் சமரசமாக இந்தப் பிரச்சினையை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் சுமுகமான முடிவை ஏற்படுத்துவோம் எனவும் குறிப்பிட்டார்.

எதிரணியினரும் அதனை ஏற்றுக் கொண்டு தமது கட்சிக்கான உறுப்பினர்களின் பெயர்களைத் தெரிவு செய்தனர். (ம-7-17)

# ஓய்வூதியர் நலத் திட்டங்களை முன்னெடுக்க மூன்று கோடி ரூபா நிதி நிலையான வைப்பில்

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கை அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் தற்போது 3 கோடி ரூபா நிதி நிலையான வைப்பில் சேமிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு எதிர்காலத்தில் ஓய்வூதியர்களுக்கான நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஆர். எம்.ஜே.ரணதுங்க தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் நம்பிக்கை நிதியக் கிளைகளைச் சேர்ந்த தலைவர் மற்றும் செயலாளர், பொருளாளருக்கான கலந்துரையாடல் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நம்பிக்கை நிதியத்தின் செயற்திட்டங்கள் மற்றும் பெறக்கூடிய அனுகூலங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் 2001 ஆம் ஆண்டு தாய்ச் சங்கமாக கொழும்பில் அமைக்கப்பட்டபோதும் 2002 ஆம் ஆண்டு மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் விரிவு படுத்தப்பட்டது.

இந்தச் சங்கத்தில் அங்கத்தவர்களிடம் பெறப்படும் அங்கத்துவப் பணம் மற்றும் ஏனைய வருமானங்களில் இருந்து தற்போது 3 கோடி நிதியை நிலையான சேமிப்பாக நம்பிக்கை நிதியம் பேணி வருகிறது.

இந்த நிதி தேவைகளின் அடிப்படையில் வெவ்வேறு கணக்குகளில் 15 கணக்குகளை இதுவரை ஆரம்பித்துள்ளது.

இந்தக் கணக்குகள் மக்கள் வங்கி, சணச வங்கி தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கிகளில் நிலையான வைப்பில் சேமிக்கப்பட்டுள்ளது.



இந்த நிதியூடாகக் கிடைக்கக்கூடிய வட்டி வீதம் கடந்த 4,5 வருடங்களுக்கு அதிகம் கிடைக்கப்பெற்றாலும் தற்போது மிகக் குறைந்த வட்டியே கிடைக்கப்பெறுகிறது.

இதனைவிட ஓய்வூதியர்களில் மரணதாரர்களுக்கான விசேட கணக்கில் 22 இலட்சம் ரூபா சேமிப்பில் போடப்பட்டுள்ளது. இந்தச் சேமிப்பில் நிதியில் அங்கத்தவராக இருந்தவரின் மரணப் பணிக்கொடையாக கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.- என்றார்.

ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். மாவட்ட கிளைச் செயலாளர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலகங்களின் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-14-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிபணிந்தது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

22ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நிர்ப்பந்தங்களுக்கும் அழுத்தங்களுக்கும் அரசு அடிபணிந்து விடாது என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசுக்குக் கால அவகாசம் தேவை. எனினும் 2014இல் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு இடம்பெறுவதற்கு முன்னர் இந்நிறைவேற்றம் சாத்தியப்பட்டு விடும் என தான் நம்புகிறார் என் றும் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில், இலங்கை மீது -சர்வதேச ரீதியிலான நடவடிக்கை எடுக்க நேரிடும் என கடந்தவாரம் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கை சர்வதேச சமூகத்தின் சொல்லுக்குச் செவிமடுக்க வேண்டும். இதுவரை தன்னால் நிறைவேற்றப்படாத திட்டத்தையும் இலங்கை நிறைவேற்ற வேண்டும் என அமெரிக்க வெளிவிகார அமைச்சின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எய்லின் சேம்பர் லெய்ன் டொனாஹோ இது குறித்து குறிப்பிடுகையில், ''இலங்கை மக்களுக்காக, சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்ற ஓர் ஆவணமாக இத்தீர்மானத்தை நோக்க வேண்டும். இது இலங்கை அரசை ஊக்குவிப்பதற்கான தீர்மானமாகும்'' எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இலங்கையில் நிரந்தரமான சமாதானமும், நல்லிணக்கப்பாடும் நிலவ வேண்டும். அத்துடன் உண்மையான பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை மேற்கொள்ள அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளையும் இலங்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ங-சி)

## நீதியான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படுகிறது. நாசிகளுக்கு எதிரான நூரன்பேர்க் விசாரணை மற்றும் கம்போடியா, ருவான்டா, யூகோஸ்லாவியா, சியராலியோன், லெபனான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து நடத்தப்பட்ட ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகளின் போது, அதற்குப் பொறுப்பான உயர்மட்ட அரசியல் மற்றும் இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

அதுபோன்று இலங்கையிலும் சுதந்திரமான விசாரணை நடைபெற்றால், அவ்வாறான சிக்கல்கள் வரலாம் என கருதப்படுகிறது.

இவர்கள் தவிர கூட்டுப்படைகளின் தளபதி எயர் மார்சல் டொனால்ட் பெரேரா, போரின் போது இராணுவத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விமானப்படைத் தளபதி றொசான் குணதிலக ஆகியோரும் விசாரிக்கப்படக் கூடும்.

மேலதிகமாக, அப்போது 53ஆவது டிவிசன் தளபதியாக இருந்த பிரிகேடியர் கமால் குணரத்ன, 55ஆவது டிவிசன் தளபதியாக இருந்த பிரிகேடியர் பிரசன்ன சில்வா, 57 ஆவது டிவிசன் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜெகத் டயஸ், 58வது டிவிசன் தளபதியாக இருந்த பிரிகேடியர் சவேந்திர சில்வா, 59வது டிவிசன் தளபதியாக இருந்த பிரிகேடியர் நந்தன உடவத்த, அதிரடிப்படை - 1 இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் றோகண பண்டார, அதிரடிப் படை - 2 இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் சத்யப்பிரிய லியனகே, அதிரடிப்படை-8இன் தளபதியாக இருந்தவரும், உண்மையில் பிரபாகரனைக் கொன்றவருமான கேணல் ஜிவி ரவிப்பிரிய ஆகியோரும் இந்த விசாரணையை எதிர்கொள்வர்.

டிவிசன்களின் தளபதிகளான இவர்கள், தப்பிப்பதற்கான எல்லா வழிகளையும் மூடி, வன்னியில் ஓரிடத்தில் சிக்க வைத்து விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு காரணமாக இருந்தவர்கள்.

ஈழப்போரின் மீறல்கள் குறித்த விசாரணைகளில் திருப்தி கொள்ளும் வரை அனைத்துலக சமூகம், நீதி, நியாயமான நம்பகமான விசாரணைகளைக் கோரும் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போர்க்குற்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்படும் ஒருவரை தாம் கண்டறிந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது, தொலைக்காட்சி ஒன்றின் ஊடகவியலாளராகக் களமுனைகளில் பணியாற்றியவர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர் தற்போது இலங்கையிலிருந்து வெளியேறி தனது குடும்பத்துடன் வெளிநாடு ஒன்றில் வசித்துவருகிறார். இவர் இலங்கையில் இருந்து பணியாற்றிய காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் பாதுகாப்பு தரப்பிலிருந்து தகவல் வெளியாகி உள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை குருநாகல் போயகலவில் இராணுவ நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஊடகவியலாளர் ஒருவர் டொலர்களுக்கு விலை போயுள்ளதாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரன் உயிரோடு பிடிக்கப்பட்டு பின்னர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஒளிப்படங்கள் வெளியாகி உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதையடுத்து தமிழக மாணவர்கள் தமிழருக்கு தனி ஈழம் வேண்டும் என பொங்கி யெழுந்து குமுறி வெடித்தனர். சென்னை மாணவர்கள் ஆரம்பித்து வைத்த இந்தப் போராட்டம் இன்று தமிழகத்தையும் தாண்டி புலம் பெயர் தேசமெங்கும் காட்டுத் தீ போல் பரவியுள்ளது. நேற்றும் தமிழகத் தின் பல்வேறு பகுதிகளில் மாண வர்களின் அகிம்சை ரீதியான போராட்டங்கள் தொடர்ந்தன. மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டு இன்று பல்கலைக்கழக விடுதிகள் திறக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டபோதும் அதனை மாணவர் தரப்பு மறுத்துள்ளது. ஈழத் தமிழர் களை கொன்றுகுவித்த இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேசம் உறுதிமொழி வழங்கும்வரை தமது போராட்டம் ஓயாது என்று மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் பல்வேறு நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அடுத்த கட்டமாக, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கைக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில், அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் இந்தியா உள்ளிட்ட பெருவாரியான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

இதையடுத்து, இலங்கையின் அட்டூழியங்களுக்கு எதிராகத் தமிழ்த் திரையுலகமும் கொதித்தெழுந்திருக்கிறது. தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசைக் கண்டித்து தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே கடந்த செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

அதில், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் (பெப்சி), சின்னத்திரை கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இதைத்தொடர்ந்து, இலங்கை அரசுக்கு எதிராக தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 2 ஆம் திகதி உண்ணாவிரத போராட்டம் நடைபெற இருக்கிறது. சென்னை தியாகராயநகர் அபிபுல்லா வீதியில் உள்ள நடிகர் சங்க வளாகத்தில், 2 ஆம் திகதி காலை 9 மணி தொடங்கி மாலை 6 மணி வரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற இருக்கிறது.

இதில், ரஜனிகாந்த், கமல் ஹாசன் உட்பட அனைத்து நடிகர் - நடிகைகளும் பங்கேற்கிறார்கள்.

உண்ணாவிரதத்தையொட்டி, அன்றைய தினம் படப்பிடிப்புகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுகின்றன. வெளியூர்களில் நடைபெறும் படப்பிடிப்புகளையும் இரத்துச் செய்துவிட்டு, சென்னையில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளும்படி நடிகர்- நடிகைகளை நடிகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (ங-சி)

## பிரபாகரனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தில்-நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை முதல் முறையாக வெளியிட்டுள்ளதாக இந்திய செய்தியாளர் ஒருவர் தனது கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

அந்தச் சந்திப்பில், பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இலங்கைப் படைகளால் கொலை செய்யப்பட்டாரா என வினவப்பட்டது. அதற்கு சரத் பொன்சேகா, பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனை தனது படையினர் கொல்லவில்லை என்று அவர் நிராகரித்தார்.

எனினும் பிரபாகரனின் மனைவி மதிவதனி, 20 வயதான அவரது மகள் துவாரகா, இளைய மகன் பாலச்சந்திரன் ஆகியோரின் உடல்கள் போர் முடிவுக்கு வந்த பின்னர், 2009 மே 20 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டன என்று அவர் நினைவு கூர்ந்தார்.

பிரபாகரனின் உடல் மீட்கப்பட்ட மறுநாள், தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நந்திக் கடல் பகுதியில் இந்த உடல்கள், கண்டுபிடிக்கப்பட்டன.

இவை தவிர நீரேரிப் பகுதியில் விடுதலைப் புலிப் போராளிகளின் 150 வரையான உடல்களும் கூட மீட்கப்பட்டன.

பிரபாகரனின் மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரனியின் உடல் கரையா முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் 2009 மே 18ஆம் திகதி மீட்கப்பட்டது.

இதன்போது மூத்த தலைவர்களான புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் பா.நடேசன், புலித்தேவன், மூத்த களமுனைத் தளபதி கேணல் ரமேஸ் ஆகியோரின் உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சம்பவங்களுக்கு முதல் நாள், போர் தவிர்ப்பு வலயத்தில் தொடர்ச்சியாக பெரும் குண்டு வெடிப்பு சத்தங்கள் கேட்டன. பெரும்பாலும் அவர்கள் தமது உயிர்களை தாமாகவே மாய்த்துக் கொண்டிருக்கக் கூடும். கேட்ட சத்தங்கள் அவர்கள் தங்களை மாய்த்துக்கொள்வதற்காக வெடிக்க வைத்த குண்டுகளாக இருக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டதாக அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரபாகரனின் மனைவி மதிவதனி, மகள் துவாரகா, இளைய மகன் பாலச்சந்திரன் ஆகியோர் தொடர்பில் தமக்குத் இதுவும் தெரியாது. அவர்கள் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று இலங்கை அரசு போர் முடிவுற்ற சில நாள்களின் பின்னர் கூறியிருந்தது.

இந்தநிலையில், பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படையினரால் கொல்லப்பட்ட நிலையில் காணப்படும் ஒளிப்படம் வெளியானது.

இதையடுத்து பாலச்சந்திரன் காவலரண் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒளிப்படங்களை சனல் 4 வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில், பிரபாகரனின் மனைவி, மதிவதனி, மகள் துவாரகா ஆகியோரும் போரின் முடிவில் கொல்லப்பட்டு விட்டதாக இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடந்த புதன் கிழமை இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளதாகவும் இந்திய ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## சிகிச்சை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர். காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவர் குறித்த வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருக்கு அடிக்கடி வலிப்பு நோயும் ஏற்படுவதுண்டு. இதனால் இவரை மேலதிகச் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மாற்ற மருத்துவர்கள் முயற்சித்த போதும், அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார். இதனால் அவருக்கு அங்கேயே தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அவரைப் பார்வையிடுவதற்காக உறவினர்கள் நேற்றுக் காலை வைத்தியசாலைக்கு வந்தனர். அப்போதே குறித்த நபர் வைத்தியசாலை வளாகத்துக்குள் முகம் குப்புறக் கவிழ்ந்த நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். இவரின் மரணத்துக்கு வைத்தியசாலையின் கவனயீனமே காரணம் என்று அவரது உறவினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

இதுதொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

பிரஸ்தாப நோயாளியை நோயாளர் விடுதியில் தங்குமாறு வைத்தியசாலைத் தரப்பினர் கூறியிருந்தனர். எனினும் அவர் அடிக்கடி வைத்தியசாலைக்கு வெளியே சென்று, விடுதிக்கு வெளியிலேயே உறங்கியுள்ளார். சிகிச்சை பெறும்போதுகூட இவர் மதுபானம் அருந்தி வந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. எனவே இறப்புக்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். - என்றார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா, மரண விசாரணை மேற்கொண்டு, உடற்கூற்றியல் பரிசோதனைக்குப் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைக்கான சாட்சியங்களை முன்னிலைப்படுத்தினர். (ங-4-8-253)

## பேச்சுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாட்டில் இனப்பிரச்சினை தொடர தாம் விரும்பவில்லை எனவும், அதற்கு மிக விரைவில் சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டும் பொருட்டு இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாவதற்கும், மத்தியஸ்தம் வகிப்பதற்கும் உதவ தென்னாபிரிக்காவோ அல்லது ஏனைய மூன்றாம் தரப்போ முன்வருமானால் அதற்கு பூரண ஒத்துழைப்பு அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபட் ஓ பிளேக் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் வடக்குத் தேர்தலை நடத்தி, அதிகாரங்களைப் பகிர்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று மாலை 'உதயன்' வினவியது.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

''இந்த நாட்டில் பல தசாப்தங்களாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற நாம் அரசுடன் விசுவாசமாக பேச்சு நடத்தச் சென்றோம். ஆனால், பல சுற்றுகளில் நடந்த அந்தப் பேச்சுகள் அனைத்தையும் பயனற்றதாக்கி, வட மாகாணசபைத் தேர்தலையும் இழுத்தடித்து எம்மை ஏமாற்ற முனைந்தது அரசு. இந்த நிலையை உணர்ந்துகொண்ட நாம் பேச்சிலிருந்து வெளியேறினோம். அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்தோம்.

ஆனால், பேச்சைக் குழப்பியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனவும், அது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்க வருகின்றதில்லை எனவும் சர்வதேச நாடுகளுக்குப் பொய்களை அள்ளிவீசி வந்தது இந்த அரசு. தற்போதும் இதனையே செய்துவருகின்றது. ஆனால், நாம் ஏற்கனவே உண்மை நிலவரத்தை பல தடவைகள் இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளிடம் தெரிவித்துள்ளோம். அரசு நம்பகத்தன்மையுடன் பேச்சுகளை ஆரம்பித்திருந்தால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நாம் பங்கேற்றிருப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளோம்.

இந்நிலையில், இனப்பிரச்சினை அரசியல் தீர்வுப் பேச்சுகளை இலங்கை அரசு - தமிழ்க் கூட்டமைப்பு மீண்டும் ஆரம்பிக்க மத்தியஸ்தம் வகிப்பதற்கு சர்வதேச நாடுகள் முன்வந்தால் தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது. அத்துடன், செப்ரெம்பர் மாதத்துக்குள் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு தமிழருக்கு அதிகாரங்களை அரசு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதிலும் அமெரிக்கா குறியாகவுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக [illegible] கடந்த வாரம் ஜெனிவாவில் நிறைவேற்றிய அமெரிக்கா, இலங்கையில் அரசு - கூட்டமைப்பு பேச்சு தொடர்பில் தற்போது தமது நிலைப்பாட்டையும் வெளியிட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம்.

எனவே, விசுவாசமாக - ஆக்கபூர்வமாக - நம்பகத்தன்மையுடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்தால் நாம் அதில் பங்கேற்போம். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் நாம் காலத்தை இழுத்தடிக்க விரும்பவில்லை. சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதுவே தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாகும்'' - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன்.

இதேவேளை, இலங்கை அரசு - தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் அரச தரப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்பதற்காக பேச்சுக்குழுவின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவிடம் தொடர்புகொண்டு கேட்பதற்கு நேற்றுப் பல தடவைகள் முயன்றபோதும் அவை பலனளிக்கவில்லை. (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:
மின் அஞ்சல்
செய்தி :
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com

# அனைத்துலகம் யார் நமக்கு என்ற போக்கில் அரசாங்கம்

காணாமற்போனோரின் உறவுகளை உறைய வைக்கும் தகவல் ஒன்றை மூன்று வருடங்களுக்கு மேலாக ஒழித்து வைத்த இந்நாட்டு அரசாங்கம்-

ஐந்து மாதங்களுக்கு முன்னர் முப்பத்தேழு பேரின் பெயர் விவரங்களை கடந்த ஒக்டோபர் மாதத்தில் ஜெனிவா மனித உரிமைகள் குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டமை இப்போது வெளிப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின், பலவந்தமாக அல்லது தன்னிச்சையாகக் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைக் குழுவின் செயலாளர் மூலம் இலங்கையரசின் இந்த மூடிமறைப்பு அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

வன்னியில் நடைபெற்ற இறுதிப்போரின் போதும் அதற்கு முன்னரும் பல ஆயிரக்கணக்கானோர் காணாமற் போனது குறித்து அவர்களின் உறவினர்கள், உரிய தகவல்களை அறியமுற்பட்ட போதிலும் மௌனம் சாதித்தது அரசு. அவர்கள் அது நாடி நடத்திய போராட்டங்களை முறியடித்த அரசின் மூடிமறைப்பில் ஒரு துளி இப்போது வெளிவந்துள்ளது.

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று 2012 இல் நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானம் கூறுகிறது. ஆனால் அவர்களைக் கண்டுபிடிக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஜெனிவாத் தீர்மானத்தின் பின்பும் பலர் காணாமற் போயுள்ளனர். ஆனால் போர் நடைபெற்ற காலத்திலும் சரி அதற்குப் பிற்பட்ட காலத்திலும் சரி பொதுமக்கள் எவரும் காணாமல் போகவில்லை என்று அரசு சர்வதேசத்திடம் அடித்துக் கூறிவந்தது.

காணாமற்போனோர் குறித்து தனது அமைப்புக்கு 5 ஆயிரம் பேர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று கூறுகிறார் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரன். ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இவர்களில் 3 ஆயிரம் பேர் தொடர்பான விவரங்கள் மேற்படி அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியோரின் விவரங்களை அனுப்புவதற்கு காணாமற்போனோரைக் கண்டறியும் குழு நடவடிக்கை எடுத்துவருகிறது என்பது தகவல்.

இத்தகைய நிலையில், காணாமற்போனோர் பட்டியலில் உள்ளோரில் 37 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அறிவித்துள்ளது. இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறித்து இலங்கை அரசு இவர்களது குடும்பத்துக்கு இதுவரை தெரிவிக்கவில்லை. தற்பொழுது திடீரென்று 37 பேரின் பெயர்களை அனுப்பி இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிப்பது ஜெனிவாத் தீர்மானத்தைக் கேலிக்கூத்தாக்கும், அப்பட்டமாக்கும் நடவடிக்கையாகும்.

இந்த விவரம் இதுவரை இலங்கையில் உள்ள உறவினர்களுக்குத் தெரியப்படுத்தப்படாமல் மறைக்கப்பட்டிருந்த நிலையில் அம்பலமாகியிருக்கிறது. இது சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல் அன்றி வேறல்ல.

37 பேர் போக எஞ்சியோருக்கு என்ன நடந்தது என்பதை அரசு வெளிப்படுத்தவேண்டும். அவர்கள் இரகசிய முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனரா? அப்படியானால் அவர்களுக்கு என்ன நடந்தது? போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கைக்கு அனைத்துலக மட்டத்தில் களங்கம் ஏற்பட்டுள்ளது. மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத நாடு என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை மேம்பாடு குறித்து அரசு ஐ.நா. உட்பட பல்வேறு தரப்புகளுக்கு வாக்குறுதி அளித்து வருகிறது. எனினும், இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இலங்கை, மனித உரிமைகளைப் பேணாத நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 5 ஆயிரம் பேர் என்பது ஒரு சிறிய எண்ணிக்கையல்ல. இலங்கை அரசு இதனை அலட்சியம் செய்யமுடியாது. காணாமற் போனோரைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அரசுக்கே உண்டு. 5 ஆயிரம் பேர் காணாமல் போன இடத்தில் 37 பேரின் பெயர்களை மட்டும் தெரிவித்திருப்பது கேலிக்கிடமானது.

அனைத்துலகத்துக்கு எழுத்து மூலமும் வாய் மூலமும் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசும் அதன் தலைவர்களும் தயங்குவது ஏன்? பின்னடிப்பது ஏன்?

போர் என்ற சுலோக அட்டையைக் கையில் ஏந்திக் கொண்டு, சிறுபான்மை மக்களை எதுவும் செய்யலாம் என்ற புதிய வாய்ப்பாட்டை எழுதவே அரசு முனைகிறது. அனைத்துலகம் நமக்கு யார் என்ற மமதையின் பிரதிபலிப்பு இது எனலாம்...

# ஊடகவியலாளர் பாதுகாப்புக் குறித்து பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பர்

## பிரதம பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா தெரிவிப்பு

வலி வடக்கு, மார்ச் 25

யாழ். மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு பாதிப்புகள் அச்சுறுத்தல்கள் ஏற்படுமாக இருந்தால் அது குறித்து பொலிஸார் போதிய பாதுகாப்பை எந்த நேரத்திலும் வழங்கத் தயாராக உள்ளனர்.

அத்துடன் உரியவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்.

யாழ். பொலிஸ் நிலைய தலைமைப்பீட பிரதம பொலிஸ் பரிசோதகர் சமன்சிகேரா இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக் காலமாகப் பத்திரிகையாளர்கள் மீது இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடனேயே இவ்வாறான செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் மிகவும் இறுக்கமான முறையில் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-86)

# சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் முன்மாதிரியைப் பின்பற்றக் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 25

பிரசவத் தாய், சிசு ஆகியவற்றின் மரணங்களைத் தடுக்க சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போன்று ஏனைய பிரதேச வைத்தியசாலைகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொது மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை பிரசவ விடுதியில் குழந்தை பிறந்த விடயம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக அந்தப் பிரிவு குடும்பநல சேவையாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

குடும்பநல சேவையாளர் அன்றைய தினமே அவர்களது வீட்டுக்குச் சென்று பிரசவத் தாயையும் சிசுவையும் வைத்துப் பராமரிக்கும் இடத்தைப் பார்வையிட்டு சுகாதார வசதிகளை மேற்கொள்ளும் முறைகளை அங்குள்ளவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.

அத்துடன் வைத்தியசாலையில் இருந்து தாயும் பிள்ளையும் வீட்டுக்கு வரும்போது அங்கு நின்று அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுப்பார். அத்துடன் பிரசவத் தாய்க்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் முதல் 15 தினங்களுக்கு ஒன்று விட்டு ஒரு நாள் (வாரத்தில் மூன்று நாள்கள்) குடும்ப நல சேவையாளர் அந்த இடத்துக்குச் சென்று குழந்தையையும் தாயையும் பார்வையிட்டு தேவையான ஆலோசனைகளையும் பராமரிப்புக்களையும் மேற்கொண்டு வருகிறார்.

இதனால் தென்மராட்சிப் பிரதேசத்தில் சிசு, பிரசவத் தாய் மரணம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற செயற்பாடுகளை அனைத்து வைத்தியசாலைகளிலும் மேற்கொண்டால் தாய், சேய் மரணங்கள் குறைவடைய வாய்ப்பு உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டுப் போட்டி

வடமராட்சி, மார்ச் 25

சைவத்தமிழ் அறிஞர் சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 107 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதலாம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரையான மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, பண்ணிசை, மனனப் போட்டிகள் நடத்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதல் வாரத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு 19 ஆம் திகதி நடைபெறும் குருபூசை விழாவில் வைத்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இதற்கு முன்னதாக இன்று திங்கட்கிழமை மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் சதாவதானியின் குருபூசை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-8)

# வளிமண்டலவியல் திணைக்கள வெற்றிடங்களுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு சிற்றூழியர் மற்றும் சாரதிகளுக்கு நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அதன் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

சிற்றூழியர்கள் சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சாரதிகள் தரம் 9 வரை பாடசாலைகளில் கற்றிருத்தல் வேண்டும். தவிர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4)

# விழிப்புலனற்றோருக்கு தனியான கட்டடம் அமைக்கக் காணி வசதி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25

கண்பார்வையற்ற முதியோர்களை பராமரிப்பதற்கு தனியாக கட்டட வசதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான காணி வசதி இன்மையே காரணம். ஆகவே இதற்கான கட்டடம் அமைக்க முடியாத நிலைமை உள்ளது. நலன் விரும்பிகள் யாராவது முன்வந்து இதற்கான காணியைத் தந்து உதவுமாறு விழிப்புலனற்றோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உப தலைவர் வி.கனகசபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் கண் பார்வை அற்ற முதியோர்களை தனியான விடுதியில் வைத்து பராமரிப்பதற்கு எமது சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென யாழ்ப்பாணத்தின் ஏ-9 பிரதான வீதியில் கட்டடம் ஒன்றை அமைத்து அதில் கண் பார்வை அற்ற முதியோர்களை பராமரிப்பதற்கு சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்தக் கட்டட வசதிக்கான காணியை யாரும் நலன் விரும்பிகள் அன்பளிப்பாகவோ அல்லது குறைந்த விலையிலோ எமக்கு தந்தால் உதவியாக இருக்கும்.

குறிப்பாக அநேகமான முதியோர் இல்லங்களில் கண் பார்வையற்ற வயோதிபர்களை வைத்து பராமரிப்பதற்கு பின்னடிக்கும் நிலைமையே காணப்படுகிறது.


இந்த நிலையில் எமது சமூகத்தில் விழிப்புலனற்ற வயோதிபர்கள் பலர் தமது இறுதிக் காலத்தில் தமது வாழ்க்கையை நடத்த பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அதனை விட சில விழிப்புலனற்ற வயோதிபர்கள் பராமரிப்பு இன்றியும் அவஸ்தைக்கு ஆளாகியும் வருகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில்தான் எமது விழிப்புலனற்றோர் சங்கம் சமூகத்தில் விழிப்புலனற்ற வயோதிபர்களுக்கென தனியான விடுதியை அமைத்து அவர்களை பராமரிப்பதற்கு முன் வந்துள்ளது.- என்று மேலும் தெரிவித்தார்.

(ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெதுப்பகமாகப் பயன்படுத்துவதற்கென அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கட்டடங்களை அமைத்து வருகின்றனர். (க-18)

# விடுவிக்கப்பட வேண்டும் பூந்தோட்டம் மைதானம்

## இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 25

வவுனியா பூந்தோட்டம் விளையாட்டு மைதானம் இளைஞர்கள் முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் விடுவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இந்தப் பகுதி இளைஞர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வவுனியா பூந்தோட்டம் பகுதியில் பெருமளவு இளைஞர்கள் பயன்படுத்தி வந்த பூந்தோட்டம் விளையாட்டு மைதானத்தில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக பொலிஸாரின் காவல் நிலையம் இயங்கி வருகின்றது. மைதானத்தின் பெரும் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டு மண் அணைபோடப்பட்டுள்ளது. மழை காலங்களில் பெருமளவு நீர் தேங்கி நிற்பதால் மைதானத்தில் விளையாட முடியாத நிலையில் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் கிராம வீதிகளில் விளையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்கள் வீதி விபத்துகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களை விளையாடுவதற்குப் போதிய மைதான வசதி இல்லாத நிலையிலும் இவர்கள் உள்ளனர்.

எனவே இந்த மைதானத்தைப் பொலிஸாரிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை இங்கு எழுந்துள்ளது.

மேலும் விடுவிக்கப்பட்டதும் இந்த மைதானத்தை உரிய வகையில் புனரமைத்துத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தப் பகுதி இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## வீதி எங்கும் வெற்றுப் போத்தல்கள்: வவுனியாவில் சுகாதாரச் சீர்கேடு

வவுனியா, மார்ச் 25

வெற்றுக் குடிதண்ணீர் போத்தல்களை வீதியோரங்களில் வீசுவதால் சுகாதார ரீதியிலான பிரச்சினையை வவுனியா நகரம் எதிர்நோக்குவதாக வவுனியா சுகாதாரப் பிரிவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

கிணற்று நீரில் அதிகளவு கல்சியம் படிந்து இருப்பதால் இங்குள்ள பெருமளவான மக்கள் குடிதண்ணீர்ப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை அருந்தி வருகின்றனர். இதேவேளை, பஸ்களில் செல்லும் பயணிகள் மற்றும் வவுனியாவுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள் உட்படப் பல தரப்பட்டோரும் குடிதண்ணீர் போத்தல்களை பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்திய வெற்றுப் போத்தல்களை வீதிகளில் வீசுகின்றனர்.

மேலும் வீதிகளில் வீசப்படும் போத்தல்களை சிறுவர்கள் உட்பட வேறு சிலர் உரிய வகையில் கழுவாது மீண்டும் பயன்படுத்துவதால் தொற்று நோய்க்கு உள்ளாகின்றனர். சிலர் இந்தப் போத்தல்களை பொறுக்கி எடுத்து விற்பனை செய்தும் வருகின்றனர். விற்பனை செய்யப்படும் இந்தப் போத்தல்கள் கழுவப்படாத நிலையில் எண்ணெய் வகைகளால் நிரப்பப்பட்டு வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன.

மேலும் இந்தப் போத்தல்கள் தெருவோரங்களில் காணப்படுவதால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே இதனைக் கவனத்தில் கொண்டு வவுனியா நகர சபையினரால் வைக்கப்பட்டுள்ள குப்பை கூடைகளில் இவற்றைப் போடுவதன் மூலமாக சுற்றாடலைப் பாதுகாக்க முடியும் என வவுனியா நகர சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல் விடுத்து வருகின்றனர். (க-402)

## பூங்காவை அழகுபடுத்துங்கள் வவுனியா மக்கள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 25

வவுனியா நகரசபைக்குரிய பூங்காவை அழகு நிறைந்ததாக மாற்றியமைத்துப் பொதுமக்களின் பாவனைக்கு விடுமாறு வவுனியா நகர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகர சபைக்கு அருகில் அமைந்துள்ள இந்த விசாலமான பூங்காவில் திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் வைபவங்கள் என்பனவற்றின் படப்பிடிப்புக்கள் இடம்பெற்று வந்தன.

முன்னர் அழகாகக் காட்சியளித்த இந்தப் பூங்காவில் வளர்க்கப்பட்ட பெருமளவான பூமரங்கள் தற்போது வாடிய நிலையிலும், அழகு குறைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

சிறுவர்களின் விளையாட்டு உபகரணங்களான இராட்டினம், ஊஞ்சல், சறுக்கி விளையாடும் சாதனம் என்பன பராமரிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பூங்காவுக்கு வரும் பார்வையாளர்கள் மற்றும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை குறைவடைந்து காணப்படுகின்றது.

வவுனியா நகரில் அமைந்துள்ள இந்த விசாலமான பூங்காவில் உரிய வகையில் பூமரங்கள் நடப்பட வேண்டும். இங்கு வளர்ந்துள்ள புற்களை உரியவகையில் பராமரிக்க வேண்டும். மேலும் சிறுவர்களின் விளையாட்டு உபகரணங்களைச் சீராக இயங்கச் செய்ய வேண்டும். இவற்றுக்கு அழகிய வர்ணங்கள் தீட்டப்பட வேண்டும் என வவுனியா நகரில் வசிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## மின் விளக்குகள் ஒளிருமா?

### ஆதங்கத்தை வெளியிடும் பயணிகள்;

தெருவோரங்களில் மின் விளக்குகள் இல்லாமையினால் திருட்டுக்கள் இடம் பெறுகின்றன.

வவுனியா, மார்ச் 25

இந்த ஆண்டிலாவது வவுனியா, மன்னார் வீதிகளில் மின்விளக்குகள் ஒளிருமா? எனத் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர் பயணிகள்.

வவுனியா ஏ-9 வீதி, மன்னார் வீதிகளில் சீரான வகையில் மின் விளக்குகள் ஒளிராமையினால் இரவு வேளைகளில் வவுனியாவுக்கு வரும் உல்லாசப் பயணிகள் மற்றும் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் இருந்து வரும் பயணிகள் ஆகியோர் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி வருகின்றனர்.

தெருவோரங்களில் மின் விளக்குகள் இல்லாமையினால் திருட்டுக்கள் இடம் பெறுகின்றன. நோயாளிகள், வயோதிபர்கள், பெண்கள், சிறார்கள் எனப் பலரும் வீதியால் நடந்து செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரசபை, வவுனியா பிரதேச சபை நிர்வாகத்தினர் இருளில் மூழ்கியிருக்கும் பிரதான வீதிகள் உட்படப் பல்வேறு வீதிகளிலும் மின் விளக்குகளைப் பொருத்தி ஒளியை வழங்குவதற்கு இந்த ஆண்டிலாவது முழு மூச்சுடன் பணியாற்றுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## முழங்காவில் ம.வித்துக்கு கிடைத்தது மின்னொளி

கிளிநொச்சி, மார்ச் 25

முழங்காவில் மகா வித்யாலயத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முழங்காவில் மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோது இந்தப் பாடசாலைக்கும் மின்சாரத்தை வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர் க.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

முழங்காவில் மகா வித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையில் கிளிநொச்சியிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

இதுவொரு இடைநிலைப் பாடசாலையாகும். சுமார் 750 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

க.பொ.த. உயர்தரப் பிரிவில் அடுத்த தவணையில் இருந்து கணித, விஞ்ஞானப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நிலையில் மின்சாரத்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் விடுதிகள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (க-18)

## எமக்கும் கிடைத்து விட்டது மின்சாரம் இனி எரிபொருளுக்கு இல்லை தடை

### அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் மகிழ்ச்சி




அக்கராயன், மார்ச் 25

அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மின்சார இணைப்பு கடந்த 20ஆம் திகதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார சபையினால் வழங்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் வே.விஜயரத்தினம் தெரிவித்துள்ளார்.

முன்னர் இந்த எரிபொருள் நிலையம் மின்பிறப்பாக்கியின் உதவியுடன் இயக்கப்பட்டு வந்தது. அடிக்கடி மின்பிறப்பாக்கி பழுதடைவதால் எரிபொருள் விநியோகத்தில் தடைகள் காணப்பட்டன. இந்த நிலையில் மின்சார சபையினர் தற்போது மின் இணைப்பை வழங்கியுள்ளமை பேருதவியாக அமைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## அவசியம் தேவை பொதுச் சந்தை

கிளிநொச்சி மார்ச் 25

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கல்மடு நாவல் நகர், ஊற்றுப்புலம் ஆகிய பகுதிகளில் பொதுச்சந்தைகளை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதிகளில் மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கிளிநொச்சி ஊற்றுப்புலம், கல்மடுநகர் நாவல்நகர் கிராமங்களில் அதிகளவான மக்கள் வசித்து வருகின்றனர். ஊற்றுப்புலம் கிராமத்தில் 450 குடும்பங்களும், நாவல் நகரில் 350 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பகுதிகளில் வசித்து வரும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இங்கு பொதுச் சந்தைகளை அமைத்துத் தருமாறு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## திருட்டுச் சந்தேக நபர் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சி இரணைமடு சந்தைப் பகுதியில் கடை ஒன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இரணைமடுச் சந்திப் பகுதியில் உள்ள சந்தைக் கடைத் தொகுதியில் உள்ள புடைவைக் கடை ஒன்று கடந்த 16 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

திருட்டு இடம்பெற்ற கடை உரிமையாளர் மறுநாள் 17 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார். இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

ஆனால் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை நீடிக்குமேயானால் திருட்டுக்கள் அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக இந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-...)


[illegible] வயல்களில் கடும் மழைக்குத் தப்பிப் பிழைத்த நெற்கதிர்கள் அறுவடையின் பின்னர் நெல் மூடைகளாக வாகனத்தில் ஏற்றப்படுகின்றன. (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டத்தில் இரவு நேரத்தில் சைக்கிளில் பயணம் செய்வோர் முன்புறத்தில் வெளிச்சம் தரக் கூடியவை வலோ மற்றும் பின்புறத்தில் மட்காட் கல் என்பன பொருத்தி இருக்க வேண்டும். இல்லையேல் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பர் என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து சைக்கிள்கள் அதற்கேற்ற வகையில் தயார்படுத்தப்படுகின்றன. (ம-86)

## காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்தோர் மீது நடவடிக்கை

வலி வடக்கு, மார்ச் 25

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காலாவதியான குளிர்பானங்கள் மற்றும் பொருள்களை விற்பனை செய்த பல வர்த்தகர்கள் மீது பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது சம்பந்தமாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

இத்தகைய குளிர்பானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நிலையில் கீரிமலை உட்பட பல இடங்களிலும் இனங் காணப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வர்த்தகர்கள் தாம் கொள்வனவு செய்யும் குளிர்பானங்களை காலாவதித் திகதிகளைப் பார்த்துக் கொள்வனவு செய்ய வேண்டியது அவசியம்.

காலாவதித் திகதியை அண்மித்துள்ள நிலையில் இருக்கும் பொருள்களைக் கொள்வனவு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

கலாவதி திகதியைப் பார்த்து வாங்குங்கள் இதேவேளை நுகர்வோரும் தாம் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது காலாவதித் திகதியை அவதானிக்க வேண்டியது அவசியம்.

காலாவதியான பொருள்களைக் கொள்வனவு செய்து உட்கொள்வதன் மூலம் பக்க விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும். அத்துடன் நோயாளர்களாவதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகம் உள்ளன.

எனவே இவ்வாறான விடயங்கள் குறித்து அவதானமாகச் செயற்பட வேண்டும்.- என்று தெரிவித்தார். (ம-86)

## தனியார் கட்டடங்களில் உப தபாலகங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடமராட்சி கிழக்கில் உள்ள நான்கு உப தபாலகங்கள் தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

நாகர்கோவில், செம்பியன்பற்று, முள்ளியான், ஆழியவளை போன்ற உப தபால் நிலையங்களுக்குத் தனியான கட்டடங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போதைக்கு இடம்பெற மாட்டாது என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-17)

## ஏழாலை கட்டுவன் பகுதியில் நான்கு ஆலயங்களில் திருட்டு

வலி வடக்கு, மார்ச் 25

ஏழாலை கட்டுவன் பகுதியில் உள்ள நான்கு இந்து ஆலயங்களில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

ஆலய கோபுரக் கலசங்கள் உட்பட மற்றும் சில பொருள்களும் திருட்டுப் போயுள்ளன என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன், வியாழக் கிழமைகளில் இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

ஏழாலையில் உள்ள ஏழு கோயிலடிப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலய கோபுரத்தில் இருந்து நான்கு கலசங்களும் முருகன் ஆலயத்தில் இருந்து ஐந்து கலசங்களும் ஏழாலை வடக்கில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து நான்கு கலசங்களும் மற்றும் கட்டுவன் வீதியில் விநாயகர் ஆலயம் ஒன்றில் இருந்து இரண்டு கலசங்களும் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இந்த விடயங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

# திருட்டுச் சந்தேகநபர்கள் மூன்று பேர் அகப்பட்டனர்

## ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் மீட்பு

வலி. வடக்கு, மார்ச் 25

தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்ட துரிதமான நடவடிக்கைகள் காரணமாக பல லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை வடக்கு வித்தகபுரம் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சுமார் நான்கு லட்சத்து 93 ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்திரனியில் உபகரணங்கள் திருட்டுப்போன சம்பவம் சம்பந்தமாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை பொலிஸார் வடமாகாண பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்தின, காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.ஏக்கநாயக்க ஆகியோரின் ஆலோசனைகளுக்கு அமைய தெல்லிப்பழைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி, நிர்வாக பொறுப்பதிகாரி வட்டுக்கொட தலைமையிலான பொலிஸ் குழுவினர் கடுமையான புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட திருட்டுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் வங்கியில் இருந்து திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் வீடொன்றில் இருந்து மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இத்துடன் மேலதிகமாக இளவாலைப் பகுதிகளில் இடம் பெற்ற பல்வேறு திருட்டுகளுக்கும் இவர்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மேலதிக விசாரணையின் அடிப்படையில் இளவாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து திருடப்பட்ட டி. வி. டி. பிளேயர் உட்பட சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களை இரண்டுவார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-86)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் பொலிஸ் சேவைப் பிரிவு

வலி வடக்கு, மார்ச் 25

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அடுத்த வாரமளவில் பொலிஸாரின் செயற்பாட்டு அறையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி இதனை தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் தற்போது பொலிஸார் கடமைகளை மேற்கொள்வதற்கான அறை வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் இருபத்தி நான்கு மணி நேரமும் பொலிஸ் சேவை இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த நிலையத்தில் தமிழ் பொலிஸாரை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கு வரும் விபத்துகள் மற்றும் திடீர் மரணங்கள் உட்பட குற்றங்களுடன் தொடர்புடைய விடயங்களை இவர்கள் விசாரணை செய்வர் என்றும் இனிவரும் காலங்களில் மக்கள் அலையத் தேவை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## மறவன்புலோ வடக்கு வீதி திருத்தப்படுவது எப்போது?

தென்மராட்சி, மார்ச் 25

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ வடக்குக்கு செல்லும் பிரதான வீதி இன்னமும் புனரமைக்கப்படாமை குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த வீதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை எந்தவொரு ஆரம்பக்கட்டப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இரண்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில் விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

4 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி கனரக வாகனங்களின் பாவனையால் மிகவும் மோசமாக சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ம-9)

## கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் ஒரு கோடி ரூபா காசோலை மோசடி

**இருபது லட்சம் ரூபா வரையான பண மோசடிகள் சம்பந்தமாகவும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன**

வலி வடக்கு, மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான காசோலை மோசடிகள் சம்பந்தமாகவும் இருபது லட்சம் ரூபா வரையான பண மோசடிகள் சம்பந்தமாகவும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த ஒருவர் 23 லட்சம் ரூபா காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் உரிய நபரைத் தேடிச் சென்றுள்ளனர். இதன்போது அவர் தலைமறைவாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ஒருவர் 36 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைக் கொடுத்து மோசடி செய்துள்ளார். யாழ். ஜும்மா பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த ஒருவர் 23 லட்சம் ரூபா பெறுமதியாக காசோலை மோசடி செய்துள்ளார்.

ஆவரங்கால் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த ஒருவர் 5 இலட்சம் ரூபாபெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளார்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஒருவர் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளார். இது குறித்து அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் [illegible]

## 752 ஆம் பாதைக்கு இ.போ.ச சேவை 23 வருடங்களுக்குப் பின் ஆரம்பம்

**எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது**

வடமராட்சி, மார்ச் 25

பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, இடைக்காடு, அச்சுவேலி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் 752 ஆம் பாதை இலக்க இ.போ.ச. பஸ் சேவை சுமார் 23 வருட கால இடைவெளிக்குப் பின்னர் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை கடந்த ஒரு வருட காலமாக இந்தச் சேவையை ஆரம்பிக்குமாறு விடுத்த கோரிக்கையை பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் இந்தச் சேவையை ஆரம்பிப்பதாக சாலை முகாமையாளர் கே.கந்தசாமி பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுவதால் பருத்தித்துறையில் இருந்து அச்சுவேலிவரையான சுமார் 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்களும் அதேவேளை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பொலிகண்டி ஆகிய பிரதேச கடல்தொழில் விவசாய உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவோரும் தொண்டமானாறு செல்வச்சந்நிதிக்குச் சென்று வரும் பக்த அடியார்களும், தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலைய மாணவர்கள், ஆசிரியர்களும் பயனடைவார்கள்.

இந்தப் பாதையில் ஒரே ஒரு பஸ் ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள போதிலும், இதேபாதை ஊடாக சேவையாற்றும் 766 பாதை இலக்கமான மானிப்பாய் - நவாலி பஸ் சேவையின் வினைத்திறனுடன் செயற்படும் வகையில் உரிய நேர ஒழுங்கில் 752 ஆம் இலக்க பாதை பஸ் சேவை இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்சலைட்டுக்களை அழிக்க சிறப்பு காவற்படை

ராய்ப்பூர், மார்ச் 25

நக்சலைட்டுகளின் அட்டகாசத்தை ஒடுக்க சதீஸ்கர் மாநிலத்தில் 'சிறப்புக் காவற்படை' அமைக்கப்பட்டுள்ளது.

நக்சலைட்டுகள் ஆதிக்கம் அதிகம் உள்ள மாநிலம் சதீஸ்கர். அந்த மாநில வனப்பகுதிகளில், பதுங்கியிருக்கும் நக்சலைட்டுகளைப் பிடிக்க, மாநில அரசு புதிய உத்தியைக் கையாள உள்ளது. அதன்படி கோடை காலத்தில் நக்சலைட்டுகள் மீது திடீர் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 'சிறப்பு காவல் படை' ஒன்று அமைக்கப்பட்டு, அதில் இடம் பெறுவோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ)



சி.ஆர்.பி.எப். அதிகாரிகள் இருவர் உட்பட 12 இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று சௌரிய சக்ரா விருது வழங்கினார்.

# இன்று கூடுகிறது தி.மு.க. செயற்குழு

சென்னை, மார்ச் 25

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசிலிருந்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இருந்தும் வெளியேறிய நிலையில் தி.மு.கவின் அவசர செயற்குழுக் கூட்டம் இன்று கூடுகிறது.

ஈழத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசுக்கான ஆதரவையும் காங்கிரஸுடனான கூட்டணியையும் முறித்துக் கொண்டது தி.மு.க. அதைத் தொடர்ந்து விரைவில் வர இருக்கும் லோக்சபா தேர்தலுக்கான வியூகம் வகுக்க சென்னையில் தி.மு.க. தலைமைச் செயற்குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

அந்தக் கூட்டத்துக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமை வகிக்கிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 7-10 பேர் வரை உள்ளனர். அவர்கள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். அவர்களுடன் தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என 250 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## அஸாமில் கண்டெடுக்கப்பட்ட டைனோசரின் எலும்புக் கூடு



டைனோசர் எலும்புக்கூடு ஒன்று அஸாம் மாநிலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அஸாம் மாநிலம் சிராங் மாவட்டத்தைச் சேர்ந்த நாக்ராபாடிகுறி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள ஒரு கோயிலுக்கு கடந்த மாதம் 24 ஆம் திகதி பாதயாத்திரை மேற்கொண்டனர். அப்போது அங்குள்ள குக்லங் ஆற்றுக்கரை வழியாகச் சென்றபோது, 6 அடி உயரமுள்ள எலும்புக் கூட்டைக் கண்டனர். அதில் ஒரு பக்தர் அந்த எலும்புக்கூட்டை அவரது வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டார். அதனையடுத்து இத்தகவல் அந்தப் பகுதி பத்திரிகையாளர்களுக்குத் தெரியவர அதை வனப்பிரிவு அமைச்சுக்குத் தெரிவித்தனர். உடனடியாக அங்கு வந்த வன அதிகாரிகள் அந்த எலும்புக்கூட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் மத்திய வன விலங்கு அறக்கட்டளை அதிகாரிகள், கால்நடை வளர்ப்பு நிபுணர்கள் அந்த எலும்புக்கூட்டைச் சோதித்தனர். அதன்பின்புதான் அது முற்காலத்தில் வாழ்ந்த டைனோசர் ஒன்றின் எலும்புக்கூடு என்று தெரியவந்தது. அந்த டைனோசர் எலும்புக்கூடு கிடைத்த இடத்துக்கு அருகே, உலகப்புகழ் பெற்ற 'மனாஸ்' வனவிலங்கு சரணாலயம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு; சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுக

## ஜெயலலிதாவிடம் வைகோ வலியுறுத்து

சென்னை, மார்ச் 25

தமிழீழம் அமைய ஈழத் தமிழரிடம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக்கோரி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாவிடம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு தொடர்ந்து தமிழ் இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளை அசைக்க முடியாத



ஆதாரங்களுடன் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

**துன்ப நரகத்தில் இருந்து ஈழத் தமிழர்கள் விடுபட்டு மானத்தோடும், உரிமையோடும் அமைதி யாக வாழ, இருக்கும் ஒரே தீர்வு தமிழீழம் அமைப்பது தான்.**

துன்ப நரகத்தில் இருந்து ஈழத்தமிழர்கள் விடுபட்டு மானத்தோடும், உரிமையோடும் அமைதி யாக வாழ, இருக்கும் ஒரே தீர்வு தமிழீழம் அமைப்பது தான்.

இதனைப் பெறவே தமிழக மாணவர்கள் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2011 ஆம் ஆண்டு தமிழக சட்டசபையில் இலங்கை அரசுக்கு எதிராகவும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் ஒரு மகத்தான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல் தமிழீழம் அமைவதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்தக் கோரியும், இனப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்-என்றுள்ளது. (வ)

# இத்தாலி கடற்படையினரின் விசாரணையை கொல்லம் நீதிமன்றத்தில் நடத்த வேண்டும்

## கேரள முதல்வர் வலியுறுத்தல்

திருவனந்தபுரம், மார்ச் 25

இத்தாலிக் கடற்படை வீரர்கள் மீதான விசாரணையை கொல்லம் நீதிமன்றத்திலேயே நடத்த வேண்டும் என்று கேரள முதல்வர் உம்மன்சாண்டி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

கேரள கடல் பகுதியில் 2 இந்திய மீனவர்களை சுட்டுக் கொன்ற இத்தாலி கடற்படை வீரர்களை, மத்திய அரசின் தீவிர நடவடிக்கையால்தான் அந்த நாட்டு அரசு திருப்பி அனுப்பி உள்ளது. இது இந்திய அரசுக்குக் கிடைத்த வெற்றி.

அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப் படாது என்று இந்திய அரசு உறுதிமொழி கொடுத்ததாக கூறுவது தவறான தகவல். மிக அரிய வழக்குகளில் ஒன்றாக இந்த வழக்கு பரிசீலிக்கப்பட மாட்டாது என்று மட்டுமே உறுதி அளிக்கப்பட்டது. மீனவர்களை இந்திய எல்லையிலேயே இத்தாலி வீரர்கள் சுட்டு கொன்றனர். எனவே, இந்திய சட்டப்படி சுதந்திரமான விசாரணைக்கு அவர்கள் உட்பட வேண்டும்.



சம்பவம் இடம்பெற்றது கொல்லம் கடல் பகுதி என்பதால் கொல்லம் மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தை சிறப்பு நீதிமன்றமாக மாற்றி விசாரணை நடத்த வேண்டும். இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளேன். இந்த வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களும் கொல்லம் நீதிமன்றத்திலேயே உள்ளன. சாட்சிகள் அளித்த வாக்கு மூலங்கள், ஆவணங்கள் அனைத்தும் மலையாளத்தில் உள்ளன. அதை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்த பின்பே விசாரணை நடத்த வேண்டும் என்றால் மேலும் கால தாமதமாகும். இது தவிர இந்த வழக்கின் சாட்சிகளை டில்லிக்கு அழைத்துச் செல்ல வேண்டிய சிரமமும் இருக்காது-என்றார்.

### இந்தியா வந்தனர் இத்தாலியர்

இதேவேளை மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் கைதான இத்தாலி கடற்படை வீரர்கள் இருவரும் விசாரணைக்காக இந்தியா வந்துள்ளனர்.

இத்தாலித் தூதர், இந்தியாவில் இருந்து வெளியேறக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதும் இத்தாலியின் இந்த முடிவுக்கு ஒரு முக்கிய காரணம் என்று கருதப்படுகிறது. அதை தொடர்ந்து கடந்த 11 நாள்களாக இந்தியா - இத்தாலி இடையே நிலவி வந்த பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. (வ)

வான்வழித்தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதி

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் மும்பை விமான நிலையங்கள்

மும்பை, மார்ச் 25

மும்பையில் தீவிரவாதிகள் வான்வழித் தாக்குதல் நடத்த சதித்திட்டம் வகுத்துள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மும்பை விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் விமான நிலையங்களைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, கடந்த 2 தினங்களாக தீவிர ரோந்துப் பணியில், ஈடுபட்டு வருகின்றனர். விரைவு படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வான்வழிப் பகுதிகள் விமான நிலையத்தில் உள்புறம் மற்றும் வெளிப்புறம் ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் பயணிகள் தீவிர சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். விமான நிலையக் கட்டுப்பாட்டு அறை ஊழியர்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''குறிப்பிட்டு சொல்லும்படி தீவிரவாத மிரட்டல் வரவில்லை. ஆனாலும் சில தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்பை அதிகப்படுத்தியுள்ளோம்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சிப் பணிகளில் இருந்து ஒதுங்கினார் பாக். ஜனாதிபதி



லாகூர், மார்ச் 25

நீதிமன்ற உத்தரவை அடுத்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி கட்சித் துணைத் தலைவர் பதவியிலிருந்து நேற்றுமுன்தினம் விலகினார்.

பாகிஸ்தான் அரசியல் சட்டத்தின்படி ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவர் கட்சி அரசிலியலில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தநிலையில் ஜனாதிபதி சர்தாரி தனது அரசியல் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியில் துணைத் தலைவராகவும் பதவி வகித்து வந்தார். அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்து லாகூர் உயர்நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் சர்தாரி கட்சித் துணைத் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் சர்தாரி தொடர்ந்தும் துணைத்தலைவர் பதவியை வகித்து வந்தார்.

இந்தநிலையில் பாகிஸ்தான் பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதையடுத்து நீதிமன்றம் சர்தாரி கட்சிப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று கடும் தொனியில் கூறியிருந்தது. இந்தநிலையில் கட்சித் துணைத் தலைவர் பதவியில் இருந்து சர்தாரி விலகியுள்ளார் என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# உதவிகள் தொடரும்



ஜோர்டானில் ஒபாமா

நியூயோர்க், மார்ச் 25

சிரிய உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு ஜோர்டானில் தஞ்சமடைந்திருக்கும் சிரிய அகதிகளுக்கான மனிதாபிமான உதவிகளில் அமெரிக்கா பங்கெடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி பராக் ஒபாமா.

ஒபாமா மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொண்டுள்ள பயணத்தின் ஒரு பகுதியாக கடந்த வெள்ளிக்கிழமை ஜோர்டானுக்குச் சென்றுள்ளார். அங்கு வைத்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜோர்டான் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அங்கு ஜோர்டான் மன்னர் அப்துல்லாவுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார். அந்தக் கலந்துரையாடலில் சிரிய உள்நாட்டுப் போர் மற்றும் சிரியாவில் இருந்து தஞ்சம் கோரி வரும் சிரிய அகதிகளுக்கான மனிதாபி மான உதவிகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி,

''சிரியா உள்நாட்டுப் போர் அருகிலுள்ள நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. கிளர்ச்சியாளர்களின் தாக்குதலால் சிரியாவின் பல பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பய்ங்கரவாத அச்சுறுத்தல் நிறைந்த பகுதியாக சிரியா மாறியுள்ளது.

இங்குள்ள குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குரியகாக மாறியுள்ளது. உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு ஜோர்டானில் தஞ்சமடைந்துள்ளவர்களின் மனிதாபிமான உதவிகளுக்காக 3,000 ஆயிரம் கோடி ரூபா நிதியை ஒதுக்குவதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்மொழிந்துள் ளேன்''- என்று தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் மன்னர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது,

''வரலாற்றில் முதல் முறையாக அயல் நாட்டு மக்களை அதிக அளவில் அனுமதித்துள்ளோம். இது எங்களுக்கு சவாலாக இருக்கின்ற போதும், அதனை நாங்கள் மறுக்க முடியாது. அகதிகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளனர். இது ஜோர்டான் நாட்டுக்கு ரூ.9000 கோடி வரை கூடுதல் செலவை ஏற்படுத்தியுள்ளது'' என்று தெரிவித்தார். (ற)

## மியன்மார் வன்முறைகள்; இராணுவத்தினர் குவிப்பு

மெய்க்திலா, மார்ச் 25

இரு மதப் பிரிவுகளுக்கு இடையே ஏற்பட்ட கலவரம் தீவிரமடைந்ததை அடுத்து அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் மியன்மார் இராணுத்தினர்.

பௌத்த மற்றும் இஸ்லாமிய மதத்தவர் இடையே மியன்மாரின் மெய்க்திலா பகுதியில் மோதல்கள் ஏற்பட்டிருந்தன. அந்த மோதல்களில் 28 உயிரிழந்துள்ள்னர். பல கட்டடங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

வன்முறைகள் தீவிரமடைந்ததை அடுத்து அந்தப் பகுதியில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். அதையடுத்து வன்முறைகள் ஓரளவு தணிந்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 6 ஆயிரம் இஸ்லாமியர்கள் பாதுகாப்பான இடங் களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

ராகைன் மாகாணத்தில் கடந்த ஆண்டு இதுபோன்ற கலவரம் இருமுறை ஏற்பட்டது.

பௌத்த மதத்தினர் பெரும்பான்மையினராக உள்ள மியன்மாரில், முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்த நாட்டு அரசு திணறி வருகிறது. மெய்க்திலா நகரில் சுமார் ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இதில் 30 சதவீதம் பேர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## இஸ்ரோவுடன் கைகோர்க்கிறது நாசா

நியூயோர்க், மார்ச் 25

அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் எதிர்காலத்தில் சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகங்களுக்குச் செயற்கைக் கோள்களை அனுப்பும் திட்டங்களில் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

வோஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்கா-இந்தியா விண்வெளி கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவும் விடுத்துள்ள கூட்டு அறிக்கையில்-

''இஸ்ரோ மற்றும் நாசா ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் கடந்த 2008ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சந்திரயான்-1 செயற்கைக் கோள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான 2 கருவிகளை நாசா வழங்கியது. சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்படவுள்ள செயற்கைக்கோள் திட்டங்கள் அனைத்திலும் தொடர்ந்து இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது''- என்று கூறப்பட்டுள்ளது.(ற)

## பங்களாதேஷில் கடும் சூறாவளி; 20 பேர் சாவு

டாக்கா, மார்ச் 25

பங்களாதேஷில் ஏற்பட்ட சூறாவளியில் 20 பேர் உயிரிழ ந்தனர். 200க்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர்.

சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் புயலினால் கடுமையாகப் பாதிப்படைந்தன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து மீட்புப் பணிகள் தாமதமடைந்து வருகின்றன என்று மீட்புப் படையினர் கூறுகின்றனர்.

மீட்புப் பணிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பங்களாதேஷ் அரசு தெரிவித்துள்ளது. (ற)

600 ஆண்டுகளுக்குப் பின்னர்....



பதவி விலகிய ஆசீர்வாதப்பர் 16ஆம் ஆசீர்வாதப்பரை புதிய பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். கடந்த 600 ஆண்டு வரலாற்றில் இரு பாப்பரசர்கள் சந்தித்துக் கொள்வது இதுவே முதல் தடவை. ரோமில் உள்ள காஸ்டெல் கன்டோல்போ மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

## நாடு திரும்பினார் முஷாரப்

### தலிபான்களின் மிரட்டலையும் மீறி

இஸ்லாமாபாத், மார்ச் 25

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் நேற்று துபாயில் இருந்து பாகிஸ்தான் திரும்பியுள்ளார். முஷாரப் பாகிஸ்தான் திரும்பினால் அவர் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தலிபான்கள் எச்சரித்திருந்த நிலையில் அவர் நேற்று கராச்சி நகரைச் சென்றடைந்தார்.

1999 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் பதவியைக் கைப்பற்றினார் பர்வேஸ் முஷாரப். அவரது ஆட்சிக் காலத்தின்போதே பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் புட்டோ படுகொலை செய்யப்பட்டார். புட்டோ கொலையில் முஷாரப்பும் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதையடுத்து அவர் பாகிஸ்தானை விட்டு வெளியேறி பிரிட்டனில் தங்கியிருந்தார்.

இந்தநிலையில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார் முஷாரப். தன் மீதான வழக்குகளுக்கு முன்பிணை பெற்றுக் கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளார்.

முஷாரப் நாடு திரும்பும் பட்சத்தில் அவர் மீது தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்குத் தயராக உள்ளதாக தலிபான்கள் அமைப்பு எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## நலன்புரி முகாமில் தீ விபத்து; தாய்லாந்தில் 62 பேர் சாவு



மேசுரின், மார்ச் 25


தாய்லாந்தில் நலன்புரி முகாம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 62 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த விபத்தில் சுமார் 400க்கும் அதிகமான வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மியான்மாரில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த நலன்புரி முகாமிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. முன்னர் 30 பேரே உயிரிழந்தனர் என்று கூறப்பட்டபோதும் மீட்பு குழுவினர் தொடர்ந்தும் உயிரிழந்த உடல்களைக் கண்டெடுத்து வருகின்றனர். தற்போது 62 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட போதும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று மீட்புக் குழுவினர் அச்சம் தெரிவித்துள்ளனர். கண்டெடுக்கப்பட்ட உடல்கள் அனைத்தும் அடையாளம் காணமுடியாத அளவு உருக்குலைந்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்து நடந்த முகாமில் சுமார் 3 ஆயிரம் அகதிகள் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா – கோயில்குளம்
## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 25.03.2013



### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமான் வவுனியாவிலே கோயில்குளம் எனும் பதியிலே அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ அகிலாண்டேஸ்வரராக எழுந்தருளி, வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

வழிபடும் அடியார்களின் அல்லல் நீக்கியருளும் அகிலாண்டேஸ்வரருக்கு இன்று தேர்த்திருவிழா. அழகிய ரதத்திலே ஆரோகணித்து வீதிவலம் வரும் அழகு காணக் கிடைக்காத ஒன்று. வவுனியா வாழ் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அருள்புரியும் அகிலாண்டேஸ்வரரின் அருட்பதம் பணிந்து எல்லோரும் சுகமே வாழ வகை செய்யுமாறு அருளாசி நல்கி வந்தித்து சேவித்து, வாழ்த்தியருளி மகிழ்கின்றோம். பேரானந்தப் பெருவாழ்வில் மூழ்கித் திளைத்து நல்வாழ்வு சிறக்க அகிலாண்டேஸ்வரர் அருள் புரியட்டும். ஆனந்த புஷ்பம் சொரிந்து அகிலமே சிறக்க நல்லருள்புரியுமாறு வணங்கி, வாழ்த்தி அகிலாண்டேஸ்வரரின் பொற்கமலபாதங்களைப் போற்றித் துதிக்கின்றோம். நல்லைக் குருமணியின் திருத்தாள் வணங்கி வவுனியா வாழ் மக்கள் எல்லோரும் நலமே வாழ வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.**

### அகிலாண்டேஸ்வரரே அருள் புரிய வேண்டும்!



ஆதிபரமூர்த்தியே! ஐயனே! அகிலலோக நாயகனே!
அகிலாண்டேஸ்வரரே அருள்புரிய வேண்டும் ஐயா
நீதியை நிலைநாட்டி நிம்மதியால் நாம் வாழ
சோதி மயமானவரே! தேரேறி வாருமையா!
நாதியற்ற எங்களுக்கு நல்லருள் புரிந்து காத்து
பீதிபோக்கி இந்நாட்டில் சமாதானம் நிலவ
பாதியுமைக்குக் கொடுத்து பரமபதம் அளித்தவரே!
மீதியிருக்கும் எமக்குத் திருவருள் புரியுமையா!

**சிவநெறிக் கலாநிதி, இராசையா ஸ்ரீந்தரன்**

### குருக்களின் ஆசி உரை



எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் சுவாமியின் பாத கமலங்களைப் பணிந்து பாலில் நெய்யாக இருக்கும் இறைவனை ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டு வவுனியா நகரின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோயிற்குளப்பதியில் அருளாட்சி செய்துவருகின்ற அகிலாண்டேஸ்வரப்பெருமானுக்கு மஹோற்சவம் என்று சொல்லப்படுகின்ற பெருவிழாவிலே தேர்த் திருவிழாவில் இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலை உணர்த்தும் உற்சவத்தை கண்டுகளித்து ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி இப் பூவுலக மக்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுவாழ எம்பெருமானை என்றென்றும் வணங்கி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. இரகுநாத. கமலேஸ்வரக்குருக்கள் - திருக்கோயில் பிரதமகுரு**

### வாழ்த்துரை



திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பெற்ற ஈழ மணித் திருநாட்டில் வவுனியா, கோயில்குளம் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட இடத்தில் 18.08.1989 இல் ஒரு சிவாலயம் அமைக்கத் திருவருள் கூடியது. இத்தினத்தில் சங்குஸ்தாபனம் செய்து இப் பணியை ஆரம்பித்து வைக்கும் திருவருள் எனக்குக் கிடைத்தது. அன்று முதல் ஆரம்பமான தெய்வீகப் பணி, ஆகம விதிப்படியான முறையில் அமையப்பெற்ற ஒரு சிவாலயமாக நிறைவுற்றது. காஞ்சிப் பெரியார் இத் திருத்தலத்துக்கு அருள்மிகு அகிலாண்டேஸ்வரர் சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் என்ற நாமத்தைச் சூட்டி மூல மூர்த்தியாகிய சிவலிங்கப் பெரு மானையும் அம்பாளையும் தமது ஆசியுடன் பிரதிஷ்டை செய்வதற்கு கிடைத்தது இத் தலத்துக்கு ஒரு தனிச்சிறப்பாகும்.01.05.1996 இல் முதலாவது மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து முடிந்தது. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு சிவனின் பத்து நாள் பெருவிழாவும், ஆடிப்பூரத்தைத் தீர்த்த விழாவாகக் கொண்டு பத்து நாள் பெருவிழா அம்பாளுக்கும் 1997 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் 12.03.2013 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமான சிவனுடைய பெருந் திருவிழா இன்றைய தினம் தேர்த் திருவிழாவுடன் சிறப்புறுகின்றது. இன்று வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் அடியார்களுக்கு எம் பெருமானின் தேர் விழாக் காணக் கிடைத்தது ஒரு பெரும் பேறான நாளாகும். தேர் வீதியுலா வரும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பொருமானை நினைத்து வழிபடும் அனைவருக்கும் அருள்புரிவாராக என்று வாழ்த்தி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன். ***தந்தையும் தாயும் ஆகி வளர்த்தனை போற்றி.***

ஆ.தியாகராசா (பரம்பரை அறங்காவலர்), ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

### வவுனியா கோயிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர்
## திருக்கோயிலின் சிறப்பு

அருள்மிகு மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் பூசகர் பரம்பரையில் அநாதியாக விளங்கிய பட்டர் மரபில் வந்தவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும், ஆதிப்பூசகராகவும் விளங்கிய நயினாப்பட்டரின் வழிவந்த ஸ்ரீமான் முத்துக்குமாருவின் மகனான காசிப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் ஐந்தாவது தவப் புதல்வராக உதித்தவரும், வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் பரம்பரைத் தர்ம கர்த்தாவாகவும், கௌரவ செயலாளராகவும் உயர்திரு. ஆ. நவரெத்தினராசா அவர்கள் செயற் படுவது இறைசித்தியேயாகும்.



வவுனியா மத்திய பஸ்நிலையம், புகையிரதநிலையம் இரண்டு பாதைவழியும் வந்திறங்கியவர்கள் அதிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் முதலாம் கட்டையை அடைந்தால் (இத்தூரம் நடந்து செல்லலாம்) தென்படுவது மூன்று பாதைகள் கொண்ட முச்சந்தி இதிலிருந்து பிரிந்து செல்வது தான் அந்தத் தவப்பேறு பெற்ற கோயில்குளக் கிராமம். இந்தக் கிராமத்தின் முகப்பிலே தென்படுவது தான் அண்டசராசரங்களைத் தன் வயப்படுத்தும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.

இக் கோயிலின் மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வராக் குருக்களைக் கொண்டு கடந்த 01.05.1996 இல் ஆவர்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத் தையும் இனிதே நடத்தி முடிக்கப்பட்டது. இவை யாவும் ''முன்னவன் முன்னின்றால் முடியாதது ஒன்று மில்லை'' என்பது போல் கருணைக்கடலாம் சித்தி விநாயகர் பேரருளோடும், அம்மை யப்பனின் கருணைக் கடாட்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின. தொடர்ந்து இவ்வாலயத்தில் சிவாகம முறைப்படி சகல பூசைகளும் நடைபெற்று வருகின்றது என்றால் அது அம்மை அப் பனின் திருவருளே. அதன் பிரகாரம் அம்மை அப்பன் இன்று தேரேறி வீதியுலா வருகின்றார்கள் ஆன்மாக்களை ஆசீர்வதிப்பதற்காக.

ஆ. நவரெத்தினராசா, அறங்காவலர்.

காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் காலை 9.00 மணிக்கு ஆரோகணிப்பார்

விளம்பர அனுசரணை

லக்ஸ்சான்
சிற்பக்கலைக்கூடம்
844/16, அளுத்மாவத்தை,
கொழும்பு 15

Kugan Motor Stores
குகன் மோட்டேர்ஸ் ஸ்ரோர்ஸ்
32, 2 ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.
T.P. 024 222 1845
110, Bazaar Street, Vavuniya.
Tel: 024 2222474, 2222475, Fax: 024 2222474

சாயிராம் கோல்ட் ஹவுஸ்
32, மில்றோட், வவுனியா.
தொ.பே: 024 4923594

பழமுதிர்சோலை
பல்பொருள் வாணிபம்
இல.9, பொதுச்சந்தை,
கிளிநொச்சி.

ஆதி திருமண மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெளியே செல்ல' தயாராகி வரும் ஆளும் கட்சி உறுப்பினர்கள்

## பொன்சேகாவின் கணிப்பீடு

கொழும்பு,மார்ச் 25

90 வீதமான ஆளும் கட்சி உறுப்பினர்கள் அரசை விட்டு விலகவே விரும்புகின்றனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சியாளர்களின் சர்வாதிகார ஆட்சி முறைமையை ஆளும் கட்சியைச் சேர்ந்த பலர் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி என்னை முப்பது ஆண்டுகளுக்கு சிறையில் தள்ள முயற்சித்திருந்தார். எனினும் நான் இரண்டு ஆண்டுகளில் சிறையிலிருந்து விடுதலை ஆகியுள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.



சிவில் உரிமைகளும் மீளப்பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அரசு ஸ்திரமாகக் காணப்படுகின்றது என்று பிரசாரம் செய்யப்பட்டாலும் உண்மை நிலைமை அதுவல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# எரிபொருள் விநியோகம் சீனாவிடம் ஒப்படைப்பு

## அனுமதி வழங்கினார் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச் 25

ஹம்பாந்தோட்டை மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கான எரிபொருளை விநியோகிக்கும் பணி சீனாவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை சீனாவின் ஹென்குய் பொறியியல் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது.

இந்த நிறுவனம், விமான நிலையம் மற்றும் துறைமுகத்துக்கான எரிபொருளை சுரங்கங்களில் சேகரித்து வைத்து பரிசோதித்த பின்னர் இலங்கையின் துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, அமைச்சரவைக்கு அனுமதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




☎ 0215671111
advt@uthayan.com

# இலங்கையர்களின் பாதுகாப்பில் இந்திய அரசு விசேட கவனம்

## இந்தியத் தூதுவர் பிக்குகளுக்கு உறுதிமொழி

கொழும்பு,மார்ச் 25

தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து பகுதிகளிலுமுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா உறுதியளித்துள்ளார்.

இலங்கை பௌத்த துறவிகளுக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழகத்தில் அண்மையில் இரண்டு பௌத்த துறவிகள் தாக்கப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் தொடர்ந்தும் சுமுகமான நிலை உருவாக வேண்டும். தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்தியத் தூதுவர் கூறினார்.

இந்த நிலையில் இலங்கையின் பௌத்த மக்கள் தமிழகத்தின் ஊடாக இந்தியாவுக்கு சென்று வழிபாடுகளை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை யாத்திரிகர்கள் அதிகம் சென்று வரும் இடங்களை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதருடன் நடத்தப்பட்ட பேச்சை அடுத்தே இந்த விசேட திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலர் எம்.கே.பி. திஸாநாயக்க கூறினார். (ச)

ஐந்தாம் ஆண்டு நினைவு



மலர்வு
30.08.1930

உதிர்வு
25.03.2008

அமரர் முருகேசு துரைராஜா

திதி:-சதுர்த்தி

பாசத்துடன் எம்மை வளர்த்த அப்பா!
நீங்கள் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆகி விட்டன.
கவலை குறையவில்லை கண்ணீரும் நிற்கவில்லை
நாம் செய்த பாவத்தால் விரைவில்
உங்களை இழந்து தவிக்கின்றோம் இழப்பு கொடியது
உங்களை இழந்த எங்களுக்கு அமைதியுண்டோ இவ்வுலகில்

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (34708) (6.7.11)

கண்ணீருடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்



திருமதி தங்கம்மா முருகேசு
(சக்கலாவத்தை, கரணவாய் வடக்கு)

வடமராட்சி கரணவாய் வடக்கு, சக்கலாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங் கம்மா முருகேசு 23.03.2013 சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை முருகேசு (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (வேதாரணியம் சோதிடர்) - வள்ளியம்மை தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன் னம்மா தம்பதியரின் அருமை மருமகளும், பரராசசிங்கம் (ஸ்ரடி சேக்கிள்), சுசிலாதேவி, சிவகுமாரன் (Sms Consulting Engineer, Singapore), காலஞ்சென்ற விமலாதேவி, கலாதேவி, மஞ்சுளாதேவி (Australia), ரவீந்திரன் (Engineer Australia) ஆகியோரின் அன்புத் தாயும், விஜயலட்சுமி, காலஞ்சென்ற தங்கவேலாயுதம், லோகநாயகி (Australia), கணேஸ்வரமூர்த்தி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் கல்வித் திணைக்களம்), வசந்தநாதன் (Engineer Australia), அனுசா (Doctor Australia) ஆகியோரின் அன்பு மாமியும், பாலேந்திரன் (London), சுசீந்திரன் (London), காலஞ்சென்ற சுஜிதா (ஆசிரியர் - தி/ அல்மின் ஹாஜ் மு. ம. வித்தியாலயம்), நிலானி, அனுசா (ஆசிரியர் - யா/ நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), ரவீன் (Engineer Australia), சிந்திஜா (Monhsh University Melbourne) , சிந்துஜா (Monhsh University Melbourne), மீரா (Australia), ஸ்ரீராம் (Australia), ஹரிணி (Australia), ஜெயராணி (London), சிவாந்தி (London), பிரதீபன் (ஆசிரியர் - மு/ கற்சிலைமடு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சயந் (London), வர்ஷா, (London), ஜீனோசன் (London), ஜதீசன் (London), ரஜிஸ்சன் (London), சஹானா ஆகியோரின் இனிய பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2013) செவ் வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளம்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.
(34781) (45.6.7)

தொ.பே.021 2264 009,
021 226 2273.

# 'பட்டதாரி பயிலுநர் நிரந்தர நியமனத்தில் குளறுபடி இல்லை'

வடமத்திய மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் பட்டதாரி பயிலுநர்களாக சேவையாற்றும் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் குளறுபடிகள் இழைக்கப்படமாட்டா என்று வடமத்திய மாகாண முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் தெரிவித்தார்.

அரசு ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கியுள்ளது. மேலும் அவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு பல்வேறு செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

எனவே, வடமத்திய மாகாணத்திலுள்ள பட்டதாரிகள் தமது நிரந்தர நியமனம் தொடர்பில் அஞ்சவேண்டியதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சிசுவை விற்ற பெற்றோர் கைது

கொழும்பு,மார்ச் 25

மூன்று நாள் நிரம்பிய சிசுவை விற்ற ஐவர் புஸல்லாவையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிசுவின் தாய், தந்தை உள்ளிட்ட ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு சிசு விற்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சிசு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு, V.T.செல்லத்துரை வீதியில் (பலாலி வீதியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் நாகபூசணி கிளினிக்குக்குப் பின்புறமாக) அமைந்துள்ள ஒன்பது பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொ.இ: 077 508 2594

(சி/7170)(5-6)

தரம் 5 புலமைப்பரிசில்
மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது

1 தொடக்கம்வரை 5 வரை (விலை ரூ 20.00)

வெற்றிச்சிகரம்
மாதிரி வினாத்தாள்கள், விடையுடன்

ஆக்கம்: திருகோணமலை S.கணேசலிங்கம்
யாழ்நகரில் அன்னை புத்தகசாலை - 021 2229881
வெளியீடு : புவிலங்காஸ் – 077 6258778

1. புலமைச்சங்கமம் 3. கற்றல் சங்கமம்
4. கட்டுரைச் சங்கமம்
5. அடிப்படைத் தமிழ் வழிகாட்டி

(சி.7192) (45.6.7)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
07.02.1954

ஆண்டவன் அரவணைப்பில்
23.02.2013

செல்வநாயகம்
மரியபேபி


எல்லோருக்கும் இனியவளே அம்மா என்ன செய்வோம் அம்மா
வார்த்தைகள் இல்லை அம்மா எங்கள் மனப் பாரத்தை சொல்லி அழ
பார்க்கும் இடமெல்லாம் உன் தோற்றம் வாட்டுதம்மா
நாம் கண்ணீரில் கலங்கி நிற்க உம் நினைவை
எம் மனதில் பதிய வைத்து திடீரென சென்றதேனோ- அம்மா
நம்ப முடியவில்லை உம் பிரிவினை
ஆறாத்துயரில் எம்மைத் துடிக்க விட்டு அம்மா நீ எங்கு சென்றாய்--
மாற்று வழி ஏதும் உண்டோ, மீண்டும் உம்மைப் பெற்றிட
அம்மா உம் நினைவை மனதில் பதிய வைத்து மாபரனடி சென்றாலும்
உம் நினைவு, எந்நேரமும் வாட்டி வதைக்குதம்மா,
மாதம் ஒன்று அரை நொடியாய்ப் போனதுவோ
மறவாத உம் நினைவு, எம் கவலையை ஆற்றுமா? அம்மா!
இன்முகத்தால் அனைவரையும் கவர்ந்திடும் பாண்மையும்
பலருக்கு உதவத் துடித்திடும் சிந்தையும், எவரும் என்றும் மறக்க முடியுமா?--
விடிந்ததும் விடியாத இருளினிலே நிலை குலைந்து தவிக்கின்றோம்
ஆண்டவன் அடியில் உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சும் உள்ளங்கள்--

இல.38/12, கற்குழி,
முதலாம் ஆம் ஒழுங்கை, வவுனியா,
T.P- 077 038 7149 (26192) (6.7.11)

பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், பாசமுள்ள பிள்ளைகள்,
மருமக்கள், அருமைச் சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ





## ஆலயத் தொன்மையும் வரலாறும்

ஈழநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற க்ஷேத்திரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர சிவபூமியில் கோயில் கொண்டருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்திலுள்ள சக்தி பீடங்களில் தொன்மையும் முதன்மையும் மேன்மையும் உடையதாக விளங்குகின்றது.

திருகோணமலையின் இருதய ஸ்தானமாக விளங்குகின்ற ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் ஆலயத்திற்கெதிரே பரந்த மைதானமும் அதை அடுத்து பரந்து விரிந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் இந்த ஆலயத்திற்கு இயற்கை அழகை ஊட்டிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆலயத்தில் நின்றுகொண்டு திருக்கோணேஸ்வரத்தைத் தரிசிக்கலாம், அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய கோணேசப் பெருமானின் கிருபாகடாட்சம் அம்பாளுடைய ஆலயத்துள் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இந்த ஆலயத்துள் நிற்கும் போது ஏற்படுகின்றது.

மதுரையம்பதியில் பிறந்த பிராமண குலத்தைச் சேர்ந்த ஒருவர் இராமேஸ்வரத்துக்கு வந்து இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தார்.. இவ்வாறு இருக்கும் காலத்தில் தெய்வ விக்கிரகம் ஒன்று பற்றி தெய்வீக வாக்கு அவருக்கு கிடைத்தது. திருகோணமலையிலுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தெற்கு வீதியில் தொங்கு செவ்வரத்தை மரமொன்று இருக்கின்றது. இந்த மரத்தின் அடியில் நிலத்தினுள் ஒரு தெய்வ விக்கிரகம் இருக்கின்றது என்ற தெய்வ வாக்கின்படி அந்தப் பிராமண பக்தர் திருகோணமலைக்கு வந்தார். அவ்விடத்தை அகழ்ந்து பார்த்தபோது ஒரு செப்புப் கிடாரத்தினுள் (தாழி) காளிஅம்பாளின் விக்கிரகம் இருப்பது கண்டறியப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை இக்கோயிலில் நடைபெறுகின்ற பிரதான விழாக்களில் இந்தக் காளியம்பாள் விக்கிரகம் சிறப்பிடம் பெற்று வருகின்றது.




காளி அம்பாளின் விக்கிரகம் தாழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட காட்சி இக்கோயிலின் சித்திரத் தேரில் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இராஜ கோபுரத்திலும் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த பத்திரகாளி அம்பாளின் விக்கிரகமும் இக்கோயிலின் தோற்றக்காலம் பற்றிய தரவுகள் சிலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கின்றன.

செப்புப் கிடாரத்தின் வடிவமைப்பையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழமை வாய்ந்த தொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகின்றது. பத்திரகாளி அம்பாள் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழ 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் காணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இந்த விக்கிரகத்தின் காலத்தை திட்டவட்டாக கூறமுடியாவிட்டாலும் கூட, அது மிகப் பழமை வாய்ந்ததொன்றெனக் கூறிக்கொள்ள முடியும்.

இக்கோயில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற போர்த்துக்கீச, ஒல்லாந்தப் படையெடுப்புக்களாலும் பௌத்த சமணத் தாக்கங்களாலும் இந்துக் கோயில்களுக்கேற்பட்ட அழிவுகளை நினைவூட்டுகின்றன. அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து தற்காலிகமாக பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் கோணேசர் கோயிலின் விக்கிரகங்கள் கிணற்றினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததையும், பொலனறுவை இந்துக் கோயில்களின் திருவுருவங்களை அதிசயிக்கத்தக்க வகையில் நிலத்தினடியில் கல்லறை அமைத்துப் பாதுகாத்து வைத்திருந்ததையும் அறிகின்றோம்.

இத்தகைய நடவடிக்கையாகவே அந்நியரின் இந்து மத விரோதச் செயல்கள் நடைபெற்ற 17ஆம் நூற்றாண்டில் காளி கோயில் அம்மன் விக்கிரகமும் செப்புக் கிடாரத்தினுள் பாதுகாத்து வைத்து மண்ணுக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததென எண்ண வேண்டும்.



ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் ஆலயத்தோடு தொடர்புடைய அற்புதக் கதைகளின் சான்றுப் பொருள்கள் ஆலயத்தில் இன்றும் இருக்கின்றன.

நிலத்தினடியிலிருந்து எடுக்கப்பட்ட கிடாரமும் (தாழி) காளியம்பாளின் தாமிரத் திருவுருவமும் ஆலயத்தில் இன்றும் இருப்பது போல சிங்கவாகன அற்புதக் கதையொன்று பத்திரகாளி கோயிலோடு தொடர்பு உடையதாகக் காணப்படுகின்றது.

சிங்கவாகனம் ஒன்றை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டு இந்துசமுத்திரத்தில் சென்று கொண்டிருந்ததாகவும் ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் ஆலயத்திற்கு நேராக இக்கப்பல் நின்று விட்டதாகவும் அம்பாளின் அருளால் கப்பற் தலைவன் கண்ட சொப்பனத்தின் படி அந்த சிங்கவாகனத்தை இந்த ஆலயத்துக்கு சேர்த்த பின்னரே ஓடத் தொடங்கியதென்றும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகின்றது. இந்த சிங்கவாகனம் இன்னும் இந்த ஆலயத்தில் இருக்கின்றது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கதையொன்று ஸ்ரீபத்திரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. பண்டைக் காலத்தில் இந்த ஆலயத்திலும் ஆலயச் சூழலிலும் அநாச்சாரமாக நடந்து கொள்வதற்கு மக்கள் பயப்படுவார்களாம். ஒருநாள் ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு அம்பாளுடைய சந்நிதானத்துக்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப்பெண்ணுக்கு கழுத்துவாங்கல் ஏற்பட்டு தலை ஒருபக்கம் திரும்பி விட்டதாம். அம்பாளுக்கு அபச்சாரம் செய்துவிட்டதாக அப்பெண் சொப்பனங்கண்டு குற்றத்தை உணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலை மயிர்களைக்களைந்து கத்தரித்து நேர்த்திக் கடனாகக் கொடுத்த பின்புதான் தலையைச் சரியான நிலைக்குத் திருப்பக் கூடியதாயிருந்ததாம்.

அந்தத் தலைமுடியைப் பாதுகாப்பாக வைத்திருந்து மகிஷாசுர மர்த்தனவிழா நடைபெறும்போது அம்பாளுடைய ஜடாமுடியோடு சேர்த்துக்கட்டி அலங்கரிக்கும் வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது. அந்த மயிர்களின் ஒரு பகுதி இன்றும் இருக்கின்றது.

முன்னொரு காலத்தில் இந்த ஆலயப் பூசையைச் செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர் இரவுப் பூசையை முடித்துக்கொண்டு திருக்கதவை அடைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். தனது பிள்ளை ஆலயத்திற்குள் இருந்ததை அவர் அவதானிக்கவில்லை. வீட்டுக்குப்போய் சாப்பாட்டு வேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்துக்கு வந்து பார்த்தபோது பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம். பூசை முடிந்து கதவடைத்தபின் ஆலயக்கதவைத் திறப்பது சாஸ்திர விரோதமானது. ஆசாரமற்றது என்பதினால் காலையில் பார்க்கலாம் என்று கூறியும் மனைவி ஏற்றுக்கொள்ளாமல் அடம்பித்தாளாம். மனைவியின் விருப்பப்படி ஆலயத்தைத் திறந்த போது காவல் தெய்வமாகிய வைரவர் பிள்ளையை இரண்டாகக்கிழித்துப் போடுவதைக் கண்டாராம். அத்தகைய உக்கிர மூர்த்தியாகிய வைரவரை மந்திர தந்திரக் கிரியைகளினால் இடம்பெயர்த்து எங்கேயோ ஒரு மலையிற் கொண்டுபோய் ஸ்தாபித்ததாகக் கூறுகின்றார்கள். இந்த வழக்கத்தை அனுசரிப்பது போல இன்றும் ஆலயப் பூசைகளனைத்தும் நிறைவுற்றவுடனே கதவு அடைக்கப்படுகின்றது போலும்.

முன்னொரு காலத்தில் இந்த ஆலயத்தினுள் சுருண்டு படுத்திருந்த ஒரு நாகசர்ப்பத்தின் மேல் பெரிய பாரமான கிடாரமொன்றை அவதானிமின்றித் தூக்கி வைத்துவிட்டார்களாம். சர்ப்பம் அதனடியில் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபம் காரணமாக நாகதோஷம் ஏற்பட்டு அந்தக் குருக்களின் ஏழு சந்ததிக்குப் பின்பே ஆண்குழந்தை பிறந்ததாம். அதுவரையும் பெண் சந்ததியே தொடர்ந்து பிறந்திருக்கின்றது.

யாமறிந்த வரையில் இந்த ஆலயத்தில் பிரம்ம ஸ்ரீ கார்த்திகேசுக் குருக்களும்,அவருக்குப் பின் முறையே பிரம்மஸ்ரீ கா.குமாரசுவாமிக்குருக்களும், பிரம்மஸ்ரீ கு.சுவாமிநாதக் குருக்களும்,பிரம்மஸ்ரீ சு.கு.சோமாஸ்கந்தக் குருக்களும் பூசை செய்து வந்துள்ளார்கள். இவர்களில் சோமாஸ்கந்தக் குருக்களுக்குத்தான் ஏழாவது தலைமுறையில் ஆண்குழந்தை பிறந்தது. அதுவே சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள். தந்தையால் ஆலயத்துக்குச் செய்து வந்த திருப்பணிகளைத் தொடர்ந்து மாபெரும் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எல்லாம் அம்பாள் திருவருள்.

சோழப் பெருமன்னர்களின் செல்வாக்கு ஈழ நாட்டில் நிலவிய காலத்தில் பல இந்து கோயில்கள் தோற்றம் பெற்றன. 9ஆம் நூற்றாண்டில் சோழப் பெருமன்னன் விஜயாலன் 'நிதம்பசூதனி' எனப்படும் துர்க்காதேவிக்கு கோயில் எடுத்த வரலாறு அவனுடைய சாசனங்களில் உண்டு. எனவே சோழ மன்னர்கள் வீரத்தையும்,வெற்றியையும் தரும் காளிதேவியை வழிபடும் வழக்கமுடையவர்களாக இருந்ததால் முதலாம் இராஜராஜ சோழனின் மகனாகிய முதலாம் இராஜேந்திரன் (1012-கி.பி.1044) என்பவனின் மெய்க்கீர்த்தியைக் கூறும் கல்வெட்டுத் தூண் காளிகோயிலில் கிடைத்த கல்வெட்டு, பொறிக்கப்பட்ட கற்றூணும்,அக்கோயில் நிலத்துள்லிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கிடாரமும்(தாழி) அதனுள்லிருந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவுருவமும் இன்றும் கோயிலில் இருப்பதால் ஆலயத்தின் தொன்மை புலப்படுகின்றது.

## கோயில் வரலாறு

பிரம்மஸ்ரீ சு.கு.சோமாஸ்கந்தக்குருக்களின் முன்னோர்கள் காளிகோயிலைச் சிறுகக் கட்டிப் பெருக வளர்த்தவர்கள். ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் காலத்துக்காலம் திருப்பணி செய்து வந்தார். 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சியத்தோடு அம்பாளுடைய திருவருளை வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டு திருப்பணி வேலைகளை ஆரம்பித்தார். 1933ஆம் ஆண்டு கருவறை விமானம் புதுப்பிக்கப்பட்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1947ஆம் ஆண்டு மகாமண்டபம், கோபுர மண்டபம் என்பன சிறப்பாகத் திருத்தியமைக்கப்பட்டு இரண்டாவது குடமுழுக்கு நடைபெற்றது.

1962 ஆம் ஆண்டு வசந்த மண்டபமும் மற்றும் திருப்பணிகளும் செய்து மூன்றாவது குடமுழுக்கு நடைபெற்றது.

1972 ஆம் ஆண்டு இந்த ஆலயத்திலிருந்த கட்டுத்தேருக்குப் பதிலாக சித்திரத்தேர்கள் மூன்றும், மஞ்சமும் நிர்மாணிக்கப்பட்டு இரதோற்சவத்துக்குப் பயன்பட்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர்கள் இவைகளேயாகும். இந்த ஆலயத்துக்கு தேராலயம் தெற்கு வீதியில் அமைந்துள்ளது.

1979 ஆம் ஆண்டு கற்பக் கிரக விமானத்தைப் பூரணமாகத் திருத்தியமைத்த அதில் சுதைச் சிற்பங்களாக சப்த கன்னியர்கள் அமைக்கப்பட்டன. மகா மண்டபச் சாளக்கிராமத்

ராஜராஜேஸ்வரியின் திருவுவருவமும் விமானத்தில் கௌரி அம்பாளும் அமைக்கப்பட் கும்பாபிஷேகம் நிறைவேறியது.

ஸ்நபன மண்டபம் சிற்ப சித்திர வேலைப்பாடுகளோடு மிகச் சிறப்பாகப் பூரணமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அட்டநாகபந்தனம் ராசிச்சக்கரம் என்பன சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் தெற்குப் பக்கம் மகாலட்சுமிக்கும்,வடக்குப் பக்க சந்நிதி அமைத்து தாமிர விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றன. சிம்ம கொடிஸ்தம்பம், மூலாதார கணபதி என்பனவும் அமைந்துள்ள ஸ்தம்ப மண்டபத்தோடு என்பவைகளுக்கும் தனிச் சந்நிதிகள் அமைந்துள்ளன.

1980 ஆம் ஆண்டு கோபுர வாசலுக்கு அருகேயிருந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை 4 உயர்த்திக் கட்டி 600 இறாத்தல் எடையுள்ள கண்டாமணி புதிதாக ஏற்றப்பட்டிருக்கிறது. திருப்பணிகள் பலவற்றைச் செய்து 06.02.1980 இல் சம்புரோட்சண மகா கும்பாபிஷேக நடைபெற்றது.

1992 ஆம் ஆண்டு வசந்த மண்டபத்தில் கௌரியம்பாள் சமேதகேதாரீஸ்வரருக்கு த கோபுரமும் அமைக்கப்பட்டது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் அடக்கமாக துர்க்கா பரமேஸ்வரிக்குத் தனிக்கோயிலும் நீண்ட பெரிய தரிசன மண்டபமு அமைத்துத் துர்க்காதேவியைப் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் நடைபெற்ற

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயிற் கருவறையில் சதுர்ப்புஜங்களுடைய அம்பாளின் சி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. சூலம்,டமகிருகம், கட்கம்,கபாலம் தாங்கிய திருக்க பத்மபீடத்தில் அமர்ந்திருக்கின்றாள்.


மகா மண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் விநாயகர், முருகன் தாழியிற் கிடைத்த இராஜராஜேஸ்வரி, சண்டேஸ்வரி, என்னும் தாமிர விக்கிரகங்களுமுண்டு இம்மண்டபத் பக்கத்தில் பிள்ளையாரும் வடக்குப் பக்கத்தில் தண்டாயுதபாணியின் சிலா விக்கிரகங்க செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஆலயத்தில் உச்சிக் காலம் சாயரட்சை ஆகிய இரண்டு காலங்களிலும் நித்திய வருகின்றன. பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பத்து நாள்கள் ம நடைபெறுகின்றது. இரதோற்சவமும் கற்பூரச் சட்டித் திருவிழாவும் மகோற்சவத்தில் வி பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோண சமுத்திரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார். தீர்த்தமாடும் மக்கள் வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியை அங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 25.03.2013



ில் பல இந்துக்
விஜயபாலன்
னுடைய
பும் தரும்
ராஜராஜ
னின்
ல்வெட்டு,
கப்பட்ட
ம் இன்றும்

லைச் சிறுகக்
ம் திருப்பணிகள்
அம்பாளுடைய
ஆரம்பித்தார்.
ம் நடைபெற்றது.

மூன்றாவது

சித்திரத்தேர்கள்
வருகின்றது.
பகளேயாகும்.

மத்த அதில்
சாளக்கிராமத்தில்

அமைக்கப்பட்டு நான்காவது

பூரணமாக
தச் சிற்பமாக மேற்தளத்தில்
டக்குப் பக்கம் சரஸ்வதிக்கும் தனிச்
ன்றன. சிம்மம், பலிபீடம்,
டபத்தோடு வைரவர், நாகதம்பிரான்

காபுரத்தை 40அடி உயரத்துக்கு
டிருக்கிறது. மேலே கூறிய
ம்பாபிஷேகம் சிறப்பாக

வரருக்கு தனிச் சந்நிதியும்
ப் பக்கத்தில் ஆலயத்துள்
ன மண்டபமும் கோபுரமும்
நடைபெற்றது.
அம்பாளின் சிலாவிக்கிரகம்
கிய திருக்கரங்களோடு அம்பாள்

ற் கிடைத்த அம்பாள்,
இம்மண்டபத்தின் தெற்குப்
விக்கிரகங்களும் பிரதிஷ்டை

லும் நித்திய பூசைகள் நடைபெற்று
நாள்கள் மகோற்சவம்
வத்தில் விசேடமான விழாக்கள்.
தம் கோணமலையின்
டும் மக்கள் வெள்ளம் கடல்

(C/5558)(2.6.7)





## அம்பாள் தேர் வடம் பிடித்து வினைப் பயன் அறுங்கள்



தட்சண கைலாயமெனப் போற்றப்படும் கிழக்கிலங்கையின் திருகோணமலையில் வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ரதோற்சவம்.

யாதுமாகி நின்று உலகை ஆட்கொள்பவள் அன்னை மகா காளி. சாத்வீக வடிவங்கள், ராஜஸ வடிவங்கள், தாமஸ வடிவங்கள் என மூவ கைப்படும். இவற்றுள் தாமஸ வடிவங்களில் ஒன்றாய் திகழ்வதே காளி அம்மன் வடிவமாம்.

இக் காளி அம்பாள் பாடல் பெற்ற திருகோணமலையில் வீற்றிருந்து ஆயிரக்கணக்கான அன்பர்களுக்குப் பல்லாண்டாய் அருள் புரிந்து வருகிறாள்.

இன்று தேர்த் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு நன்மையை வளர்க்கவும் தீமையை அழிக்கவும் அன்னை காளியம்பாள் தேரோட்டத்தில் ஒவ்வொருவரும் கையிற்றைப் பற்றிப் பிடித்திழுத்து அருள் பெற்று பத்திரகாளி அம்பாளின் ஆசியையும் பெற்றுச் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்தருள வேண்டுமென உளமார பிரார்த்திக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்**
ஆதிவகர்த்தா பிரதமகுரு, ஸ்ரீ பத்திரகாளி தேவஸ்தானம், திருகோணமலை.

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதிபராசக்தி யான அம்பிகை உமையவள் தம்மை வழிபடும் அடியார்களின் குறை போக்கி அருள் புரியும் வண்ணம் திரு கோணமலை நகரிலே பத்திரகாளியாக எழுந்தருளி வீற்றிருக்கிறாள்.

அருள்கொளிக்கும் இந்த ஆலயம் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஒரு புகழ்மிக்க ஆலயமாகும். அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பிகைக்கு இன்று இரதோற்சவம். அழகே ஒருருவெடுத்தாற் போன்று சர்வாலங்கார பூஜிதையாக அம்பிகை தேரிலே ஆரோகணிக்கும் அருட்காட்சி சொல்லிலே வர்ணிக்க முடியாத ஒன்று. திரு கோணமலை தனிலே அருளாட்சி புரியும் அம்பாள், விநாயகர், சுப்ரமணியர் சகிதம் தேரேறி வீதி வலம் வந்து அடியார்களுக்கு வேண்டும் வரம் தந்து நல்வாழ்வளிக்க வேண்டுமென அருளாசி நல்கி வாழ்தி மகிழ்கின்றோம். அம்பிகை அடியவர்கள் திருகோணமலை வாழ்மக்கள் அனைவருக்கும் பேரானந்தம்மிக்க பெருவாழ்வு கிடைக்க ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

கலாபூஷணம்
## ஆ.சிவலிங்கம் ஸ்தபதி
காளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.



## தேரேறி வரும் காளி தேவியே சரணம்!



அன்னையே! ஸ்ரீ பத்திரகாளி அம்பிகையே
ஆதிபராசக்தியே அன்ன பூரணித் தாயே வருக
உன்னையே நம்பி திருவடி பணிந்தோம் அம்மா!
ஊர்கூடித் தேரிழுக்க ஆரோகணித்து வருவாய்

வேரோடு வினை களைந்து விக்கினங்கள் நீக்கவே
தேரேறி வரும் காளி தேவியே சரணம் தாயே
பேரோடும் புகழோடும் திருகோணமலை தனிலே
சீரோடு நாம் வாழ அருள்புரிய வேண்டும் அம்மா!

அம்பிகையே! காளி அம்மாவே கடைக்கண் பாரம்மா!
சித்திரத் தேரினிலே சிங்காரக் காட்சி தந்தே
வெம்பியழுது நிற்கும் எம் வேதனை போக்கிடுவாய்
நம்பியுந்தன் கால் பிடித்தோம் பத்திரகாளியே வருக வருக!

கலாபூஷணம்,
இராசையா ஸ்ரீதரன்



## விநாயகர் சிற்பாலயம்
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.





ஸ்தபதி ந.சற்குருநாதன்
## திர்ஷிகா கலைக்கூடம்
ஆலடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

மலர் அமைப்பு:- கதிர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நம்பிக்கைக்கு உரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவரின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** வீண் குழப்பம் வந்து செல்லும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்திருந்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும். சாதாரணமாகப் பேசுவதைக் கூட சிலர் விமர்சனமாகப் புரிந்து கொள்வார்கள்.

**கன்னி:** பல வேலைகள் தடைப்பட்டு முடியும். யாருக்காகவும் பிணைக் கையொப்பம் இட வேண்டாம். வியாபாரத்தில் மிகுதிகளைப் பெறத் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பற்றி குறை கூற வேண்டாம்.

**நாளை**

பங்குனி-13 செவ்வாய்க்கிழமை 26.03.2013
திதி: சதுர்த்தசி பி.ப. 04.42 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 10.46 வரை
சுபநேரம்: 10.44- 12.14 வரை
இராகுகாலம்: 03.14- 04.44 வரை

**துலாம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல் நிலை சீராக அமையும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**விருச்சிகம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** செயல்களில் கவனம் தேவை. பிற்பகல் முதல் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி திரும்பும்.

**மகரம்:** ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விடயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். வைராப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். மற்றவர்களுக்கு நியாயம் பேசப் போய் உங்கள் பெயரை கெடுத்துக் கொள்வாதீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து மற்றவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 9 | | | 7 | | |
| 7 | | 9 | | | | | | 3 |
| | 2 | 1 | | 7 | | | 5 | 9 |
| 2 | 3 | | 5 | | 6 | | 1 | 8 |
| | | | 8 | | 3 | | | |
| 1 | 4 | | 7 | | 9 | | 6 | 5 |
| 5 | 9 | | | 3 | | 1 | 8 | |
| 8 | | | | | | 2 | | 7 |
| | | 4 | | | 2 | | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 7 | 8 | 6 | 9 | 5 | 1 |
| 7 | 6 | 1 | 9 | 5 | 2 | 4 | 3 | 8 |
| 8 | 9 | 5 | 4 | 1 | 3 | 6 | 2 | 7 |
| 9 | 4 | 2 | 3 | 7 | 1 | 8 | 6 | 5 |
| 1 | 8 | 3 | 2 | 6 | 5 | 7 | 4 | 9 |
| 5 | 7 | 6 | 8 | 9 | 4 | 3 | 1 | 2 |
| 2 | 3 | 9 | 5 | 4 | 8 | 1 | 7 | 6 |
| 4 | 1 | 7 | 6 | 2 | 9 | 5 | 8 | 3 |
| 6 | 5 | 8 | 1 | 7 | 2 | 2 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்ப வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
12.10.1927



மறைவு
10.03.2013

## திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்

எமது உடல், உயிர் தங்கியிருக்க இறைவன் எமக்கு கொடுத்த தூய்மையான வாடகை வீடு. இதை என்றைக்கேனும் ஒரு நாள் காலி செய்யவேண்டும். இறைவனிடம் அதைத் திருப்பிக் கொடுக்கும் போது தூய்மையானதாகக் கொடுக்கவேண்டும்.

"பாபா"

ஓர் இலட்சிய மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக, பூட்டியாக, உறவினராக, சினேகிதியாக வாழ்ந்த ஆயிரம் பிறை கண்ட **திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்** அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.
021 222 5442

(34835) (45.6.7)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## காசநோய் விழிப்புணர்வு செயலமர்வு

தென்மராட்சி, மார்ச் 25

உலக காசநோய் வாரத்தையொட்டி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை வைத்திய சாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் வைத்திய சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை காலை வைத்திய சாலைக்கு கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தந்தவர்களுக்கு காசநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றது. செயலமர்வுகளை வைத்தியசாலை பொறுப் பதிகாரி நடத்தினார். (ந-9)


# சேவை நலன் பாராட்டு
## திருமதி ஜெயராணி வரதராஜா

Best Wishes

விவசாய பாடத்தில் புலமை மிகு ஆசானாய் சேவையாற்றிய எமது பாடசாலைஆசிரியை திருமதி ஜெயராணி வரதராஜா அவர்கள் இன்று (25.03.2013) அகவை அறுபதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அவர் பல்லாண்டு காலம் சீரும், சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ முத்துத்தம்பி ம.வி. திருநெல்வேலி.

(34802)(8.7.11)



# Study in MALAYSIA
## மலேசியாவில் உயர்கல்வி

மலேசிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகமை: கணிதம், ஆங்கிலம் உட்பட O/L சித்தி.

மார்ச் 27ம் திகதி பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளது

Call : 0777-767818

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte, Colombo 06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோய் பரவும் ஆபத்து நாடு முழுவதிலும்

## கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகள் நடைமுறைக்கு



கொழும்பு,மார்ச் 25
சிறுநீரக நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளன என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கேகாலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச காச நோய் எதிர்ப்புத் தின தேசிய வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:-

ஆரம்ப காலத்தில் ரஜரட்ட பகுதியில் மாத்திரம் காணப்பட்ட சிறுநீரக நோய் தற்பொழுது நாடு முழுவதும் பரவக் கூடிய நிலை காணப்படுகிறது. அதனை உடனடியாகக் கட்டுப் பாட்டுக்கு கொண்டு வரவேண்டி உள்ளது. சிறு நீரக நோயைக் கட்டுப்படுத் துவ தற்கு உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதார அமைச்சுக்கு பரிந்துரைத்துள்ள விடயங்கள் துரிதமாக நடைமுறைப் படுத்தப்படும். காச நோய் உட்பட்ட பல நோய்களை நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். சிறுநீரக நோய் நாட்டில் துரிதமாக பரவி வரு கிறது என்று சுகாதார நிபு ணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு தேவையான விடயங் களை அமைச்சரவைக்கு முன் வைத்துளேன்.

இதற்காக பல அமைச்சுக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த உப குழுவின் மூலம் பரிந்துரைக்கப்படும் திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த நாட்டின் இலவச சுகாதாரத் துறைக்காக அரசு 125 பில்லியன் ரூபா செலவிடுகிறது. புற்றுநோயாளிகளுக்கு 150 லட்சம் ரூபா வரை அரசால் செலவு செய்யப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட நோயாளியோ அல்லது வேறு எவருமே அறிந்து கொள்வதில்லை. -என்றார். (ச)

# பரீட்சை முடிவுகள் புத்தாண்டுக்கு முன்

கொழும்பு,மார்ச் 25
2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன் ஏப்ரலில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. என். என். ஜெ. புஷ்பகுமார தெரிவித்தார்.

எனினும் பெறுபேறுகள் வெளியிடப்படும் உறுதியான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பரீட்சை இடம்பெற்ற காலத்தில் ஏற்பட்ட வெள்ள இடரே பெறுபேறுகள் தாமதமாகக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

### கைதி தப்பியோட்டம்:

# இரு பொலிஸாரின் பதவி பறிபோனது

கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சந்தேகநபர் ஒருவர் தப்பிச் சென்றமை தொடர்பில் இரண்டு பொலிஸார் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். கரந்தெனிய வைத்தியசாலையில் சந்தேகநபர் சிகிச்சை பெற்று வந்தவேளை இரண்டு பொலிஸார் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டனர்.

எனினும் சந்தேகநபர் தப்பிச் சென்றமையால் அந்த நேரத்தில் கடமையிலிருந்த பொலிஸார் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் தப்பிச் சென்ற சந்தேகநபர் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)

# பெண்களுக்கு ஆபத்தா? அழையுங்கள் '1938'



கொழும்பு,மார்ச் 25
பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பதிவு செய்துகொள்ள பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகளை 1938 என்ற தொலை பேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ள முடியும்.

இவ்வாறு அறிவித்துள்ளார் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

துஷ்பிரயோகம் மற்றும் பல்வேறு விதங்களில் இம்சைக்குள்ளாக்கப்படும் பெண்கள் உடனடியாக குறித்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமக்கான சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வீடுகளில், தொழில்புரியும் இடங்களில் மற்றும் பஸ், ரயில் போன்ற போக்குவரத்துக்களில் பெண்கள் எதிர்கொள்ள நேரும் துஷ்பிரயோகங்களை இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க லாம்.

அது தொடர்பில் முறைப் பாடுகளை ஏற்கும் விசேட பொலிஸ் பிரிவு உடனடியாகச் செயற்பட்டு விசாரணைகளில் ஈடுபடும். அதன்மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சட்ட நிவாரணத்தையும் பெற்றுத் தரும். சிறுவர் துஷ் பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளுக்கென ஏற் கனவே 1929 இலக்கத்துடனான பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் [illegible] னான துஷ் பிரயோகத்தைக் கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் குற்றவாளிகளுக்குக் கடும் தண்ட னைகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று அமைச்சரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி சர்வதேசத்துக்கு விளக்கமளியுங்கள்

## மனித உரிமைகள் ஆணையாளர் சொல்கிறார்

கொழும்பு,மார்ச் 25
கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தி, அது தொடர்பில் சர்வதேச நாடுகளுக்கு விளக்க மளிக்க வேண்டும். இதுவே அமெரிக்காவின் தீர்மானத்துக்கு பதில் வழங்கும் முறையாகும்.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

அமெரிக்காவின் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று அவர் கூறினார்.

குறிப்பிட்ட தீர்மானம் இலங் கையின் செயற்பாடுகளை மாத்திரம் வலியுறுத்தியுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)




அதிபர் சேவை 2 - II கிடைத்தமையயிட்டு வாழ்த்துகின்றோம்
கனகசபை பொன்னுத்துரை
(அதிபர் 2 II, யா/சுதுமலை அ.த.க. பாடசாலை)
உம் சேவைகள் தொடர
எம் சாலை வளரும்
உம் பதவி உயர்வில் எம் நினைவு மலரும்
ஆறு பன்னிரண்டு திங்கள்
அழியாக் கல்வெட்டுக்கள்
தனி ஆளாய் ஆற்றிய சேவை
தன்னகத்தே நிலைத்து நிற்கும்
யா/சுதுமலை அ.த.க. பாடசாலை. பாடசாலைச் சமூகம்.
(34801)(6,7,11)

# இந்தியாவில் உயர்கல்வி

ENGINEERING COURSES
- Aeronautical Engineering
- Electronics and Communication
- Mechanical Engineering
- Civil Engineering
- Information Technology
- Textiles Technology
- Textile Chemistry

SCIENCE DEGREES
- Bsc Microbiology
- BSc Biotechnology
- BSc Genetics
- BSc Nursing
- BSc Computer Science
- BSc Physiotherapy
- BSc Fashion and Apparel Design

❑ Bachelor of Computer Application (BCA), ❑ Business Management (BBM), ❑ Business Administration (BBA), ❑ Hotel Management (BHM), ❑ BA Journalism, ❑ Textiles and Fashion Designing, ❑ B.Com, ❑ BSc Maths,

ANNA ENGINEERING UNIVERSITY, BANGALORE UNIVERSITY, PERIYAR UNIVERSITY affiliated Colleges

* இந்தியாவில் சேலம், பெங்களூர் இல் உள்ள சிறந்த கல்லூரிகளில் அனுமதி.
* Engineering Courses 4 வருடம், மற்றும் Degreeகள் 3 வருடங்கள்.
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்கின்றனர்.
* Degree ஐ பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் UK, CANADA, USA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு குடும்ப சகிதம் Permenant Residental Visa பெறுவதற்கான வாய்ப்புண்டு.

மார்ச் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

MBBS / MD
UKRAINE (யுக்கிரேன்) EUROPE
* LUGANSK STATE MEDICAL UNIVERSITY - UKRAINE
* Sri Lanka Medical Council இனால் அங்கிகரிக்கப்பட்டது.
* 6 வருட பாடநெறி. * GCE A/L Bio-2C + 1S தேவை
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 30க்கும்மேற்பட்ட யாழ்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்கின்றனர்.

(34804)

Call: 0777 - 767 818
Scholars Information Centre, No. 01, Veverset Place, Colombo 06



இடமாற்றமும் புதுக்கடைத் திறப்பு விழாவும்
# ஸ்ரீ முருகன் ஜீவலறி
புதிய முகவரி: இல. 80/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இல. 68, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் (நகைக்கடை)
இன்று முதல் இல. 80/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(மாநகர சபையால் அமைக்கப்பட்ட புதுக்கட்டடத்தொகுதி லிங்கம் கூல்பாருக்கு முன்பாக) எனும் முகவரியில் புதுப் பொலிவுடன் இயங்குகின்றது.
அத்துடன் இன்று (25.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி முதல் 12 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது கடை புதிதாக திறக்கப்படவுள்ளது என்பதை எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகிறோம்.
021 222 5965,
077 8759 401.
(34783) (45.6.7)
உரிமையாளர்
த. மணிவண்ணன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாற்றத்துக்கான மையத்தின் ஏற்பாட்டில் நவாலி முருகானந்தா மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு விழிப்புணர்வு நாடகங்களும் பாடல்களும் நடைபெற்றதோடு போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பெண்கள் சமாசத் தலைவி திருமதி பரிசில்களை வழங்கினார். (ஒ-13)

## சொர்க்கத்துக்கு வழி

போரில் பெருவெற்றி பெற்று நாடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு பேரரசின் தளபதி வழியில் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த ஒரு துறவியிடம், "சுவாமி, சொர்க்கத்துக்கு வழி எது? நரகத்துக்கு வழி எது?" என்று கேட்டான். துறவி, "முட்டாளே! என் தவத்தை ஏன் கலைத்தாய்?" என்று கேட்க, வாளை ஓங்கினான் தளபதி. "நரகத்துக்கு வழி இதுதான்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் துறவி. கோபம் தணிந்த தளபதி, வாளை உறைக்குள் போட்டான். உடனே துறவி சொன்னார் "இதுதான் சொர்க்கத்துக்கான வழி". இந்த பேருண்மையை அதாவது அகிம்சையின், அமைதியின் வாழ்வை தனது வாழ்வில் வாழ்ந்து சொர்க்கத்துக்கான வழியை காட்டவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். இறைவனுடைய அன்பு இயேசுவிலே நமக்கு வெளிப்படுத்தப்பட்டது. இயேசுவும் தனது உயிரைக் கொடுக்கிற அளவுக்கு நம்மை அன்பு செய்தார். ஆனால் இயேசுவுக்கு மிகக் கொடிய குற்றவாளிக்கு கொடுக்கும் தண்டனையாகிய சிலுவையை சுமக்க வைத்து சிலுவையிலேயே கொன்றார்கள் யூதத் தலைவர்களும், உரோமை வீரர்களும்.

ஏன் இவர்கள் இயேசுவைக் கொன்றார்கள் என்று பார்க்கும்போது, யூதர்களின் பார்வையில் கடவுள் மட்டுமே செய்யக் கூடிய காரியங்கள் இரண்டு. முதலாவது "உயிர் அளிப்பது- இறந்தோர் உயிர் பெறச் செய்வது" போன்றவை உயிரளிக்கும் பணிகள். இரண்டாவது "தீர்ப்பு அளிப்பது- பாவங்களை மன்னிப்பது". எல்லாவற்றையும் முழுமையாக சரியாக அறிந்தவர் கடவுள் மட்டுமே. உள்ளத்தின் எண்ணங்களையும் அறிபவரே அவர் மட்டுமே சரியான தீர்ப்பு வழங்கும் ஆற்றல் உடையவர். அவரே பாவங்களை மன்னிக்கும் தகுதி உடையவர்.




இந்த இரண்டு செயல்களையும் மகனாகிய இயேசுவும் செய்ய வேண்டும் என இறை தந்தை திருவுளம் கொண்டார். தந்தையோடு இயேசுவுக்கு இருந்த உறவு மிக நிறைவானது. இயேசு தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

அவர் இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தார். எடுத்துக்காட்டாக லாசர் (யோவா 11:44), தொழுகைக் கூடத் தலைவரின் மகள் (லூக் 8:55) நயீன் ஊர் கைம் பெண்ணின் மகன் (லூக் 7:15). இன்னும் அவர் பாவிகளை மன்னித்தார். நானும் தந்தையும் ஒன்றாயிருக்கிறோம் (யோவா 10:30) என்று கூறி தனக்கும் இறை தந்தைக்கும் உள்ள உறவை எண்பிக்கிறார்.

இவ்வாறு இயேசு இறைவனுக்குரிய செயல்களை செய்தபோது யூதர்கள் அவர் மீது விசுவாசம் கொள்ளாமல் அவரை எதிர்த்தார்கள். அப்போதே கொல்ல முயற்சித்தார்கள், முடியவில்லை. இறுதியாக, யூதத் தலைவர்கள், பரிசேயர் எல்லோரும் மக்களைத் தூண்டி, பொய்ச் சாட்சியங்களை வைத்து இயேசுவை பாடுகளுக்கு கையளித்து சிலுவை மரணத்துக்கு ஆளாக்குகின்றனர். ஆனால் இயேசுவோ தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி பேயின் சூழ்ச்சிகள் எல்லாவற்றையும் முறியடித்து தமது உயிர்ப்பின் வழியாக வெற்றி காண்கிறார். நாம் இயேசுவில் நமது விசுவாசத்தை அறிக்கையிடுவோம், ஆழப்படுத்துவோம். வாழ்விலே வெற்றி காண்போம்.

அருட்பணி அ.ம.ஸ்ரீபன், அருள் ஆசிரமம், யாழ்ப்பாணம்.

## தங்கச்சங்கலி அறுத்த சந்தேகநபர்கள் கைது

வலி வடக்கு, மார்ச் 25

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய இளம் பெண்ணின் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அண்மையில் அறுக்கப்பபட்டது. இது தொடர்பாக நான்கு பேர் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராயைச் சேர்ந்தவரான பார்த்திபன் சிவசோதி என்பவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பபட்டவர்கள் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்களாவர். பொலிசார் இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளனர். (ந-86)

### இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில்

## யாழ்.நகரில் திரைப்பட விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் ராஜா திரை அரங்கில் திரைப்படவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு மூன்றாம் பிறை திரைப்படத்துடன் ஆரம்பமானது.

நிகழ்வின் முதல்நாள் இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத் திரைப்பட விழா தொடர்ந்து 27 ஆம் திகதி வரை பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 5.30 வரை நடைபெறவுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை மௌன ராகம் திரைப்படமும் இன்று காடு திரைப்படமும் ஒளிபரப்பாக இருந்தன. எனினும் தொழில்நுட்ப கோளாறு காரணமாக அந்தத் திரைப்படம் ஒளிபரப்பப்படமாட்டாது. அதற்குப் பதிலாக மௌனராகம் திரைப்படமே ஒளிபரப்பாகும்.

நாளை செவ்வாய்க்கிழமை நண்பா நண்பா திரைப்படமும் புதன்கிழமை அஞ்சலி திரைப்படமும் காட்சிப்படுத்தப்படும் என்று யாழ். இந்திய துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது. (ந-13-14 )

## வீட்டை உடைத்து திருடர்கள் கைவரிசை

கரவெட்டி மூத்த விநாயகர் வீதியில் அமைந்துள்ள வீட்டை உடைத்துப் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் மூன்று லட்சத்தி இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி மற்றும் இருபதாயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர். இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சோந்த சபாரத்தினம் கணேசமூர்த்தி என்பவர் குறிப்பிட்ட திருட்டு சம்பந்தமாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பான புலன் விசாரணையை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை குறிப்பிட்ட திருட்டுடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிசார் தெரிவித்துள்ளார்கள். ( ந-86)


**காணி விற்பனைக்கு**

யாழ். வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

(34538)(5-6-7) தொடர்பு: 077 711 7258

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை அதிபர்

ஆறுமுகம் தங்கவேலு (J.P)

அவர்கள் கடந்த 01.03.2013 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிவான் உயர் திரு செ.லெனின்குமார் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பதவியுயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.





ஆசிரியர் குழாம்

யா/கைதடி நுணாவில் அ.த.க.பா.

[34840][5.6.7]

021 567 1111 advt@uthayan.com

**கோக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்**

**மணவாளக் கோலத்திருவிழா**

காலம்- 26.03.2013 செவ்வாய்க்கிழமை

மு.ப 8.30 மணி முதல்


அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் எழுந்தருளி உள், வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். அடியவர்கள் அனைவரும் கலந்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

★ மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

**பரிபாலன சபையினர், கொக்குவில்.** (6,7,11)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்**

தோற்றம் 01 * 07 * 1940


மறைவு 23 * 02 * 2013

அமரர்

**மயில்வாகனம் புத்திரசிகாமணி**

அன்னாரின் பிரிவால் நாம் துயரடைந்திருக்கும் போது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (25.03.2013) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை மத்தி, மானிப்பாய்.

குடும்பத்தினர்

(34842)(8,6,7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாக்களிக்காத நாடுகளுக்கு தகுந்த பதில் தரப்படும்

## வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு



**இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட பின்பற்ற வேண்டிய முறைமைகள் தொடர்பில் குறித்த யோசனையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது**

கொழும்பு,மார்ச் 25

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கத்தைய நாடுகள் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் உத்தியோக பூர்வமாக பதிலளிக்கப்படும் என்று வெளி விவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதேவேளை, வாக்களிப்பில் ஈடுபடாத ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துரையாடப்படும் என்று அமைச்சின் பொது தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ரொட்னி பெரேரா தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு நடைமுறைப்படுத்த தவறும் பட்சத்தில் சர்வதேச ரீதியான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஐக்கிய அமெரிக்க ராஜாங்க திணைக்கள பேச்சாளர் விக்டோரியா நூலன்ட் தெரிவித்திருந்தார்.

அமெரிக்கா, மனித உரிமைகள் சபையில் முன் வைத்த தீர்மானம் மூலம் தெளிவான பிரதிபலன் கிடைக்கப் பெற்றுள்ளதாக அமெரிக்க ராஜாங்க செயலர் ஜோன் கெரியும் குறிப்பிட்டிருந்தார்.


இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட பின்பற்ற வேண்டிய முறைமைகள் தொடர்பில் குறித்த யோசனையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அமெரிக்க தீர்மானம் மூலம் இலங்கையில் நிரந்த ஜனநாயகம் ஒன்றை எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிச்சல் சிசேன் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்துக்கள் தொடர்பிலும் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் குறித்தும் பதிலளிக்கப்படும்.

சர்வதேச அழுத்தங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த நாடுகளுடன் கலந்துரையாடப்படும். -என் றார். (ச)

## திருமலை பத்திரகாளிக்கு இன்று தேர்



திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.

தேர்த்திருவிழா பூசைகள் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, காலை 8 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார். பங்குனி உத்தர நாளான நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். அதிகாலை 5 மணிக்கு அம்பாள் சமுத்திரக் கரைக்கு எழுந்தருளி சூரியோதயத்தில் தீர்த்தோற்சவம் நிகழும். அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு மூலஸ்தான பூசையைத் தொடர்ந்து, திருஊஞ்சல் நடைபெற்று கொடி இறக்கம் இடம்பெறும். அம்பாள் பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார்.

நாளை மறுதினம் 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 5மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

(சிறப்பு மலர் 12 ஆம், 13ஆம் பக்கங்களில்)

# எட்டாவது தேசத்துக்கு மகுடம் குருணாகலில்

அம்பாறை,மார்ச் 25

2014 ஆம் ஆண்டு நடை பெறவுள்ள 8ஆவது தேசத்துக்கு மகுடம் தேசிய கண் காட்சி குருணாகல், புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

ஏழாவது தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி அம்பாறையில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவி னால் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கில் அபிவிருத்தி வேலைகள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றன.

தேசத்துக்கு மகுடம் மூலம் கிழக்கு மாகாணம் நீங்கள் எதிர்பாராத வகையில் அபிவி ருத்தி காணவுள்ளது. அதனையெல்லாம் மக்கள் அனு பவிக்க வேண்டும். பொய் பிரசாரங்களை ஒரு நாளும் நம்ப வேண் டாம். நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, பேதம் இன்றி ஒன்றாக வாழ வேண்டும்.-என்றார். (ச)

தற்போது யாழ் நகரில்...




- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் தாமோதரம்பிள்ளை



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் , தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமாகிய திருமதி சிவபாக்கியம் தாமோதரம்பிள்ளை நேற்று(24.03.2013)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், அருளம்மா, காலஞ்சென்ற சோமசுந்தரம், சேதுராசா(ஜேர்மனி), அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான தம்பிராசா,செல்வராசா, கமலேஸ்வரி(கிளி) மற்றும் மகேஸ்வரி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவ ராசா (ஜேர்மனி), தேவராசா(ஜேர்மனி), ஜெயராணி(கனடா), காலஞ்சென்ற வர்களான தேவராணி, தனராஜா மற்றும் மதிராணி, தீபராஜா(கண்ணன், கருமாரி மோட்டோர்ஸ்), மகிந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், நந்தினி(ஜேர்மனி), புஸ்பா(ஜேர்மனி), உதயகுமார், வசந்தகுமார்(கச்சேரி), ஜாமினி ஆகியோரின் பாசமிகு மாமியும், தினேஸ், தனுஷா, நதுஷா(ஜேர்மனி), சர்மிளா, சர் மிளன் (கனடா), கேசவர்ணன், பானுஜன், யதுகுலன், மிதுலன், நசாணி ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2013) திங்கட்கிழமை பி.ப.3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திரு நெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு. (34848)

0776043877, 0755514158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மானிப்பாய் சந்தி, அல்வாய் : 021 226 3206. 'நெல்லியடி வொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519. ஜோதி புக் 'சென்டர்' - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585. 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917. 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# ஜெனிவா தீர்மானம் சீஸன் - 2

வணக்கம் அன்பு நெஞ்சங்களே!

இது உங்களின் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 'ஜெனிவாப்பிரேரணை சீஸன் - 2'!

இந்த நிகழ்ச்சியின் சீஸன் - 1க்கு நீங்கள் வழங்கிய அமோக ஆதரவால், இப்போது சீஸன் - 2 இன் பரபரப்பான இறுதிச்சுற்றில் சந்திக்கிறோம்.

சீஸன் - 1 இல் கலந்து சிறப்பித்த இலங்கையே சீஸன் - 2 இலும் கலக்கியிருந்தது. என்னதான் மற்றைய நாடுகள் நார், நாராகக் கிழித்த போதும், எதுவுமே நடக்காதது போன்று இலங்கை வெளிப்படுத்திய 'ரியாக்ஷன்' அனைவரையும் கவர்ந்திருந்தது. எவ்வளவு நாளுக்குத்தான் நிகழ்ச்சியை 'சுவிங்கம்' மாதிரி இழுத்துக் கொண்டிருப்பது? அதனால் இறுதிச் சுற்றுக்கு வந்துவிட்டோம்.

கடந்த முறை போலவே சீஸன் - 2 இலும் கனதியான, காரமான, உறைப்பான விடயங்கள் ஆரம்பச்சுற்றுகளில் அலசி, அடித்து, துவைத்து, காயப்போடப்பட்டிருந்தன. ஆனாலும் போகப்போக அதன் உப்பு, சப்பு, காரம் என்பனவற்றை எவ்வளவு குறைக்க முடியுமோ அந்தளவுக்கு குறைத்தே இறுதிச்சுற்றுக்குள் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நிகழ்ச்சியின் பிரதான பங்குபற்றுநரான இலங்கைக்கும், முக்கிய பார்வையாளரான இந்தியாவுக்கும் ஏற்கனவே 'அல்சர்' என்னும் நோய் இருப்பதாலேயே இப்படி காரத்தைக் குறைக்க வேண்டிய நிலை.

காரத்தைக் குறைத்ததால் அதற்குப்பதிலாக இனிப்பைச் சேர்த்திருக்கலாமே? என்று நிறைய நேயர்கள் தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும் எம்மை நச்சரிக்கவும் தவறவில்லை. ஆனால் நிகழ்ச்சியில் பங்குபற்றுபவர்களுக்கு நீரிழிவு நோய் வந்துவிடக்கூடாதே என்னும் நல்லெண்ண, முன்னெச்சரிக்கை காரணமாக இனிப்பையும் கொட்டித்தனமாகத் தவிர்த்துவிட்டோம்.

சரி, இனி நிகழ்ச்சியின் இறுதிக் கட்டத்துக்கு வருவோம்.

இந்த நிகழ்ச்சியில் யார் வெல்லப்போவது, தீர்மானத்தின் கதி என்ன? என்று நேயர்களுக்கு முன்னரே தெரிந்திருக்கும். ஆனாலும் திடீர் திருப்பமாக, ஆரம்பத்தில் "காரமே வேண்டாம்" என்று எம்மிடம் 'நைஸாகச்' சொல்லிவிட்டு, கமராவுக்கு முன்னால் அப்பாவியாக இருந்த இந்தியா, "கட்டாயம் தீர்மானம் காரமாகத்தான் இருக்க வேண்டும்" என்று இந்த இறுதிச்சுற்றில் அடித்த குத்துக்கரண சாகசம், பலரையும் ஈர்த்திருந்தது.

இருந்தபோதும், மாற்றம் செய்ய வேண்டிய கால அவகாசம் முடிந்த பின்னரே, இந்தக் குத்துக்கரண விளையாட்டு நடந்ததால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே நேயர்கள் எஸ்.எம்.எஸ் மூலம் அளித்த வாக்குகள் மூலமும், எமது நடுவர்களின் புள்ளிகளின் மூலமும் தீர்மானிக்கப்பட்ட முடிவு என்ன?

அதனை அறிவதற்கு உங்களைப் போலவே, எமக்கும் ஆவல்தான். அதற்கு முன்னர் ஒரு சிறிய விளம்பர இடைவேளை.

[பின்னணி இசையோடு, விளம்பரங்களின் அணிவகுப்பு. சிலநிமிட பேய்க்காட்டுதலின் பின் மீண்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகிறது]

'வெல்கம் ரூ' ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 'ஜெனிவா பிரேரணை சீஸன் 2 '.

இதோ! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த முடிவு.

[சில நிமிடங்கள் அமைதி. திடீரென அரங்கின் மேற்புறத்தே இருந்து பூமாரி பொழிய, அறிவிப்பாளர் முடிவை வாசிக்கிறார்]

உப்புச் சப்பற்ற, இனிப்பு உறைப்பற்ற, வெறும் பச்சைத் தண்ணீர் தீர்மானம் தான் சரியானது என்பதே எங்களின் இறுதி முடிவு.

மீண்டும் 'ஜெனிவாப் பிரேரணை சீஸன் - 3'' இல் சந்திக்கும் வரை அன்பு வணக்கங்களோடு விடைபெறுவது உங்கள் அமெரிக்கா.

[நிகழ்வில் பங்குபற்றிய தொழிநுட்பக் கலைஞர்களின் பெயர்கள் நிகழ்ச்சி முடிவடைந்ததற்கு அறிகுறியாக திரையில் தோன்றுகின்றன. இதன்போது அதில் பங்குபற்றிய ஒவ்வொருவரும் மற்றையவர்களை கட்டித்தழுவுகின்றனர். இலங்கையும், இந்தியாவும், அமெரிக்காவும் இறுக்கமாக ஒன்றையொன்று அரவணைத்து விருந்து மண்டபத்தை நோக்கி செல்கின்றன]

நிகழ்ச்சி முடிந்திருந்தது.

''ஜெனிவாவிலே தீர்மானம் கொண்டுவந்தாச்சு. உதோனையாவது எங்களுக்கு விடிவு வருகுதோ எண்டு பாப்பம்.'' என்று ஏக்கத்துடன் எதுவுமே அறியாத அப்பாவி மக்கள் காத்திருக்கவே செய்கிறார்கள்.

# இலங்கையைக் காப்பாற்ற முயன்று தடுமாறி நிற்கிறது இந்திய அரசு

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையில் இருந்து
■ கோகுலன்

ஜெனிவாவில் கடந்தவாரம் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது அதன் கடுமையான மற்றும் கசப்பான சொற்றொடர்கள் யாவும் மாற்றங்கள் என்ற பெயரில் சொக்கலேட் பூசப்பட்டு வழங்கப்பட்டிருந்தது என்று சில வெளிநாட்டு ராஜதந்திரிகள் வர்ணித்துள்ளார்கள். இதுவும் கூட உலக வல்லரசுநாடான அமெரிக்காவும், பிராந்திய வல்லரசான இந்தியாவும் திரை மறைவில் மேற்கொண்ட ராஜதந்திர நடவடிக்கைகளின் பிரதிபலனாகவே உருவானது. இந்தியாவைப் பொறுத்தவரை சில பகுதிகளை தீர்மானத்திலிருந்து அகற்ற வேண்டியது அதன் சொந்த நலனுக்காகவும் அவசியமாக இருந்துள்ளது.

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதாகக் கருதப்படக்கூடிய அந்த மாதிரியான சொற்றொடர்கள் தீர்மானத்தில் இடம்பெறுவதானது ஒரு காலத்தில் அவை தங்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டுவிடலாம் என்ற அச்சம் இந்தியாவுக்கு இருந்துள்ளது. இந்த நிலையில் இருந்து கிடைத்துள்ள நன்மையானது இலங்கைக்குப் பயன்பட்டுள்ளது.

இவ்விதம் கடுமையான தீர்மான வாசகமானது இந்திய முயற்சியால் நீர்த்துப்போக செய்யப்பட்டதை தமிழ் நாடு தி.மு.க. தலைவர் கடுமையாக எதிர்த்ததுடன், அதனையே அடிப்படையாக வைத்து தமது கட்சி மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வழங்கி வந்த ஆதரவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தார். மத்தியில் மன்மோகன் சிங்கின் முற்போக்கு கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப்பெற்றுக்கொண்டதுடன் அதில் அங்கம் வகித்த அமைச்சர்கள் உட்பட 26 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வெளியேற்றிக் கொண்டார்.

மத்திய அமைச்சர்கள் ஏ.கே.அந்தோனி (பாதுகாப்பு), பி.சிதம்பரம் (நிதி), குலாம் நபி அஸாத் (சுகாதாரம்) ஆகிய முக்கிய மூன்று அமைச்சர்களும் சென்னைக்கு வந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டதின் பின்னரும் கலைஞர் கருணாநிதி தமது முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டார். தீர்மானத்தை இந்திய அரசு நீர்த்துப்போக செய்துவிட்டதாகவும் இலங்கையில் நடைபெற்றுள்ள இனக்கொலை தொடர்பான விசாரணை தேவை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியதுடன் தனது மனதை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார்.

இந்த செயற்பாட்டின் மூலம் கருணாநிதி தமிழ்நாட்டில் தனது அரசியல் எதிரியான ஜெயராம் ஜெயலலிதாவையும் பின்னடையச் செய்துவிட்டார் என்பது மட்டுமல்ல உலகின் மிகப்பெரிய ஜனநாயக அரசான இந்திய மத்திய அரசையும் தள்ளாடும்படி செய்துவிட்டார்.

இந்தியாவின் நிலைக்கு நேர்மாறாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹீனா ரப்பானிகார் இலங்கைக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து ஜெனிவாவில் செயற்பட்டுள்ளார் என்பது அறிவுறுத்தலின்பேரில் இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகளின் கூட்டமொன்றுக்கு ஜெனிவாவிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் ஸாமிர் அக்ரம் ஏற்பாடு செய்திருந்தார். இந்த ஏற்பாட்டின்படி இரண்டு தடவைகள் இந்த நாடுகளின் ராஜதந்திரிகள் கூடிப் பேசினார்கள். அதன் பயனாக இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பைச் சேர்ந்த குவைத், மௌரித்தானியா, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டுகள் ஆகிய நாடுகள் பாகிஸ்தானுடன் சேர்ந்து தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. அந்த அமைப்பின் இன்னொரு நாடான பூர்கினா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அமைப்பிலுள்ள லிபியா, சியராலியோன் ஆகிய இரண்டு நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தன.

இந்த ஏழு இஸ்லாமிய நாடுகளும் ஆதரிக்காமல் போயிருந்தால் இலங்கைக்கு ஆதரவான வாக்குகள் ஆறாகவே இருந்திருக்கும். இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா என்ற பௌத்த அமைப்பு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க ராஜதந்திரிகள் பிரசாரம் செய்திருந்த நிலையில் அதுபற்றி குறிப்பிடுவதாகத் தீர்மானத்தில் சமயம் மற்றும் நம்பிக்கைகள் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுகின்றமை என ஒரு வரி சேர்க்கப்பட்டிருந்தும் இஸ்லாமிய நாடுகளில் சில தீர்மானத்தை எதிர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### பாடங்களைப் படித்துக்கொள்ள வேண்டிய தேவை

ஜெனிவாவுக்கு இலங்கை சார்பில் மாநாட்டில் கலந்துகொள்ள கடைசி நேரத்தில் அனுப்பப்பட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் ஜெனிவாவில் பயன்படுத்துவதற்கென திட்டமிட்ட திட்டம் எதனையும் அவர் கொண்டு சென்றிருக்கவில்லை. கடந்த வருடம் 50 பிரதிநிதிகளுக்கு மேல் அனுப்பப்பட்டிருந்த நிலையில் திடீரென்று ராஜதந்திர போராட்டம் ஒன்றை நடத்த அங்கே அனுப்பப்பட்ட சமரசிங்க அங்குள்ள இலங்கைத் தூதுவர் காரியவசத்துடன் இணைந்து நிலைமையை சமாளிக்க வேண்டியிருந்தது. ஜெனிவா மாநாட்டை யடுத்து இலங்கை ஏராளமான பாடங்களை இப்போது படித்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் வெளியுறவு அமைச்சு பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. அது செயற்பட்ட மாதிரியே காணப்படவில்லை.

அமெரிக்க தீர்மானம் நீர்த்துப் போக செய்யப்பட்டதாக பலர் கூறினார்கள். இன்னும் சிலர் மென்மையாக்கப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டார்கள். இன்னும் சிலர் அதன் குரல் தளர்த்தப்பட்டுவிட்டது என்றார்கள். உண்மையில் தீர்மானம் ஆரம்பத்தில் இருந்த அதன் இறுக்கமான நிலையில் இருந்து தணிக்கப்பட்டது என்பது சரிதான். ஆனால் இப்படியான விடயங்களில் ராஜதந்திர நடைமுறை தாரதம்மியம் என்னவென்றால் முதலில் மிக உச்ச நிலையில் ஒன்றை ஆரம்பித்து பின்னர் பலவகையிலும் ஆலோசனைகள் கலந்து அதன் இறுக்கத்தைக் குறைத்துக் கொள்வதாகும்.

ஆனால் இந்த விடயத்தில் இறுக்கம் குறைக்கப்பட்டது இந்தியாவின் தேவையைப் பொறுத்தே. இருந்த போதிலும் தீர்மானம் அதன் முக்கிய அம்சங்களை இழந்துவிடவில்லை. முன்னைய தீர்மானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ள இறுதித் தீர்மானத்தில் சில சேர்க்கப்பட்டும், சில நீக்கப்பட்டும் அதன் மொழி நடையில்தான் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

முன்னைய வரைபுகளில் 2007 ஜூன் 18 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நினைவுறுத்தப்படுகின்றன. இவை மனித உரிமை சபை நிறுவனங்களை உருவாக்குவது தொடர்பானவை. இப்பொழுது அதில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு பகுதி 2007 ஜூன் 18 ஆம் திகதிய 5/2 தீர்மானத்தை நினைவு கூறுகின்றது. இது மனித உரிமைகள் சபையின் சிறப்பு ஆணை பெற்றுள்ள அதிகாரிகளின் நடத்தைகள் தொடர்பானது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் காரணமாக இலங்கைக்கு வருகை தர விரும்பும் சிறப்பு ஆணை பெற்ற அதிகாரிகளுக்கு இது பொருந்துவதாகும்.

முழு மக்கள் தொகையினரும் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவிப்பதை உறுதிப்படுத்துவது அதன் கடமை என்று வரும் பகுதியில் இலங்கை (சிறிலங்கா) என்றிருப்பது "ஒவ்வொரு நாடும்" என்று திருத்தப்பட்டுள்ளது.

ஒரு புதிய சேர்ப்பு வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை 2013 செப்ரெம்பரில் நடத்துவதாக அறிவித்திருப்பதை வரவேற்பதாக தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகும். உள்கட்டமைப்புகளை மீள் அமைப்புச் செய்வது தொடர்பாக வரவேற்று அங்கீகரிக்கும் பந்தியில் புதிய பகுதி ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்கள், சிவில் சமூகம் மற்றும் சிறுபான்மையோரின் பிரதிநிதிகளும் இந்தப் பணிகளில் இணைத்துக் கொள்ளப்படுவதன் அவசியம் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தி.மு.கழகம் இலங்கையில் நடந்துள்ள இனப்படுகொலைகள் தொடர்பாக புலனாய்வு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை தீர்மானத்தில் இடம்பெறவேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்துள்ளது. இங்கு போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் இதுவரை எந்த ஒரு நாடோ, மனித உரிமைக் குழுவோ முன்வைக்காத கோரிக்கையாகும் இது. சாத்தியமில்லாத இந்தக் கோரிக்கையை முன் வைத்ததன் மூலம் தி.மு.கழகம் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலகுவதற்கு ஏற்கனவே அது தீர்மானித்திருந்துள்ளமை புலனாகின்றது.

இந்திய பிரதிநிதி அவசரமாக நாடு திரும்பி மீண்டும் அமெரிக்க பிரதிநிதிகளுடன் ஆலோசனைகள் நடத்தினார் என்றாலும் தி.மு.க.வை திருப்திப்படுத்தும் விதத்தில் தீர்மானத்தில் திருத்தம் எதனையும் செய்ய முடியவில்லை.

இப்பொழுது இந்திய நாடாளுமன்றத்தில் இறுக்கமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான காங்கிரஸ் முயற்சிகளும் வெற்றியளிக்கும் நிலையில் இல்லை. அரசு தனது உள் விவகாரத்தை தீர்த்துக் கொள்வதற்கு நாடாளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று சில கட்சிகள் தெரிவித்துள்ளன. ஒரு நாட்டின் மீது குற்றஞ்சாட்டி நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதை பாரதிய ஜனதாக் கட்சி ஆதரிக்காது என்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில், சரசாலைப் பகுதிகளில்

## 150 இற்கும் மேற்பட்ட மக்கள் நீரிழிவு பரிசோதனையில் பயன்

தென்மராட்சி, மார்ச் 25

மட்டுவில், சரசாலை ஆகிய பிரதேச மக்களுக்கான இலவச நீரிழிவு மருத்துவ பரிசோதனை முகாம் கடந்த சனிக்கிழமை மட்டுவில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

நீரிழிவு மருத்துவ பரிசோதனை முகாமில் 150 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தி.ஸ்ரீகரன், வைத்திய அதிகாரி ஆர்.ரிஷோத்குமார் ஆகியோர் மக்களுக்கான சிகிச்சைகளை மேற்கொண்டதுடன் நீரிழிவு தொடர்பான கருத்துரைகளையும் வழங்கினர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

பரிசோதனைகளின்போது புதிதாக மூன்று பேர் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அதேநேரம் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தும் வைத்தியசாலை கிளினிக்குகளுக்கு செல்லாதவர்களை இனங்கண்டு தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## மிளகாய்ப் பயிர்ச் செய்கை அனலைதீவில் பெரும் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 25

அனலைதீவுப் பகுதியில் மிளகாய்ச் செய்கை பெரும் பயனைத் தந்துள்ளதாக வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தீவுப் பகுதியில் இருந்து நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கிலோ பச்சை மிளகாய் எடுத்துச் செல்லப்படுகின்றது. அதிலும் கூடுதலாக பச்சை மிளகாய் அனலைதீவில் இருந்து கொண்டு செல்லப்படுவதுடன் இவை தென்பகுதியில் தம்புள்ள சந்தைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

அதேநேரம் குடாநாட்டுச் சந்தைகளிலும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது என விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார். (ந-7)

### ஸ்ரீ புவனேஸ்வரி கீதம் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 25

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவை முன்னிட்டு 'புவனேஸ்வரி கீதம்' எனும் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 8 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு அம்பாள் தேரேறி வீதி வலம்வருவார். (ந-13)

## மஹிந்தோதயத் திட்டத்தில் கைப்பணி வகுப்பறைகள்

கொழும்பு, மார்ச் 25

மஹிந்தோதய விசேட பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகளில் கைப்பணி வகுப்பறைகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு லயனல் வெண்ட், மண்டபத்தில் இடம்பெற்ற ''விசித்மா'' கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்விலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். தேசிய கைப்பணிச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் முதற்கட்டமாக ஹோமகம ராஜபக்ஷ வித்தியாலயத்தில் களிமட்பாண்டக் கைத்தொழில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## யாழ்.பஸ் நிலையத்தில் மலசலகூடம் மிக மோசம்

### பயன்படுத்த முடியாது பெண்கள் அவதி

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.நகர் மத்திய பஸ் நிலையத்தில் மலசலகூடம் பாதுகாப்பற்றதாகவும், சுகாதார சீர்கேட்டுடனும் காணப்படுவதால் பயணிகள் தமது இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மலசல கூடத்தை பிற மாவட்டங்களில் இருந்து வருகை தரும் பயணிகள் உட்பட உள்ளூர் பயணிகளும் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் மலசலகூடம் பாதுகாப்பற்றதாக, கதவுகள் மூடமுடியாத நிலையில் காணப்படுவதுடன், சுகாதாரம் அற்ற முறையில் காணப்படுகிறது.

இதனால் மலசலகூடத்தைப் பயன்படுத்தும் பெண்கள் பாதுகாப்பு இல்லாததால் மலசலகூடத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன் பல்வேறு உபாதைகளையும் சந்தித்து வருகின்றனர்.

**மலசலகூடத்தைப் பயன்படுத்தும் பெண்கள் பாதுகாப்பு இல்லாததால் மலசலகூடத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன் பல்வேறு உபாதைகளையும் சந்தித்து வருகின்றனர்.**

அத்துடன் மலசலகூடத்தில் இருந்து துர்நாற்றம் அதிகம் வீசுவதால் பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகள் துர்நாற்றமான காற்றைச் சுவாசிக்க நேரிட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையால் குறித்த மலசலகூடம் சுகாதமாரமான முறையில் பேணப்படுவதில்லை எனப் பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ந-14)

## யாழ்.ஆஸ்பத்திரி வைரவருக்கு ரூபா 10 இலட்சம் கிடைத்தது

### இந்து கலாசாரத் திணைக்களம் வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 25


இந்து கலாசாரத் திணைக்களம் யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள வைரவர் ஆலய தேவைக்கு என ரூபா 10 இலட்சம் பணம் வழங்கி உள்ளதென வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையிலுள்ள வைரவர் ஆலயம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. வைத்தியசாலைப் பணியாளர்களிடமிருந்து மட்டுமன்றி வைத்தியசாலைக்கு வெளியே நலன்விரும்பிகளிடமிருந்தும் பணம்பெற்று புனரமைப்புச் செய்யப்பட்டது.

எனினும் புனரமைப்புக்கான செலவைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. இந்தநிலையில் இந்து கலாசார திணைக்களம் 10 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது- என்றார். (ந-4)

# பெயரகராதி தொகுத்துப் புகழ் ஈட்டிய தமிழறிஞர் சதாவதானி கதிரைவேற்பிள்ளை

**மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 106 ஆவது குருபூசை தினம் [25.03.2013] இன்றாகும். அதனையொட்டி இந்தப் பத்தி பிரசுரமாகிறது.**



அ.துரைசிங்கம்

தமிழ் நாட்டில் சைவமும் தமிழும் வளர்த்துப் புகழீட்டியவருமான மேலைப் புலோலி சதாவதானம் கதிரைவேற்பிள்ளையின் பெருமை சொல்லுந்தரத்தன்று. ஆறுமுகநாவலருக்குப் பின்னர் தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் அரும்பணியாற்றியவர்களில் சதாவதானியும் முக்கிய பங்கினை வகித்தார். 1871 ஆம் ஆண்டில் அவர் மேலைப் புலோலியிலே நாகப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் குழந்தையாக அவதரித்தார். தமது ஆரம்பக்கல்வியை அயலில் இருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றதுடன் சிறுவயதிலேயே படிப்பில் மகாவிவேகியாகவும், தளராத விருப்புக் கொண்டவராகவும் விளங்கினார். பின்னர் தான், கற்ற பாடசாலையிலே ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் தான், தாம் கற்றவை கைமண்ணளவு கூட இல்லையே என்ற ஏக்கமும் மேலும் பல நூல்களை கற்றுத் தெளிய வேண்டுமென்ற தளராத விருப்பினாலும் தனது இருபத்தி இரண்டாவது வயதில் தமிழ் நாட்டுக்குச் சென்றார்.

அக்காலத்திலே தான் தமிழ் நாட்டிலே தி.க. கனகசுந்தரம் பிள்ளை குன்றின் மேல் இட்ட சுடர் போல ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தார். அவரிடம் தமிழ் கற்க ஆரம்பித்து நாளடைவில் தொல்காப்பிய சங்க இலக்கியம் முதலான அருங்கலை நூல்களை வேறும் பல வித்துவான்களிடம் பாடங்கேட்டு தமிழ் மொழி விற்பன்னரானார். அத்துடன் வடமொழியையுங்கற்று அதிலே ஆழ்ந்த புலமையெய்தினார்.

1897 ஆம் ஆண்டு முதலாக ஆசிரியர்வேலையினை ஏற்று முதலில் வேப்பேரி உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் சென். தோம் உயர்நிலைப் பள்ளியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அவரது கற்பித்தல் முறை மாணவரை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் தமிழ்ப் பெரியார் எனச் சைவத் தமிழ் உலகம் போற்றும் திரு.வி.க என்னும் கலியாணசுந்தர முதலியாரும், அவர் உடன்பிறந்த உலகநாத முதலியாரும் பிறரும் பிள்ளையவர்களின் மதிப்புக்குரிய மாணவ சிரோமணிகளாயினர். "முதன் முதல் எனக்குக் கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியூர் நா. கதிரைவேற்பிள்ளை. அவர் தம் பெரும்பொழுது சமயவாதங்களிலும், கண்டனங்கள் வரைவதிலுஞ் செலவாயிற்று. குறிப்பிட்ட நேரத்தில் மாணாக்கர் அவரிடத்தில் தமிழ் பயிலுதல் இயல்வதில்லை. ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் அவர் பாடஞ் சொல்வார். எந்த இடத்திலுஞ் சொல்வார். அவரது வாதப் பேச்சுக்களிலுந் தமிழ் மணங் கமழும், கலைமகள் நடம் புரிவாள். மாணாக்கர் ஐயப்பாடுகள் பல நீங்கும் என வி.க., தமது ஆசிரியர் குறித்துப் புகழ்ந்துரைத்துள்ளார்.

பிள்ளையவர்கள் தமது ஓய்வு நேரங்களில் அரிய சமயப் பிரசங்கங்கள் செய்து வந்தார். சிவக்ஷேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு முதலாய நூல்கள் அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன. இவற்றை விடப் பழனித் தலபுராணம், திருவருணைக் கலம்பகம், சிவராத்திரி புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தியுரையெழுதினார். இவர் அதிவீரராம பாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்ம புராணத்துக்கும் அரியதோருரை எழுதியுள்ளார். புலவர்க்கு ஒளடதமெனப் போற்றப்படும் நைடதத்துக்கு ஓர் ஆராய்ச்சியுரையெழுதிய பிள்ளையவர்களின் புலமையைப் பாராட்டாதவர்கள் இல்லை என்றே கூறலாம். அது வரை உரையெழுதுவதிலும், கட்டுரை எழுதுவதிலும், புராணப் பிரசங்கங்கள் செய்வதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் தலைசிறந்து விளங்கிய பெரியார் 1907 ஆம் ஆண்டிற் சதாவதானமுஞ் செய்து சதாவதானம் கதிரைவேற்பிள்ளையெனப் பெயர் பெற்றார். அவரது பணிகளில் மிக முக்கியம் வாய்ந்தது அகராதிப் பணியே, அவர் உருவாக்கிய பெயரகராதி பல பதிப்புக்கள் வெளிவந்தன. காஞ்சி நாகலிங்க முதலியாரவர்கள் அவ்வகராதியைப் பதிப்பித்தபோது, முனிசீப்.பே.எம். நல்லசாமிப்பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய முகவுரையிற் கதிரைவேற்பிள்ளையின் பெருமை கூறப்பட்டுள்ளது.

"மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளையவர்கள் பதிப்பித்த அகராதியே இற்றைவரை வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது. அவர் நிரம்பிய புலமையும் புத்திக் கூர்மையும் அபூர்வஞானமும் படைத்தவர். அவரைப் போன்ற விவேகிகளை இக்காலத்திற் காண்பதரிது. அவர் கல்வி கற்பித்தலிலும், பிரசங்கஞ் செய்வதிலும் நூல்களை எழுதி அச்சிற் பதிப்பதிலும் இணையற்றவர்"

இவ்வாறு தமிழ்மொழிக்கும், சைவத்திற்கும் அரும்பெரும் பணிகள் ஆற்றிய பெருமனார் 1907 ஆம் வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி இறைபதமெய்தினார்.

புலோலி மேற்கு கிராமத்தில் பெருமகனாரின் திருநாமத்தினைத் தாங்கிய இரண்டு நிறுவனங்கள் சிறந்த முறையில் சேவையாற்றுவது அக்கிராம மக்களின் பெருமைக்குரிய விடயமாகும். 1948ல் ஆரம்பிக்கப்பட்டு 1996ல் வெள்ளிவிழாக் கொண்டாடிய கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் சமூக, கல்வி மேம்பாட்டு செயற்பாடுகளிலும், 1987ல் ஆரம்பிக்கப்பட்டதும் சென்ற வருடம் வெள்ளிவிழாக் கொண்டாடியதுமான சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் கடனுதவி, கல்வி மற்றும் வாழ்வாதார செயற்பாடுகளிலும் சிறப்பான சேவைகளை ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதே. சனசமூக நிலையம் ஆற்றும் பணிகளில் கல்விப் பணி மிகவும் பாராட்டத்தக்கது. வடமராட்சி ரீதியில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும், பெருமகனாரின் குருபூசைத்தினப் போட்டியில் தமிழ்ப் பேச்சு, மனனம், பண்ணிசை ஆகிய விடயங்களில் (பதினொரு பிரிவுகள்) வருடந்தோறும் ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு மாணவர்கள் பங்கு பற்றிப் பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் தடை அறிவிப்பு

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை செவ்வாய்க்கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, உடுப்பிடி, சங்கரத்தை, அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு. பொலிஸ் நிலையப் பகுதி, பளை, விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில், உசன், வரணி, கொடிகாமம், மீசாலை, அல்லாரை ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் புதன் கிழமை மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ந)

## குடும்பஸ்தர் சாவு

இரவு மாரடைப்பு ஏற்பட்ட போதிலும் காலை வரை காத்திருந்து வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. சரசாலை தெற்கைச் சேர்ந்த வீரகத்தி கிருஷ்ணசாமி (வயது 50) என்பவரே சாவடைந்தவராவார்.

லொறி உரிமையாளரான இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று நேற்று முன்தினம் மாலை வீடு திரும்பியிருந்தார். இவருக்கு அன்று நள்ளிரவே வேளையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ந-9)





செலான் வங்கியின் இருபத்தைந்து ஆண்டு பூர்த்தி இன்று திங்கட்கிழமையாகும். அதனை முன்னிட்டு வங்கியின் பொது முகாமையாளர் கபில ஆரியரத்ன உட்பட அதிகாரிகள் ஆலயங்களில் விசேட பூசைகளிலும் பல சமூகநல உதவி வழங்கும் நிகழ்வுகளிலும் நேற்றுப் பங்கு கொண்டனர்.

கைதடி சிறுவர் இல்லத்தில் குழந்தைகளுக்குத் தேவையான தொட்டில் மற்றும் பாவனைப்பொருட்கள் வழங்கும் நிகழ்வின் போது, பொது முகாமையாளர் இல்லக் குழந்தை ஒன்றையும் ஏனைய பார்வையாளர் சகிதம் தூக்கி வைத்திருப்பதையும், கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபரிடம் நூல்களை அன்பளிப்புச் செய்வதையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சந்தடியற்ற நில ஆக்கிரமிப்பு

### சிவசக்தி ஆனந்தன் கண்டனம்

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் சந்தடியற்ற நில ஆக்கிரமிப்பு முல்லைத்தீவு மாவட்டத்திலே இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

கடந்த வாரம் முல்லைத்தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளைக் கேட்டறிந்த இவர் சிலாவத்தைக் கிராமத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது கொக்கிளாய், நாயாறு ஆகிய பகுதிகளில் தாம் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தமது நிலங்கள் அபகரிக்கப்படுவதாகவும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.


## இன்று தேர்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெறும். (ந-7)

## மரண அறிவித்தல்

### செல்வராஜா யோகேஸ்வரன்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ், வாசல் லாண்ட் ஒபேர் வில்லை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா யோகேஸ்வரன் கடந்த (15.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கோதநாயகி தம்பதியரின் மருமகனும், தாருகாவின் அன்புக் கணவரும், ராதாதேவன், சசிகலா, வாசுதேவன், சந்தி ரகலா(உப அதிபர், யா/கரம்பொன் சண்முகநாத ம.வி), காலஞ்சென்ற வாமதேவன், மேகலா(டென்மார்க்), ஸ்ரீகலா(லண்டன்) ஆகியோரின் சகோதரனும், விஜயலட்சுமி, முருகவேள், புவனேஸ்வரி, தியாகராஜா(Rajah Tradersh, Jaffna), பரமேஸ்வரன்(டென்மார்க்), யோகராஜா(லண்டன்), ஜெகதாம்பாள், ராசாகுமார், காலஞ்சென்ற இந்திரகுமார், கருணைகுமார், ஜனித்தாம்பாள்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உருத்திரகுமாரன், சந்திரதாஸ்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும், கிருஷாந்தன்(பிரான்ஸ்), றஜிதா, நிஷாத்தன், தேனுஜன், யதுஷா, சுகேஷா(டென்மார்க்), ராபின்(டென்மார்க்), சுகேதா(டென்மார்க்), பவித்திரா(லண்டன்), பவினாஸ்(லண்டன்), பவனாஸ்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், தயாளினி, யகணா, யனியா, லட்சிகா, லதுஷன், லதுஷா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.03.2013) திங்கட்கிழமை Switzerland (Kapelle friedh of ruti hohestrasse 4104 Oberwil) இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


30/29, வைரவர் கோயில் வீதி,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
021 222 0629

தகவல்:
K. தியாகராஜா
(மைத்துனர்).

(c/5560(6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சுப்பிரமணியம்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சுப்பிரமணியம் நேற்று 24.03.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, நாகமுத்து, கண்ணாத்தை, ஐயாத்துரை, இராசையா, இராசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெய்வேந்திரம், நவரட்ணம் (காந்தி),சந்திராதேவி, முத்துராசா, சற்குணராசா, இராசமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் தியாகராசா, சிறீதரன், மனோரஞ்சிதம், மகேஸ்வரி, சாந்தா, காலஞ்சென்ற ஜெயா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சர்மிளா மற்றும் பிரகாஷ், தனீஷ், ஜெனீவா, வினோ, லவன், ரிஷி, துஷி, சிவதி, கனுஷாந், ஜெயந்தினி, சுகந்தினி, கோபால், சுரேஸ், நாதன், சசி, ரேகா, அர்ச்சனா, பகீரதன், வகீரதன், அமலன், ஐஸ்வர்யா, சுலட்சிகா, நிருபா, தனுசா, உஷா, உமேஸ், நளினி, உமா, தயாநிதி, உதயராஜ், றமா, சுதீஷ், சசி, குணன், ருகு, பிருந்தா, சுரேன், மஜித், ஜேரோம், சிந்து, வசி, ஜெயா, கிருபா, லதா, மீரா, றஞ்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜக்ஷன், ரம்மியா, லக்ஷனா, டனு, கனு, சுபிட்சனா, கிசாந், சௌத்திரியா, மகினன், அபிஷ்ணவி, மதுஷன், சதுஷன், ருஷாந்தன், நிஜானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.03.2013 திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

168/1, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
சு.நவரட்ணம் (காந்தி)
(உரிமையாளர் காந்தி ஸ்ரோர்ஸ்)
0776176982

(34845) (23- ..16)


## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட குறைந்த கட்டணங்கள்.
- மருந்துப்பொருட்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளிற்கு வந்து பொருட்களை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் விசேட சேவை.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.



மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பேரின்பநாதன்



கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பேரின்பநாதன் ஜேர்மனியில் நேற்று 24.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நவமணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் ராகுலனின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும் கந்தையா மற்றும் காலஞ்சென்ற சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மாதகல் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகமணி - இளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேந்திரன், பத்மநாதன், கனகசபாபதி, நேசலட்சுமி, காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் மகேந்திரன், வாதலட்சுமி, காலஞ்சென்ற ராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 26.03.2013 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வராஜா நிலி
இல.18, உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (7318) (23-14-16)

தகவல்:
க.நா.சபாரத்தினம் (மைத்துனர்)
செ.ஆன்ஸ் வீதி, மானிப்பாய்.

## முத்துராசா முகுந்தன்



சாவகச்சேரி, சங்கத்தானை சாரதா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா முகுந்தன் கடந்த (22.03.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் முத்துராசா -கலாவதி தம்பதியரின் அன்பு மகனும், ஜீவா, ஜெயந்தன், சரிதா, வசந்தன், ஜெனோவா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (C/8861)6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## நீக்கிலஸ் ராசவதி

*(தங்கராசா அந்தோனியாப்பிள்ளை)*



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் ராசவதி நேற்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (25.03.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நீ.பிரபாகரன் (மகன்) (மேலதிக மாவட்ட பதிவாளர், காணிப் பதிவகம், பருத்தித்துறை),
நீ.மனோகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்)

கடற்கரை வீதி,
நாவாந்துறை. (34850)

# மரண அறிவித்தல்

## வீரகத்தி கிருஷ்ணசாமி



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கிருஷ்ணசாமி நேற்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்தவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கந்தசாமி, குருசாமி ஆகியோரின் சகோதரனும் கிருஷ்ணபிரசாத், கிருஷ்ணமேனன், கிருஷாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2013) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரசாத் (மகன்)
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (34846) (2-16)

குடும்பத்தினர்.

# கிழக்கில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு,மார்ச் 25

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் திட்டங்களை அமைத்து கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்காக சுற்றுலாத்துறையில் நிபுணத்துவம் உள்ளோர் ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

பாசிக்குடா அமதீஸ் சுற்றுலா விடுதியில் யூ.எஸ்.எயிட் மற்றும் யூ.எச்.பி நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த 'கிழக்கின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி' என்ற தலைப்பிலான ஆய்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மட்டக்களப்பு மாவட்டம் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் பல வரலாற்று கலாசாரப் பண்பாடுகளையும் இயற்கை அழகையும் கொண்டமைந்த பிரதேசமாகும். இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் வறுமையான மாவட்டமாக உள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. இந்நிலைமையை மாற்றுவதற்கு நாம் எல்லோரும் ஆக்க பூர்வமான செயற்றிட்டங்களை உருவாக்கி முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

சுற்றுலாத்துறையை மேலும் விருத்தி செய்வதற்கு சுற்றுலாத்துறையில் நிபுணத்துவமிக்கவர்கள் தங்களது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் கணவர்களை இழந்த பெண்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. அவர்களது வாழ்க்கைத்தரம் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு உல்லாசத்துறையின் மூலம் வருமானம் ஈட்டக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தேசத்துக்கு மகுடம் மூலம் கிடைக்கப்பெற்ற 130 மில்லியன் நிதியின் மூலம் நகர அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளோம். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சுற்றுலாத்துறைக்கு ஏற்ற வகையில் வாவியை அண்மித்த பகுதி, கடற்கரைப் பகுதி, விவசாயம், மீன்பிடி, வரலாற்றுப் பாரம்பரியம் என பல பகுதிகளாகப் பிரித்து அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கோட்டைப் பகுதியும் சுற்றுலாத்துறைக்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்யப்படவுள்ளது. அதற்கான சரியான இடத்தைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டுள்ளோம்.- என்றார். (ச)

## குண்டு மீட்பு

மட்டக்களப்பு,மார்ச் 25

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்று வரும் புனரமைப்பு பணியின்போது குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுணதீவு, புதுப்பாலம் பகுதியில் உள்ள மின்மாற்றி அருகில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த போது, அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் குறித்த குண்டை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (ச)

# கிழக்குப் பல்கலையில் யூனானி வைத்திய பீடம்



மட்டக்களப்பு,மார்ச் 25

கிழக்கு பல்கலைக்கழகத்தில் யூனானி வைத்திய பீடத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

யூனானி கற்கை நெறியை மேற்கொள்ளவுள்ள மாணவர்களின் நலன் கருதி சகல வசதிகளுடனும் கூடிய யூனானி வைத்தியசாலை ஒன்று காத்தான்குடியில் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணியை பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நேரில்சென்று பார்வையிட்டார்.

இதன்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எல்.எம்.பரீட் உட்பட பலர் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆயுள்வேத கற்கை நிறுவகத்தின் கீழ் மாத்திரமே யூனானி கற்கை நெறி செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தேர்தல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வடக்கு தேர்தலை நடத்த திட்டமிடப்படி நடத்த உள்ளதாக அவர் தெரிவித்தார். வடக்கின் சில பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை இதன் காரணமாக மக்கள் மீள்குடியேற்றமும் தாமதமாக உள்ளது. இதன் காரணமாக தேர்தல்களை நடத்துவதில் சிக்கல்கள் எழுந்தன. தற்போது பெருமளவில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இதனால் விரைவில் தேர்தல் நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டால் அந்தப் பிரதேச மக்கள் தங்களது பிரதிநிதி ஒருவரை முதலமைச்சராக்கும் சந்தர்ப்பம் கிட்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

THE ROYAL COLLEGE OF JAFFNA
கலப்பமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 424, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.
TEL 077 6751649

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
கந்தையா இலங்கேஸ்வரன் (அல்வாய்) அவர்களின்
அன்புத் தந்தை

## சித்தர் கந்தையா

(குமுழமுனை 3ஆம் வட்டாரம் முள்ளியவளை)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

யாழ். புற்றளை மகாவித்தியாலயக்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் பரமேஸ்வரன் (பரமன்)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா (அடப்பங்குளம்), சுவிஸ் ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பரமேஸ்வரன் நேற்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு வீரசிங்கம் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தில்லலையம்பலம்- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், யோகநிதியின் (சுவிஸ்) அன்புக் கணவரும், பிரசாந்த், பிரவீன், தீபன், திவ்யா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (பிரான்ஸ்), யோகநாதன் (சின்னமணி- சுவிஸ்), தேவதாஸ் (தேவா- பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதராஜன் (சந்திரன்- சுவிஸ்) மற்றும் மனோகரன் (சுவிஸ்), கருணா (சுவிஸ்), சுசிலா (தங்கம்- சுவிஸ்), ஐங்கரமூர்த்தி (மூர்த்தி- பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், கமலாதேவி (ராணி- பிரான்ஸ்), இந்திராணி (சுவிஸ்), றோசாறி (சுவிஸ்), தர்மநிதி (கிளி- சுவிஸ்), தர்மரஞ்சி (சுவிஸ்), சிவராஜா (அப்பு- சுவிஸ்), சுஜாத்தா (பிரான்ஸ்), யோகேஸ்வரி, யோகராஜா (இலங்கை), யோகேந்திரன் (கனடா), யோகநாதன் (ஜேர்மனி), யோகலிங்கம் (லண்டன்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (சுவிஸ்), செல்வகாலட்சுமி (இலங்கை), மலர் (கனடா), நாகேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் சுடுகாடு ஆலடிச்சந்தியில் அமைந்துள்ள இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33/1, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (34849) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக 400 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி இலக்கை நோக்கி விரையும் வீராங்கனைகள் (ந-7)

## இணுவில் அண்ணா கபடியில் சம்பியன்

உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கபடிப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் 42:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தை மிக இலகுவாக வெற்றி கொண்டு சம்பியனானது. (ந-288)

# நெல்லியடி ம.வி., மெதடிஸ் பெண்கள் பிரிவில் வெற்றி

கரணவாய், மார்ச் 25

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்டப் பெண்களுக்கான கபடிச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், 15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த உயர் தரப் பாடசாலை அணியும் சம்பியன்களாகின.

இப்போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியால அணியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் மோதின.

இந்த இரு அணிகளும் அரையிறுதி ஆட்டங்களில் மிகவும் பலம் வாய்ந்த அணிகளாக வடஇந்து மகளிர் கல்லூரியையும், சென்தோமஸ் கல்லூரியையும் தோற்கடித்து இறுதியாட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதனால் இரு அணி வீரர்கள் மத்தியில் சற்றுப் பதற்ற நிலை காணப்பட்டது. போட்டி ஆரம்பமாகி முதல் பாதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி பிரியவர்ணாவின் நுட்பமான ஆட்ட முறைமூலமும் அபிராமியின் மடக்கிப் பிடிக்கும்



திறன் மூலமும் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெற்றது நெல்லியடி ம.வி அணி. முதல்பாதி ஆட்டத்தில் 20:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் நெல்லியடி மத்திய மகாவித்தியலாய அணி முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகியதும் போட்டியில் விறுவிறுப்புத் தன்மை அதிகரித்தது. மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவியான சிந்துஜாவின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் அவ்வணியும் புள்ளிகளைக் குவித்த வண்ணம் இருந்தது. இதனால் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் புள்ளிகள் எகிறிய வண்ணம் இருந்தன. ஒரு கட்டத்தில் எந்த அணி வெற்றி பெறப்போகின்றது என எதிர்வு கூறமுடியாத நிலை காணப்பட்டது.

இருந்தபோதும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீராங்கனைகள் தம்மைச் சுதாகரித்துக்கொண்டு உத்வேகத்துடன் விளையாடினர். இதனால் 56:40 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகினர்.

இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தை வடஇந்து மகளிர் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

அடுத்த இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வடஇந்து மகளிர் அணியும் மோதின.

போட்டியின் ஆரம்பத்தில் இரு அணி வீராங்கனைகளும் சம பலத்தோடு மோதினர். இரு பகுதியினரும் மாறிமாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். இதனால் முதல்பாதி ஆட்டம் 28:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் சீறிப்பாய்ந்த மெதடிஸ்த கல்லூரி எதிர் அணியினரை திக்குமுக்காட வைத்து புள்ளிகளைச் சேகரித்தனர். இதனால் ஆட்ட முடிவில் 62:37 என்ற புள்ளிகளைப் பெற்றுக் கொண்டு சம்பியனாகியது மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணி.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி பெற்றுக்கொண்டது. (த-400)

## கரப்பந்தாட்டத்தில் ஐங்கரனுக்குக் கிண்ணம்



யாழ்ப்பாணம், மார்ச் 25

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சாவகச்சேரி பிரதேச ரீதியாக நடத்திய ''செற்றப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் இவ்வாண்டுக்கான வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியில் 12 கழகங்கள் பங்கு கொண்ட போதும் இறுதிச்சுற்றுக்கு ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் தெரிவாகி மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் 15;25, 28;26, 25;9, 25;14 என்ற புள்ளிகள் அடிப்படையில் மூன்று போட்டிகளில் வென்று சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-288)

## ஆவரங்கால் இராமலிங்கம் வித்தி. 2 பிரிவுகளில் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்டமட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 15 வயது, 17 வயது ஆகிய இரு பிரிவுகளிலும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணிகள் சம்பியனாகி உள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த புதன்கிழமை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின் 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் எதிரணிக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி 25:17 என்ற அடிப்படையில் சுற்றை வெற்றிகொண்டது.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக மூன்றாவது செற் ஆட்டம் இடம்பெற்றது.

**இரண்டாவது சுற்று ஆட்டத்தில் எதிரணிக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி 25:17 என்ற அடிப்படையில் சுற்றை வெற்றிகொண்டது.**

இரண்டாவது செற்களை இழந்ததால் சோர்வடையாமல் உத்வேகத்துடன் ஆவரங்கால நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று 2:1 என்ற செற் கணக்கில் சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினர்களுக்கான இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியும் கோப்பாய் மகாவித்தியாலய அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 25:19, 20:25, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்ற செற் கணக்கில் கோப்பாய் மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்து கோட்ட மட்டச் சம்பியனாகியது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி. (த-400)

# சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பெரு விளையாட்டு முடிவுகள்



**கரப்பந்து ஆண்கள்**

**15 வயதின் கீழ்**

1ஆம் இடம் -யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

2ஆம் இடம்-யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

3 ஆம் இடம்- யா/ ஆனைக்கோட்டை பாலசுப்புரமணியம் வித்தியாலயம்.

**17 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

2ஆம் இடம்-யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

3 ஆம் இடம்-யா/ ஆனைக்கோட்டை பாலசுப்புரமணியம் வித்தியாலயம்.

**19 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

2ஆம் இடம்-யா/ மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலயம்.

3 ஆம் இடம்- யா/ ஆனைக்கோட்டை பாலசுப்புரமணியம் வித்தியாலயம்.

**கரப்பந்து பெண்கள்**

**15 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

2ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம்-யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

**17 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

2ஆம் இடம்-யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

3 ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**19 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம்-யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

3 ஆம் இடம்-யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

**வலைப்பந்து**

**15 வயதின் கீழ்**

1ஆம் இடம் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம்-யா/பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க வித்தியாலயம்.

3 ஆம் இடம்-யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

**17 வயதின் கீழ்**

1ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம்-யா/பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க வித்தியாலயம்.

3 ஆம் இடம்-யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

**19 வயதின் கீழ்**

1ஆம் இடம் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்

**துடுப்பாட்டம் ஆண்கள்**

1ஆம் இடம்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

2ஆம் இடம்-யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

3 ஆம் இடம்-யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(ந-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் தென்னாபிரிக்கா வசம்

டிவில்லியர்ஸின் அபாரமான துடுப்பாட்டத்தினாலும், பந்துவீச்சாளர்களின் ஒருங்கிணைந்த திறனாலும் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து தொடரை வென்றது தென்னாபிரிக்கா.

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா இரு போட்டிகளை வென்று சமநிலையில் இருந்தன. இந்த நிலையில் தொடரில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதியும் 5 ஆவதுமான ஒரு நாள் சர்வதேசப் போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆயினும் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர்களின் மிரட்டல்களுக்கு முன்னால் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாகச் சோபிக்க முடியவில்லை. அவர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் இலக்குகளைப் பறிகொடுத்தனர். அத்துடன் மந்தகதியிலேயே ஓட்டங்களை அவர்களால் சேகரிக்க முடிந்தது. அந்த அணியின் கம்ரன் அக்மல் மட்டுமே ஓரளவுக்குத் தாக்குப் பிடித்தார்.



இந்த நிலையில் 49.1 பந்துப் பரிமாற்றங்களில் பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அந்த அணி சார்பில் கம்ரன் அக்மல் 48 ஓட்டங்களையும் யுனிஸ்கான் 29 ஓட்டங்களையும் சொயிப் மலிக் 28 ஓட்டங்களையும், யுனைற்கான் 25 ஓட்டங்களையும், அணித்தலைவர் மிஸ்பாஉல்ஹக் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் மைக்லேர்ன் 3 இலக்குகளையும், மோர்னிமோர்கல் 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன், சொற்சொபி, பீற்றர்சன், பெஹார்டியன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் வீழ்த்தினர்.

206 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்தத்தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை விரைவிலேயே இழந்தது.

டிஹொக் 3 ஓட்டங்களுடனும், அம்லா 22 ஓட்டங்களுடனும், இங்ரம் 15 ஓட்டங்களுடனும் வெளியேற தென்னாபிரிக்கா தடுமாறத் தொடங்கியது. ஆயினும் அணித் தலைவர் டிவில்லியர்ஸின் பொறுப்பான ஆட்டத்தால் அந்த அணி வெற்றிப் பாதைக்குத் திரும்பியது. 44 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது தென்ன்னாபிரிக்கா. அந்த அணி சார்பில் 95 ஓட்டங்களை ஆட்டமிழக்காது டிவில்லியர்ஸ் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் மொஹமட் இர்பான் 2 இலக்குகளையும், யுனைற்கான், ஹபீஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் 3:2 என்ற ரீதியில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரைத் தென்னாபிரிக்கா தன்வசமாக்கியது. ஆட்டநாயகனாகவும், ஆட்டத் தொடர் நாயகனாகவும் தென்னாபிரிக்க அணித் தலைவர் டிவில்லியர்ஸ் தெரிவானார். (ங)

# ஆஸி.க்கு வெள்ளையடித்தது இந்தியா




ஆஸ்திரேலியாவுக்கு வெள்ளையடித்து வரலாற்று சாதனையைப் படைத்தது இந்தியா.

ஆஸ்திரேலியாவுக்க எதிரான நான்காவது டெஸ்டில் இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்று, 81 ஆண்டுகளுக்குப் பின் முதன் முறையாக 4;0 என்று ஆஸிக்கு எதிர்ான தொடரைமுழுமையாக கைப்பற்றி சாதனையைப்படைத்தது இந்தியா.

இந்தியா சென்றுள்ள ஆஸ்திரேலியா அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இதில் முதலில் இடம் பெற்ற மூன்று டெஸ்ட்போட்டிகளையும் இந்திய அணி 3;0 என்ற அடிப்படையில் வென்று தொடரை ஏற்கனவே கைப்பற்றியிருந்தது.

டில்லியில் இடம் பெற்ற நான்காவது டெஸ்ட்போட்டியில் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா அணி 262 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.பதிலளித்தாடிய இந்திய அணி இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் 8 இலக்குகள் நிறைவில் 266 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கியதும் இந்திய அணியின் எஞ்சிய இரு இலக்குகளும் வீழ்த்தப்பட்டன.இதனால் தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணியை விட 10 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை நேற்று தொடங்கிய ஆஸ்திரேலியா அணி ஜடேஜாவின் சுழலை சமாளிக்க முடியாமல் திணறியது. முன் வரிசை ஆட்டக்காரர்கள் சொற்ப ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஒரு பக்கத்தில் இலக்குகள் இந்திய அணியின் சுழலில் சிக்கி மளமள வென சரிந்தாலும் மறுமுனையில் தனிநபராகப் போராடினார் பீற்றர் சிடில். அதிரடியான ஆட்டத்தின் மூலம் பீற்றர் சிடில் பெற்ற 50 ஓட்டங்களின் துணையுடன் ஆஸ்திரேலியா அணி 162 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக ரவீந்திர ஜடேஜா 5 இலக்குகளையும், அஸ்வின், ஓஜா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இந்தியா. மக்ஸ்வெல்லின் பந்து வீச்சில் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய்,இதனை அடுத்து களம் புகுந்த விராட்கோஹ்லி புஜாராவுடன் இணைந்து ஆஸ்திரேலியா பந்து வீச்சாளர்களை திக்குமுக்காடச் செய்து ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். எனினும் 41 ஓட்டங்களுடன் கோஹ்லி வெளியேறினார். அதனை அடுத்து களமிறங்கிய டெண்டுல்கர், றஹானே இருவரும் தலா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, புஜாராவுடன் இணைந்தார் இந்திய அணித்தலைவர் டோனி. இவர்கள் இருவரும் இணைந்து வெற்றிக்கு வேண்டிய ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் 6 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.புஜாரா ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 4-0 என்ற ரீதியில் ஆஸி. அணிக்கெதிரான டெஸ்ட் தொடரைமுழுமையாகக்கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக ஓஜாவும், தொடர் நாயகனாக ரவிச்சந்திரன் அஸ்வினும் தெரிவு செய்யப்பட்டனர். (ங-400)




# வென்றது மேற்கிந்தியத்தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

டொமினிக்காவில் இடம் பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி பிரெண்டன் டெய்லரின் 33 ஓட்டங்கள், வியூசி சிபன்டாவின் 32 ஓட்டங்கள், சியன் வில்லியம்ஸின் 31 ஓட்டங்களின் துணையோடு சகல இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.



பந்த வீச்சில மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷேன் ஷிலிங்போர்ட் 5 இலக்குகளையும், மார்லன் சாமுவேல்ஸ் 3 இலக்குகளையும், ஷெனொன் கப்றியல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து தனது முதலாவத இன்னிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஷிவ்நரின் சந்தர்போலின் 108 ஓட்டங்கள், [illegible] ஓட்டங்கள், [illegible] ராம்டினின் 86 ஓட்டங்களின் துணையோடு 8 இலக்குகளை இழந்து 381 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்தியது.

206 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 42.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று ஓர் இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணிசார்பாக வியூசி சிபன்டா 35 ஓட்டங்களையும், மல்கொம் வோலர், கிறேம் கிறீமர் இருவரும் தலா 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷேன் ஷிலிங்பேர்ட் 5 இலக்குகளையும், தார்லன் சாமுவேல்ஸ் 3 இலக்குகளையும், டெரன் சமி, டினோ பெஸ்ட் இருவரம் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.இப் போட்டியின் வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.இப் போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஷேன் ஷிலிங்போட் தெரிவானார். (400)




206 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 42.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று ஓர் இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் தோல்வியடைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPOKEN ENGLISH

**யாருக்காக ?**

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

**3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-30.03.2013**

1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00

**குறிப்பு:** எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாத முடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

**SAAMSON** 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL .0776214567


# திருடப்பட்ட விக்கிரகங்கள் மீட்பு

தாவடி தெற்கு, கொக்குவில் அம்பலவாணர் கந்தசாமி கோவிலில் அண்மையில் திருடப்பட்ட முருகன், வள்ளி மற்றும் தெய்வானை ஆகிய விக்கிரங்கள் நேற்று மீட்கப்பட்டன. கொழும்பில் விற்பனை செய்யும் நோக்கோடு ஆனைக்கோட்டையில் உள்ள வீடு ஒன்றில் விறகுக் குவியலுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே, இந்தச் சிலைகள சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பத்துடன் தொடர்புடைய இருவர் சந்தேகத்தின் பேரில்கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தலைமையிலான குழுவினரே திருடப்பட்ட சிலைகளை மீட்டுள்ளனர். மேற்படி சம்பம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ங-86-4)


**பாதிக்கப்பட்ட அரச ஊழியர்/ சாதாரண பொதுமக்களுக்கான நட்டஈடு**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர்களின் அதிதீவிர முயற்சியின் காரணமாக 31.03.2013 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட அரச ஊழியர்/பாதிக்கப்பட்ட சமயத்தில் சேவையிலிருந்து பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஆகியோர் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை 49/89 இற்கு அமையவும் சாதாரண பொதுமக்கள் ஆள்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்பு செய்யும் அதிகாரசபையின் சுற்றறிக்கைக்கமையவும் தங்களின் வீடு மற்றும் சொத்துக்களுக்கு விண்ணப்பிப்பதற்கும் காணி, வீடு தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றவர்கள் தங்களின் உடைமைகளுக்கு மட்டும் விண்ணப்பிப்பதற்குமான படிவங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் உரிய ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
றொபர்சன் கொம்பியூட்டர் சென்ரர்,
(கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக)
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
TP 0775712883, 0215682951 (26257)(8.6.7)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)





உங்கள் தராதரத்தை உயர்த்திக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம் !

ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA

ASAP Accelerated Skills Acquisition Program Empowering Youth Through Career Skills

**துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்**

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

**சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY

e - Citizen — Just 3,500/= ONLY

மேலதிக தகவல்களுக்கு :
**GATEWAY**
LANGUAGE & ICT CENTRE KILINOCHCHI
Karadippoku Junction, Kilinochchi,
Phone : 021 228 0065 / 66 (க/7314)



**முக்கிய அறிவித்தல்**
**V.S.P நல்லெண்ணெய்**

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில் V.S.P என்று போலியான லேபிள்களை பயன்படுத்தி நல்லெண்ணெயாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.P ஐ இலகுவாக இனங்கண்டு கொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ் 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனும் உரிமையாளர் பொ.பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது. ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/7107)(8.6.7)

உரிமையாளர்:பொ.பாஸ்கரன்
0212229165
0212224135



**சிங்கள வகுப்பு**

- அரச ஊழியர்களுக்கான தரம்1, தரம்2, தரம்3 பரீட்சைகளுக்கான சிங்கள வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
- இன்றே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
- பிரிவு 1 → 3.30, பிரிவு 2 → 4.30 } திங்கள், வெள்ளி

ஆசிரியர்: A.K. மூர்த்தி
(யாழ்.பிரபல ஆசிரியர்)
★தொ.பே.-0212221417
Sky Computers (Pvt) Ltd
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (ச/7315)(8.6.7)



**CIMA-UK கணக்கியல்-சான்றிதழ் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்**

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிக்காலம் 3 மாதங்கள். 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும். உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவு மார்ச்31ம் திகதி ஆரம்பமாகின்றது. இக் கற்கைநெறியை பயில்வதற்கான 16000 ரூபா வரையிலான புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப் புலமைப்பரிசில் மூலம் CIMA கல்வியை பயில விரும்பும் மாணவர்கள் இல 324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்திற்கு மார்ச்28ம்திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.



# உலகத்தரம் வாய்ந்த பிரித்தானிய தகமைகள்

முதல் இரண்டு வருடங்களை யாழ்ப்பாணத்திலும் இறுதியாண்டுக் கல்வியை கொழும்பில் அல்லது இங்கிலாந்து,நியுசிலாந்து,அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான ஓர் சந்தர்ப்பம்.

**புதிய பிரிவு ஆரம்பம்**
**31.03.2013**
**10.00 மணி**

- BSc (Hons) in Civil Engineering
- BSc (Hons) in Software Engineering
- BSc (Hons) in Business IT
- BSc (Hons) in Quantity Surveying
- BA (Hons) in Business & Mgt Studies
- BBA(Hons) in Business Management

3rd Year — BSc/BBA/BEng (Computing / Business Management / Quantity Surveying /Civil Engineering)
2nd Year — Higher National Diploma Edexcel ,UK
1st Year — Higher National Certificate Edexcel ,UK
GCE A/L / London A/L — Foundation Programme
After O/L



மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளில் ஒன்றில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு புத்தம் புதிய Toshiba i3 Laptop ஒன்று பரிசாக வழங்கப்படும்.

**உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்**

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900



மேற்குறிப்பிட்ட சர்வதேச அங்கீகாரம் உள்ள பட்டக் கல்விகளில் முதல் இரண்டு வருடங்களை IIS City Campus இலும் இறுதியாண்டு பட்டக்கல்வியை கொழும்பில் எமது சகோதர நிறுவனமான ICBT Campus இல் அல்லது இங்கிலாந்து, நியுசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான வாய்ப்புக்களை இக் கற்கை நெறிகள் ஏற்படுத்தி தருகின்றன.

ICBT CAMPUS edexcel

**IIS CITY CAMPUS**
No. 200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iis.edu.lk E-mail :info@iis.edu.lk
(சி/7160)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.